திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

5 - AUG 1961
MADRAS

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

மாலை 3] பிலவ, ஆடி
ஆகஸ்டு 1961 [மணி 11

சென்னை அரசாங்க அறநிலையப் பாதுகாப்புத் துறை வெளியீடு.

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

நம்மாழ்வார் பாசுரம்

—:o:—

வாழ்ந்தார்கள் வாழ்ந்தது மாமழைமொக்குகளின் மாய்ந்துமாய்ந்து
ஆழ்ந்தாரென் றல்லால் அன்றுமுதல் இன்று அறுதியா
வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர் என்பதில்லை நிற்குறில்
ஆழ்ந்தார் கடற்பள்ளி அண்ணல் அடியவர் ஆமினே

[வாழ்ந்திருந்தவர்கள் வாழ்ந்தது பெருமழையில் தோன்றுகிற குமிழிகள்போல அழிந்து அழிந்து நரகத்தில் அழுந்தினார்கள் என்பதே; அது அல்லாமல் அன்றுதொட்டு இன்றுவரை ஒரே தன்மையாக வாழ்ந்தே இருந்தார்கள் என்பது இல்லை; ஆதலால், நிலையான பேற்றை யடையவேண்டின் ஆழ்ந்த கடலில் துயில் கொள்ளும் இறைவனுக்கு அடியவர் ஆகுங்கள்.]

பொருளடக்கம்

1. திருமுறைகண்ட வரலாறு
2. பிரான்மலை
3. சிவஞான போதம்
4. மலைநாட்டுத் திருப்பதியநுபவம்
5. அப்பர் உவமைகள்
6. நவதிருப்பதி அநுபவம்
7. திருவாலங்காட்டுக் கல்வெட்டு வரலாறு
8. திருநாவுக்கரசு நாயனார்
9. நால்வர் நான்மணி மாலை
10. கன்னியாகுமரி மாவட்ட அறநிலையச் சட்டம்

சென்னை-நுங்கம்பாக்கம் புதிய அஞ்சல் அலுவலகம் (New Delivery Post Office) துவக்கப்பட்டு அதற்கு அஞ்சல் பிரிவு எண் 34 எனக் குறிக்கப்பட்டு இருப்பதால் சென்னை இந்துசமய அறநிலைய (ஆட்சி)த் துறை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர், அணிகலன் ஆய்வு அலுவலர் (Verification Officer) அலுவலகங்களுக்கு அனுப்பும் கடிதங்களில் **"சென்னை-34"** *என்று குறிப்பிடவும். அஞ்சல் பெட்டி எண் 3304.*

ஆசிரியர்.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 3] பிலவ ஆடி - ஆகஸ்டு 1961 [மணி 11

திருமுறைகண்ட வரலாறு

'முறை' என்ற சொல்லுக்கு 'நூல்' என்று பொருள். 'திருமுறை' என்றசொற்றொடர் 'சிறந்த நூல்' என்றுபொருள் படும். தமிழில் சிறந்த நூல்கள் மிகப் பலவாயினும்,இத்தொடரால் குறிக்கப்படுவன சைவ சமயத்தின் அடிப்படை நூல்களாகக் கருதப்பட்டு பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பட்டனவையே ஆகும். இப்பன்னிரு திருமுறைகளுள்ளும் தலையாயவை 'தேவாரம் அடங்கன் முறை' என்ற பாகுபாட்டிலடங்கிய ஒன்று முதல் ஏழு திருமுறையாகிய மூவர் தேவாரமும், எட்டாந் திருமுறையாகிய மணிவாசகனார்ருளிய திருவாசகமும் திருக்கோவையாருமாகும்.

தேவாரத்தைப் பொறுத்தமட்டில், திருஞானசம்பந்தர் பாடியவை 16,000, திருநாவுக்கரையர் பாடியவை 49,000, சுந்தரர் பாடியவை 38,000 பதிகங்கள். ஆனால் இவற்றில் முறையே 384,313 100 பதிகங்கள் மட்டிலும் இப்போது கிடைத்துள்ளன. இப்பதிகங்களும் கிடைக்கப்பெற்ற வரலாறு மிக அற்புதம்.

கி.பி. 14ம் நூற்றுண்டின் முற்பகுதியில் திருவாரூரில் செங்கோலோச்சிய மன் இராசராசன் என்ற அபயகுலசேகரன். இவனிடம் வரும் சில அடியார்கள் மூவர் தேவாரப் பாக்களினின்றும் ஓரிரண்டு பதிகங்களை மட்டிலும் உரைசெய்யலானார்கள். அவர்கட்குத் தெரிந்தவை இப் பதிகங்கள் மட்டுமே. இவற்றைக் கேட்டு சோழன் "கையிரண்டும் உச்சிமேல் ஏறக் கண்ணீர் கரைந்தோட மெய்ம்முழுதும் புளகம் போர்ப்ப, ஐயன்மலர்ப் பதமுளத்தே கொண்டு" போற்றினன். எஞ்சியுள்ள பதிகங்களை அடையுமாறு எங்ஙனம் என மனங்கவன்ருன்.

அக்காலத்தே திருநாரையூரில் ஆதிசைவர் குலத்திற்றேன்றி, அவ்வூரில் அமைந்துள்ள பொல்லாப் பிள்ளையாரின் அற்புதத் திருவருள் பெற்று, சைவம் வாழ மாமணியாய்த் திகழ்ந்த நம்பியாண்டார் நம்பியின் சிறப்பினைக் கேள்வியுற்று, சோழன் அப்பெருந்தகையிடம் சென்று அவரது தெய்வீகத் தன்மையை நேரில் கண்டு அதிசயமுற்றுன். மற்றும் நெடுங் காலம் அவன் சிந்தையை அரித்துக் கொண்டிருந்த நினைவு மேலெழ, அப்பெரியாரை எஞ்சியுள்ள தேவாரப் பதிகங்கள் கிடைக்கும் விதம் யாங்ஙனம் என வினவலும், அவர்காலம் தாழ்த்தாமல் பொல்லாப் பிள்ளையாரிடம் அந்நெறியினைக் கேட்டறிந்து, அரசனிடம் அறிவித்தனர்

தில்லையில் "மன்றுளாடும் கூர்ந்த இருட் கண்டர்புறக் கடையின் பாங்கர்க் கோல மலர்க் கைகள் அடையாளமாகச் சார்ந் தன" என அறிந்த அரையன் அங்ஙனமே மன்றினிடஞ் சென்று தில்லைவாழந்தணர் களிடம் விண்ணப்பிக்க, அவர்களும் "தமிழ் வைத்த மூவர் வந்தால் அறை திறக்கும்" என்றனர். வேதச் சைவநெறி தழைக்கத் திருவுளங்கொண்ட இறைவ னது அருளின் திறத்தால் சோழன் சிறிதும் திகைக்காமல், தமிழ் மூவரின் விக்கிரகங்களை அலங்கரித்து வீதியுலா செய்வித்து, "மூவர் வந்தனர், அறையைத் திறப்பிக்க" எனச் செப்பினன். மறை யோரும் வேறொன்றும் செய்ய இயலாத வராய், அவ்வறையினைத் திறக்க, அதனுள் மண்மலையே முதலில் காணப்பட்டது. இதனை நோக்கிய மன்னன் சிந்தை தளர்ந்து, கண்ணீர்வாரக் கவன்று நின் ருன். பின்னர் "வேதச் சைவநெறித் தலைவரெனும் மூவர் பாடல், வேய்ந்தன போல் மண்மூடச்செய்தே ஈண்டு வேண்டு வன வைத்தோம்" என்று விண்ணில் ஓர் ஒலி கேட்டது. இதனைச் செவியுற்ற வேந்தன் சோர்வு நீங்கி, மண்மலையை அகற்றிப்பார்க்குமளவில், மேல் கூறிய வாறு சில பதிகங்கள் மட்டில் சேதமுரு மல் எஞ்சிநின்றன. மன்னன் நெஞ்சந் தேறி, உவகைக் கடலில் ஆழ்ந்து, திருவரு ளின் கருணைத் திறத்தை வியந்த வண்ணம் நம்பியாண்டார் நம்பியை அப்பதிகங்களைத் தக்கவாறு வகுத்துத் தரும்படிவேண்ட, அவரும் முறைப்படி அவற்றை வகுத்துத் தந்தார். மற்றும் திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் எட்டாந் திரு முறையாகவும், திருவிசைப்பாமாலையை ஒன்பதாந் திருமுறையாகவும், திருமந்திரத் தைப் பத்தாந் திருமுறையாகவும், "சித்தி தரும் இறைமொழிந்த திருமுகப்பாசு ரம் முதலாம், உய்த்த பதிகங்களையும்" ஒருமுறையாக்கி, அவற்றைப் பதினோராந் திருமுறையாகவும் வகுத்தளிருனர். பிறகு திருத்தொண்டர் திருவந்தாதி இயற்றி, பன்னிரண்டாந் திருமுறையாகிய சேக் கிழார் பெரிய புராணத்திற்கும் வழி வகுத்து, சைவப் பயிர் தழைத்தற்கு வேண்டிய அனைத்தையும் செய்து முடித்த பின், "நல்லிசை யாழ்ப்பாணனர் நன் மரபின் வழிவந்த வல்லி ஒருத்தி"யிடம் சென்று அவள்வழி தேவாரப் பதிகங்க ளனைத்துக்கும் இசை அடைவும் அமைத்து அருளினர். இதுவே கொற்ற வன்குடி உமாபதி சிவாசாரியார் அறிந் துரைத்த திருமுறைகண்ட வரலாருகும்.

இத்திருமுறைகளின் தெய்வீகத் தன்மை பொல்லாப்பிள்ளையார் வாயிலாக அமைந்த அடியிற் காணும் செய்யுளால் ஒருவாறு அறியலாம்:—

"அருமையைச் சிச்சிலிபண் டருந்த தேடும் அதுபோலன்றிது என்றும் உள தாம்; உண்மைப் பரபதமும் தற்பரமும் பரனே அன்றிப் பலரில்லை என்றெழுதும் பனுவல்; பாரின் எரியினிடை வேவாது ஆற்றெதிரே யோடும் என்புக்கும் உயிர் கொடுக்கும் இடுநஞ் சாற்றும்; கரியை வளைவிக்குங் கல்மிதக்கப்பண்ணுங் கராமதலை கரையிலுறக் காற்றுங் காணே" (திருமுறைகண்ட புராணம் 17வது செய் யுள்.)

திருமுறைப் பாடல்கள் நல்ல தமிழு டையன, நல் இசையைப் பெற்றுள்ளன, மந்திரங்களின் சக்தியைப் பெற்று தெய் வீகப் பாடல்களாக அமைந்துள்ளன. இச் சிறப்புக்களனைத்தும் தமிழில் யாக்கப் பட்ட பிற நூல்களிடத்துக் காணுதல் அரிது. புறநானூறு, சிலப்பதிகாரம் போன்ற நூல்களில் நல்ல தமிழ் உண்டு. ஆனல் இசையோ தெய்வீகத்தன்மையோ அமைந்ததாகக் கூறல் இயலாது. திருக்

குறளும் அத்தகையதென்றே கொள்ளல் வேண்டும். எனவே மேல்கூறிய சிறப்புக ளனைத்தும் தம்மகத்தே பெற்று, வாழ்க்கை நெறியில் "நல்லவண்ணம் வாழ வழியமைத்துத்தந்து, பதி, பசு, பாச விலக்கணங்களை ஐயந்திரிபற அறிவித்து, இறைவன் நற்றுளினைச் சேர அன்றும், இன்றும், என்றும் உதவுவனவாகும் இத் தெய்வீகத் திருமுறைகள். இவற்றை சைவ நன்மக்களிடையே நன்கு பரவும்படி செய்தல், சிவநெறி செழித்தோங்குமாறு செய்யும் சீறிய செயல்களில் ஒன்றாகும்.

அதிராம்பட்டினம் :—அபயவரதேசுவரர் கோயிலில் 30-6-61ல் ஆரம்பிக்கப்பட்ட இலட்சார்ச்சனை 9-7-61ல் இனிது முடிவுற்றது.

சென்னை-வடபழநி :—வடபழனி ஆண்டவர் ஆலயத்தில் சென்னை வியாபாரி திரு. பி. இராமமூர்த்தி செட்டியார் அவர்களால் பெரிய அலைக்காற்று வீசும் இரண்டு மின்சார விசிறிகள் உபயமாக கோயிலுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகள் விசேட நாட்களாகிய கிருத்திகை முதலிய பெரிய உற்சவங்களில் உபயோகப்படுத்தப்பெறும்.

திருவாடானை :—ஆதிரெத்தினேசுவரர் கோயிலில் ஆடிப்பூரத் திருக்கல்யாண மகோற்சவம் 15-8-61ல் நடைபெறும்.

நாகப்பட்டினம் ; சட்டநாதசுவாமி கோயிலில் சுவாமிக்கு 16—7—61 முதல் இலட்சார்ச்சனை ஆரம்பித்து நடந்து வருகிறது.

திருமீயச்சூர் : மேகநாதசுவாமி கோயிலில் லலிதாபரமேசுவரிக்கு 2—6—61 முதல் நடந்துவந்த இலட்சார்ச்சனை 21—7—61 அன்று பூர்த்தியாயிற்று.

தென்காசி : தென்பழனியாண்டவர் கோயில் திருப்பணியும் அஷ்டபந்தன கும்பாபிஷேகமும் நடத்துவதற்குவேண்டிய வேலைகள் நடைபெற்றுவருகின்றன. வெற்றிகரமாக நடைபெறுவதற்கு பொதுமக்கள் தங்களால் இயன்ற பொருளுதவியை திரு. ஏ.ஜி. சுப்பையா செட்டியார், செயலாளர், தென்பழனி ஆண்டவர் திருப்பணிக்குழு, தென்காசி என்ற முகவரிக்கு அனுப்பித்தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

திருமுருகன்பூண்டி : முருகநாதசுவாமி கோயிலில் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் 38-ஆவது ஆண்டு குருபூஜை விழா 21—7—61ல் நடைபெற்றது.

விருத்தாசலம் : விருத்தகிரீசுவரர் கோயிலில் விருத்தாம்பிகைக்கு ஆடிப்பூர திருக்கல்யாணம் 13—8—61ல் நடைபெறும்.

சேலம்—செவ்வாய்பேட்டை : மாரியம்மன் கோயிலில் ஆடிப்பெருவிழா 25—7—61 முதல் 15—8—61 வரை நடைபெறும். இன்னிசையரங்குகளும் ஏழைகளுக்கு அன்னம் வழங்கலும் நடைபெறும்.

திருப்பூவணம் : புஷ்பவனேசுவரர் கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 28—8—61-ல் நடைபெறும்.

திருக்கொடுங்குன்றம் (பிரான்மலே)

வானிற்பொலி வெய்தும்மழை மேகங்கிழித் தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி ஐந்தும்அமர்ந்த தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான்திரு நகரே.

—திருஞானசம்பந்தர்

"கொம்பர் இல்லாக் கொடிபோல் அலமந்தனன் கோமளமே" என்பது ஆன்றோர் பாடல். ஒரு கொடிக்கு எப்படி கொழுகொம்பு ஒன்று வேண்டுமோ அதேபோல் துணையின்றிவாடும் மக்களுக்கு ஒரு பற்றுக்கோடு வேண்டுமென்பது பெறப்படுகிறது. "உரைசேரும் எண்பத்து நான்கு நூறுயிரமாம் யோனிபேதம் நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய்நின்றான்" இறைவன். அவன் படைத்த உயிர்கள் எல்லாவற்றையும் தன்னுயிர்போல் காக்கவேண்டுவது நாட்டின் தலைவனுடைய தலையாய கடமை. ஓரறிவு படைத்த மரம், செடி, கொடி முதல் ஆறறிவு படைத்த மனிதன்வரை அதில் அடங்கும். புறவிற்காகத் தன்னுடலைக் கொடுத்த சிபிச்சோழன் கதையும், கன்றையிழந்த பசுவிற்காக மைந்தனைத் தேர்க்காலிலிட்ட மனுச்சோழன் வரலாறும் நாடறிந்தவை. அதே போன்று முல்லைக்கொடிக்குப் பரிவுகாட்டினான் ஒரு குறுநில மன்னன். அவன் புகழ் பெற்ற வள்ளல்களில் தலைமையிடம் பெற்றவன். அவனே பாரி என்று போற்றப்படுபவன். ஒருநாள் தேர் ஏறிக் காட்டின் வழிச் சென்றான். தாவிப்படரக் கொழுகொம்பில்லாத முல்லைக் கொடியொன்று காற்றில் அலைந்தகாட்சி அவன் கண்ணிற்பட்டது. அவ்வளவுதான், அதற்கு வேண்டியது கொழுகொம்புதான். தன் தேரை முல்லைக்கொடிக் கருகில் நிறுத்திக் குதிரைகளை அவிழ்த்து விடச் செய்தான். கொடியைத் தேர்மேல் எடுத்துவிட்டான். அவன் மனம் மட்டற்ற மகிழ்ச்சியுற்றது. கால்நடையாக ஊருக்குத் திரும்பினான். "முல்லைக்குத் தேர் ஈந்த வள்ளல்" என்று அவன் புகழ் எங்கும் பரவியது. அவனுக்குற்ற உயிர் நண்பரான பொய்யாநாவிற் கபிலர் என்னும் புலவ பெருந்தகையார்,

பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டுஈண்டு உலகுபுரப் பதுவே

என்று பாரியை மாரிக்கு ஒப்பிட்டுப் பாடினார். "கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினுங் கொடுப்பாரிலை" என்று சுந்தரமூர்த்திகள் பாடும்போது வள்ளல்களில் பாரியின் நினைவே முன்வந்து நின்றது. "மன்புகழ் பாரி காரி என்றிசைவாது கூறி" என்பர் அருணகிரிநாதர். இத்தகைய பெரும்புகழ் பெற்ற பாரிவாழ்ந்த இடமே பறம்புமலை என்பது. இப்போது பிரான்மலை என்று வழங்கப்பெறுகிறது. தேவாரத்தில் இதன் பெயர் திருக்கொடுங்குன்றம் என்று குறிக்கப் படுகிறது. இது பாண்டிநாட்டுப் பாடல் பெற்ற பதினான்கு பதிகளில் ஒன்று. இராமநாதபுரம் மாவட்டம், திருப்புத்தூர்ப் பகுதியிலிருக்கிறது. காரைக்குடியிலிருந்து 28 கல் தொலைவிலுள்ளது. மதுரையிலிருந்து 42 கல் தூரம். மதுரையிலிருந்தும், திருப்பத்தூரிலிருந்தும் பஸ்கள் செல்லுகின்றன.

பிரான்மலை நாலா பக்கமும் வெகு தொலைவுக்கு நன்கு தெரியும். இதன் உயரம் 2450 அடி, மலையடிவாரத்திலுள்ள கோயில் தேவாரப் பாடல் பெற்றது. மலையின்மேல் வயிரவர் கோயிலும் சிவன் கோயிலும் இருக்கின்றன. (பின் அட்டைப்படம் பார்க்க). அடிவாரத்திலுள்ள கோயிலுக்கு வெளிப்புறம் முன்னால் ஒரு ஆழமான திருக்குளம் இருக்கிறது. கோயிலுக்குள்ளே நுழைந்ததும் மற்றொரு திருக்குளமும் இருக்கிறது. இறைவன் சந்நிதி கிழக்குபார்க்கவுள்ளது. அவர் திருப்பெயர்கள் கொடுங்குன்றீசர், கடோரகிரீசர், உக்கிரகிரீசர் என்பன. அம்பிகைக்குக் கிழக்கு நோக்கிய சந்நிதியுடன் தனிக்கோயில் இருக்கிறது. தேவிக்கு, குயில

மிர்தநாயகி, அமிர்தேசுவரி என்ற திருநாமங்கள் உண்டு. இத்தலத்தேவாரத்தில் "தேனிற் பொலிமொழியாள்" என்று குறிக்கின்றனர் சம்பந்தப் பெருந்தகையார். அடிவாரக் கோயிலுக்குள்ளேயே இருக்கும் முருகன் சந்நிதி மிக்க சிறப்புவாய்ந்தது. திருப்புகழ்ப் பாடல் பெற்றது. மேற்குமுகமாக வள்ளி, தெய்வயானையுடன் குமாரக்கடவுள் காட்சி கண்கவர் வனப்புடையது. இந்த சந்நிதிக்கெதிரில் யானை உருவம் இருப்பது தனிச் சிறப்புடையது.

மலைமேல் கொஞ்ச தூரம் ஏறிச்சென்று பிரகாரத்தை வலம்வரும்போது வயிரவர் கோயில் இருக்கிறது. தெற்கு நோக்கிய சந்நிதி. இந்த கோயிலிலேயே விசாலாட்சி, விசுவநாதர் சந்நிதிகள் கிழக்கு நோக்கியிருக்கின்றன.

பிரகாரத்தை வலம்வந்து மறுபடியும் படிக்கட்டுகள் வழி மேலேறிச் சென்றால் இலட்சுமி மண்டபம், ஏகாந்தமண்டபம் என்ற இரண்டைப்பார்க்கலாம். அங்கிருந்து கொண்டு நாற்புறமுமுள்ள இயற்கைக்காட்சியின் எழிலைக் கண்டுகளிக்கலாம். மண்டபங்களைக் கடந்து உட்சென்றால் மலையிற் குடைந்த கோயிலைப் பார்க்கலாம். முன்னால் உடையவர் இலிங்கமூர்த்தியும், பின்னால் பாறையில் செதுக்கப்பட்டிருக்கும் மங்கை நாயகரும், அம்பாளும் திருமணக்கோலத்துடன் காட்சிதந்தருளுகின்றனர்.

இத்தலத்திற்குச் சிறப்பாக இரண்டு மரங்கள் சொல்லப்படுகின்றன. ஒன்று பேரில்லாமரம், மங்கைநாதர் கோயிலுக்குமேல் மலைப்பாறையில் இருக்கிறது. அது இன்ன மரம் என்று தெரியவில்லை. மற்றொருதல விருட்சம் உறங்காப்புளி. அது கீழ்க்கோயிலுக்குள் இருக்கும் திருக்குளக்கரையில் இருக்கிறது.

கீழேயுள்ள திருக்குள தீர்த்தங்களேயன்றி மலையின்மேல் பல நல்ல, தெளிந்த நீர்ச்சுனைகள் இருக்கின்றன. தலபுராணத்தில் இங்கு 108 தீர்த்தங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவைகளில் முக்கியமானவை குஷ்டநிவாரண தீர்த்தம், தேனுபி என்ற மதுபுஷ்கரிணி தீர்த்தம், அக்கினி தீர்த்தம், சித்தரமிர்த தீர்த்தம், க்ஷீர தீர்த்தம், பைரவ தீர்த்தம், சித்த தீர்த்தம், இராம தீர்த்தம், ஆதித்திய தீர்த்தம் என்பன.

பிரான்மலை சங்ககாலத்திலேயே பறம்பு மலையென்ற பெயருடன் திகழ்ந்ததென்பதை மேலே கண்டோம். ஆதலின் இத்தலம் மிக்க பழமையானது. திருஞானசம்பந்தர் இத்தலத்து இறைவன்பேரில் பதினொரு பாடல்களுள்ள ஒரு பதிகம் பாடியருளியுள்ளனர். "குயிலின் இசைபாடுங்குளிர் சோலைக் கொடுங்குன்றம்," "குளிரும் புனல் பாயுங் குளிர்சோலைக் கொடுங்குன்றம்" என்று இயற்கைக் காட்சியை எழில்நலம்படப்புனைந்து காட்டுகிறார். கொடுங்குன்றத்தை "திருநகர்" "பெருநகர்" "நெடுநகர்," "பழநகர்" என்று கூறியிருப்பதால் முற்காலத்தில் அது பெரிய நகரமாக விளங்கியிருக்க வேண்டுமென்று தெரிகிறது. அருணகிரிநாதர் திருப்புகழில் மூன்று பாடல்களில் இத்தலத்தைப்பற்றிப் பாடியிருக்கின்றார். அவைகளில் கொடுங்குன்றம், கொடுங்கிரி, பிரான்மலை என்ற பெயர்களைக் குறிக்கிறார். "குனிந்திலங்குங் கொம்புங் கொங்குந்துன்று சோலைக் கொழுங் கொடுந்திண் குன்றந்தங்குந் தம்பிரானே" என்பது அவர் பாடலின் ஒரு பகுதி. இந்த க்ஷேத்திரமகாத்மியம் கிரந்தத்தில் 18 அத்தியாயங்களுடன் இருக்கிறது. அதைத் தமிழில் உரைநடையாக, K. ஆபத்துத்தாரணய்யர் என்பவர், **கடோரகிரி என்னும் பிரான்மலை ஸ்தலபுராணம்** என்ற பெயருடன் அச்சிட்டு வெளியிட்டுள்ளார். மகோதரமுனிவரும், நாகராஜனும் இங்குள்ள இறைவனை வழிபட்டுப் பேறுபெற்றனர். பிரசண்டகிரி என்றும் இப்பதிக்கு ஒரு பெயர் கூறப்படுகிறது.

மதுரையில் இருந்த மூன்றும் தமிழ்ச்சங்க காலத்திலேயே பாரியின் பறம்புமலை புகழ் பெற்று விளங்கியதாதலின் இப்பதி மிகப்பழமைவாய்ந்தது. மலைமேலுள்ள கோயில் குடைகோயிலாக இருத்தலின் பல்லவ மன்னர் காலத்திலேயே ஏற்பட்டதென்று கூறவேண்டும். மலைமேற் கோயிலில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. அவை, குலோத்துங்க சோழன் I, மாறவர்மன் சுந்தரபாண்டியன் I (கி.பி. 1216—35), ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் I (கி.பி. 1251—64), மாறவர்மன் குலசேகர பாண்டியன் I (கி.பி. 1268—1308), பராக்கிரம பாண்டியன்,

வீரபாண்டியன், விஜயநகர மன்னர்களான சாளுவநரசிம்மராயர், தேவராயர், கிருஷ்ண தேவராயர் முதலியவர்கள் காலத்தவை. கேரளசிங்க வளநாட்டிலுள்ள திருமலைநாட்டுத் திருக்கொடுங்குன்றமென்றும், விஜயநகராட்சியில் பிரான்மலைச் சீமையென்றும் குறிக்கப்படுகின்றது. திருக்கொடுங்குன்றமுடைய நாயனார், மங்கைபாகமுடைய நாயனார் என்று கல்வெட்டுக்களில் இறைவன் பெயர் குறிக்கப்படுகிறது. பசுக்கள், விளக்கெரிப்பதற்குதவ ஆடுகள், குத்து விளக்குகள், பூசைக்காகப் பொருள், நிலம், முதலியவை வழங்கப்பட்டதைக் குறிக்கின்றன.

மரவத்தொடு மணமாதவி மௌவல்லது விண்ட
குரவத்தொடு விரவும்பொழில் சூழ்தண்கொடுங்
குன்றம்
அரவத்தொடும் இளவெண்பிறை விரவும்மலர்க்
கொன்றை
நிரவச்சடை முடிமேலுடன் வைத்தான்நெடு நகரே.
—திருஞானசம்பந்தர்.

இராமேசுவரம் தேவஸ்தானம், இராமேசுவரம் ஆடித்திருக்கல்யாணத் திருவிழா :—

4-8-61—கொடியேற்றுவிழா.

9-8-61—6-ஆம் திருநாள் பஞ்சமூர்த்திகள் தங்கரிஷப வாகனத்தில் வீதியுலாக்காட்சி.

11-8-61—ஆடி அமாவாசை, கோதண்டராமர் தங்க கருட வாகனத்தில் எழுந்தருளி (தனுஷ்கோடியில், சேதுவில் தீர்த்தம் கொடுத்தல். இரவு வெள்ளிரதம் புறப்பாடு.

12-8-61—காலையில்-ஸ்ரீ அம்பாள் இரதோற்சவம்.

14-8-61—(இரவு) திருக்கல்யாணம்.

ஆணையர் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள்

23-6-61—குற்றாலம் :—குற்றாலநாதசுவாமி கோயில்—சித்திரசபைக்கு முன்னுள்ள திருக்குளத்திருப்பணியை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் துவக்கிவைத்தார்கள்.

25-6-61—நெல்லை :—சிந்தாமணி—சொக்கநாதசுவாமி கோயில் திருப்பணியை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் துவக்கிவைத்தார்கள்.

30-6-61—தஞ்சாக்கூர் :—பரஞ்சோதீசுவரர் கோயில் கும்பாபிஷேக விழாவில் அமைச்சர் கலந்துகொண்டார்கள்,

9-7-61—இராமேசுவரம் :—இராமநாதசுவாமி கோயில்—பாம்பனில் உள்ள கோயில் தோட்டத்தில் ஆணையர் அவர்கள் தென்னங்கன்றை நட்டு வைத்து மரநடு விழாவைத் துவக்கிவைத்தார்கள்.

10-7-61—இராமேசுவரம் :—இராமநாதசுவாமி கோயில் ஆலயப்பணியாளர்கள் இல்லத்திற்கு ஆணையர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

சிவஞானபோதம்

[திரு. க. வச்சிரவேல் முதலியார், B.A.,L.T.]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இரண்டாஞ் சூத்திரம்

முதற் சூத்திரத்தில், 'உலகம் முதல்வனைப் பரம ஆதாரமாக உடையதாய், அவன்றன் நினைவாற்றலால் (சத்திசங்கற்பத்தால்) தோன்றி நின்று ஒடுங்கும்' என்பது விளக்கப்பட்டது. மேலும், உயிர்கள் தன்வயம் இல்லாதவை ஆதலால், அவைசெய்யும் செயலும் முதல்வன் அவற்றின் உள்நின்று ஏவுதலால் நிகழ்வதே என்பதும், அதுபற்றி "உருத்திரர் ஆவார் ஒருவரே; இரண்டாவதாக நின்றார் அல்லர் (ஏகோர்ஹி ருத்ரோ; நத்விதீயாய தஸ்து:)" என்னும் சுருதி எழுந்தது என்பதும் இறுதியில் கூறப்பட்டன.

இவற்றைக் கேட்டு உணர்வார்க்குப் பின்வருமாறு சில வினாக்களும் நிகழும்:—

(1) உலகத்திற்கும் (உயிர்களுக்கும்) முதல்வனுக்கும் உள்ள சம்பந்தம் யாது? (2) உலகம் முதல்வனிடத்து ஒடுங்கி மீளத் தோன்றும்போது எவ்வாறு தோன்றும்? ஓரேவகையாகத் தோன்றுமா, பல்வேறு வகைப்படத் தோன்றுமா? ஏன்? (3) முதல்வனை உலக நிமித்தகாரணன் என மேலே சாதித்தபோது, அதன் முதற்காரணமாகிய மாயையும், துணைக்காரணமாகிய முதல்வன்றன் சத்தியும் இருவினையும் பொதுவாகக் குறிப்பிக்கப்பட்டன; ஆயினும் அவற்றது உண்மை அளவையானும் பொருந்துமாற்றானும் ஆராய்ந்து துணியப்படவில்லை ; அவை அவ்வாறு துணியப்படாதபோது, முதல்வனை மட்டும் நிமித்தகாரணன் எனத் துணிந்த துணிபு வலியுறாதன்றோ?—என எழுவன அவை,

இவ்வினாக்களுக்கு விடைகூறும் வகையில் எழுவது இரண்டாம் சூத்திரம்.

அஃது,

'அவையே தானே ஆய்இரு வினையின்
போக்கு வரவு புரிய ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே'

என வரும்.

மேலைச் சூத்திரத்தின் இறுதியில் 'அந்தம் ஆதி' எனக்கூறி முடித்தமையால், அங்கு அந்தம் எனக் கூறப்பட்ட முழுமுதற் கடவுள் இச் சூத்திரத்தில் எழுவாயாக எடுத்துக் கொள்ளப்படும். அங்கு விரித்துரைத்த பிரிநிலை ஏகாரத்தால் பிரிக்கப்பட்டு நின்ற உயிர்கள் இங்கு அவையே எனச் சுட்டப்பட்டன. இச் சூத்திரத்தில் வரும் ஆணை என்னும் சொல், மேலே ஆளுஞ் சத்தி எனவும், நினைவாற்றல் எனவும் குறித்து வந்த முதல்வனது சிற்சத்தியைக் குறிக்கும்.

சூத்திரத்தின் பொழிப்புரை

முதல்வன் உயிர்களேயாயும், அவற்றின் வேறாயும், அவற்றோடு உடனாயும் நின்று, தனது ஆணையால் தொழிற்படும் இருவினைகளுக்கு ஏற்றபடி (அவ்வுயிர்கள்) எப்பொழுதும் இறந்து பிறந்துவர, (தான்) தன் ஆணையினின்றும் பிரிப்பின்றி நிற்பன்—என்றபடி.

(அ) அவையே தானே ஆய் என்னுந் தொடர் அவையேயாய், தானேயாய் எனவும், அவையே தானேயாய் எனவும் இரண்டு பொருள் ஒருங்கே பொருந்தும்படி உரைக்கப்பட்டது. இஃது இரட்டுறமொழிதல் என்னும் உத்தி.

(i) அவையே ஆதல் என்றது முதல்வன் கலப்பினால் உயிர்களோடு ஒன்றாய் (ஒற்றுமைப்பட்டு) நிற்றலை. உடலின்கண் உயிர் ஒன்றாய் நிற்றல் இக்கலப்பு நிலைக்கு உவமையாகக் காட்டப்படும். உடம்பும் உயிரும் வேறு வேறு பொருளேயாம்; ஆயினும், உயிர் உடம்போடு ஒற்றுமைப்பட்டுத் தான் வேறு காணப்படாது உடம்பே உள்ளது எனக்கருதும்படி நிற்கின்றது. இதுபோல, முதல்வனும் உயிர்க்கு வேறே; ஆயினும் தான் உயிரின் வேறு காணப்படாது உயிரே உள்ளது என்று கருதும்படி அதனோடு ஒற்றுமைப்பட்டு நிற்கின்றான். இக் கருத்துப் பற்றியே மேலேகாட்டிய, சுவேதாசுவதர

மந்திரத்தின் பின்பகுதியில் "உள்ளே நிற்கின்றார்" (ப்ரத்யங் திஷ்டதி) என ஓதப்பட்டது.

காணப்படும் உலகத்தை ஐம்பூதமும், ஞாயிறும், மதியும், உயிரும் என எண்வகைப்பட்ட பொருள்களின் ஈட்டம் எனக் கருதலாம். இவ் வெண்வகைப் பொருளினும் முதல்வன் வேறே ஆயினும், இவற்றின் உள்ளே கலந்து மறைந்து நின்று இவற்றைத் தனக்கு வடிவாக உடையன். ஆதலினால் முதல்வனை அட்டமூர்த்தி என்பர் சான்றோர்; எட்டு மூர்த்தங்களை (வடிவுகளை) உடையவன் என்பது கருத்து. இருநிலனாய்த் தீயாகி என எழும் நின்றதிருத்தாண்டகம் முதலிய அருள்மொழிகளுக்கு இதுவே கருத்தாம். இக்கருத்துச் சிவநெறி நின்றோரால் தொன்றுதொட்டுக் கடைப்பிடிக்கப்பட்டது என்பதை

"இருசுட ரோ(டு)இய
மானன்ஐம் பூதம்என்(று)
எட்டு வகையும்
உயிரும்யாக் கையுமாய்க்
கட்டிநிற் போனும்"

எனச் சைவவாதி கூறிய கடவுளிலக்கணத்தின் ஒரு கூற்றை மணிமேகலை என்னும் காப்பியம் எடுத்துரைத்தலானும் தெளியலாம்.

இனி வேதங்களும் இக் கருத்தே பற்றி முதல்வனை உலகமே வடிவாகியோன் (விச்வாத்மா) எனவும், ஆன்மா எனவும் கூறும். இக்கருத்து உணராதோர் 'முதல்வனுக்கு வேறாக உலகம் இல்லை; கயிற்றை அரவு என மயங்கி உணர்தல்போல முதல்வனைத்தான் உலகு என மயங்கி உணர்ந்து வருகின்றோம்; பரமான்மாவுக்கு வேறாகச் சீவான்மா என்பது ஒன்று இல்லை என்றெல்லாம் கூறி வருவர். இவர்களைக் குறித்து. தொளாயிரம் யாண்டுகளுக்குமுன் தஞ்சைமாவட்டத்தில் கஞ்சனூரில் வைணவக்குடியிற் றோன்றிச் சிவன் அருளால் கலைஞானமும் பரஞானமும் ஒருங்கே பெற்றுத்திகழ்ந்த அரதத்தர் என்னும் சிறியபெருந்தகையார் தாம் அருளிச்செய்த சுருதி சூக்திமாலையில், பின்வருமாறு கூறுகிறார்:—

மகேசுவர, நீ அருளிச்செய்த நூல்கள், (நீ) உலகத்தை அதிட்டித்து நிற்றல்பற்றி, உன்னை உலகவடிவினன் என உபசரித்துக் கூறுகின்றன; வேதத்தின் நுண்பொருளை ஆய்ந்துணர்ந்த ஞானிகள் அதன் தாற்பரியத்தை அறிகின்றார்கள். மந்த உணர்வுடையவர்களோ (தாற்பரியம் கொள்ளமாட்டாது) சொல்மாத்திரையேபற்றி அதுவே உண்மை என மயங்குவர்" என்கின்றார்.

இக்கலப்பு நிலையை மெய்கண்ட தேவர் பின்வரும் உதாரணச் செய்யுளால் விளக்குகின்றார்;—

கட்டும் உறுப்பும் கரணமும் கொண்டுள்ளம்
இட்டதொரு பேரழைக்க என்னென்றுங்(கு)
—ஒட்டி
அவன்உளம்ஆ கில்லான் உளமவன்ஆ
மாட்டா(து)
அவனுளமாய் அல்லனும்ஆம் அங்கு

என்பது செய்யுள்.

இதன் பொருள்,—

உயிர் ஏழுவகை தாதுக்களால் கட்டப்பெற்ற உடம்பையும் ஐம்பொறி முதலியவற்றையும் இடமாகக்கொண்டு உள்ளது; ஒருவன், உடம்புக்கு இட்டதொரு பெயரால் கண்ணா! சாத்தா! என அழைக்கின்றான். அப்போது 'ஏன்?' என எதிர்மொழிந்து அவன் முகமாக நோக்கி நிற்பது அவ்வுயிரே. உயிர் இவ்வாறு தன் உடம்பை அபிமானித்து நிற்றற்கு ஒருகாரணம் வேண்டும். உயிரும் உடம்பும் உடனுறைதலை மட்டும் காரணமாகக் கொள்ள இயலாது; ஏனென்றால், இருவர் கைகோத்து நின்றாலும், அவருள் அழைக்கப்பட்டோன்தான் "ஏன்?" என்பான்; மற்றையவன் 'ஏன்?' என்று கூறமாட்டான். இங்கு அப்படி இல்லை. உடலுக்கிட்ட பெயரால் அழைக்க, உயிர் 'ஏன்?' என்கிறது. இதனால், உயிர் உடம்பெனத் தான் என வேறுபடாது அதனோடு ஒன்றாய் (அபேதமாய்) நிற்கிறது என்பது பெறப்படும். இதுபோல முதல்வனும் உயிர்களிடத்து வேற்றுமையின்றி ஒட்டிநிற்பன் எனக் கொள்ளவேண்டும்.

(தொடரும்)

மலைநாட்டுத்திருப்பதியநுபவம்

[மஹாவித்துவான் திரு. P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்]

திருவல்லவாழென்னும் மலைநாட்டுத் திருப்பதியைப்பற்றி நம்மாழ்வாருடைய அனுபவத்தைப் பூர்த்தியாகமுடித்தபின் அத் திருப்பதியைப்பற்றியே திருமங்கையாழ்வாருடைய பதிகத்தின் மூலமான அனுபவத்தைத் தொடங்கி இரண்டு பாசுரங்களை விவரித்தோம் கீழிதழில். இனி மூன்றாவது பாசுரம் முதலாக வனுபவிக்கிறோம்.

பூணுலா மென்முலைப் பாவைமார்
　பொய்யினை மெய்யி தென்று
பேணுவார் பேசுமப் பேச்சைநீ
　பிழையெனக் கருதினையேல்
நீணிலா வெண்குடை வாணனூர்
　வேள்வியில் மண்ணிரந்த
மாணியார் வல்லவாழ் சொல்லுமா
　வல்லையாய் மருவுநெஞ்சே.

நெஞ்சே! பூடணங்கள் விளங்க நின்ற மெல்லிய முலைகளையுடைய மாதர்களின் சூதுகளைச் சூதென்று கருதாமல் இது மெய்யென்று ஆதரிப்பவர்கள் பேசுகின்ற பேச்சுக்களை நீ இகழ்ச்சியாகக் கருதுவாயாகில், பரந்த நிலவுபோன்ற வெண்கொற்றக் குடையுடனே வாழ்பவனான மாவலியின் வேள்வியிற் சென்று மூவடிமண்ணை யாசித்த மாண் குறட் கோலப்பிரானுடைய திருவல்ல வாழ்ப் பதியை வாயாற் சொல்லப்பார் என்பது பாட்டின் கருத்து.

"சேலேய் கண்ணியரும் பெருஞ் செல்வமும் நன்மக்களும், மேலாத் தாய் தந்தையும் அவரேயினியாவாரே" என்கிறபடியே நமக்கு எல்லாவுறவு முறையும் திருமகள் கொழுநனே யென்று உறுதிகொண்டிருப்பது உரியதாயிருக்க, அதற்குமாறாக "அன்னை யத்த னென்புத்திரர் பூமி வாசவார் குழலாளென்று மயங்கி" என்னுமா போலே ஆபாச பந்துக்கள் திறத்துப் பற்றுவைத்து இன்னமும் ஸம்சாரபந்தத்திற்கே ஆட்பட்டிருக்கும் வாழ்வு போதும் போதுமென்று வெறுத்து, எம்பெருமானுக்கே அடிமைப்பட்டதான ஆத்மஸ்வரூபத்திற்கு ஒரு கேடும் விளையாதே நோக்கிக்கொள்ள வேண்டில் திருவல்லவாழ்ப்பதியை வாயாற் சொல்லவாகிலும் இசைந்திடுவாயாக வென்று நெஞ்சை நோக்கிக் கூறினாராயிற்று.

ஆண்களைச் செயற்கையழகாலே மயக்குதற்காகப் பலவகை நகைகள் பூண்ட முலைத் தடங்களையுடையரான மடந்தையர் பொய்யாகப் பேசும் புறனுரைகளை மெய்யாகக் கொண்டு அவர்கள் திறத்து ஆழங்காற்பட்டிருக்கும் ஸம்ஸாரிகளினுடைய பேச்சுக்கள், நெஞ்சமே! உனக்கு அஸஹ்யமாயிருந்தனவாகில், தன்னுடைமையைத்தான் பெறுதற்கு இரப்பாளனாய்ச் சென்று மாவலி பக்கல் மூவடிமண் இரந்த குறட் பிரமசாரிப் பெருமான் நம்மைப் பெறுதற்காக வந்து நிற்குமிடமான திருவல்லவாழிலே பொருந்தப்பார்ப்பது தவிர வேறு பணி உற்றதன்றென்கை.

[பொய்யினை மெய்யிதென்று பேணுவார் பேசுமப் பேச்சை.] இங்குப் பொய்யென்ற சொல்லினால் சரீரத்தையே சொல்லிற்றாகக் கொள்ளலாம். பொய்யான வுடலுக்கு எதிர் மறையிலக்கணையாக மெய்யென்று பெயரிட்டிருக்கின்றனர் தமிழர்; இவ்வுண்மையைத் தெரிந்துகொள்ளாதே மெய்யென்றே நினைத்துப் பேணுவார்களாயிற்று அறிவிலிகள். அன்னவர்கள் பேசும் பேச்சுக்கள் இன்னின்னவையென்று நாம் விவரிக்க வேண்டுமோ? 'சிற்றின்ப நுகர்ச்சியே கட்கூடான சுகம்; இதுதான் உண்மையில் பேரின்பமாகும்; இதனைச் சிற்றின்பமென்பது அறிவீனம்; பகவத் விஷயாநுபவ சுகமென்பது கட்டுக்கதை; அஃது உண்மையாயிருந்தாலும் காலாந்தரத்திலும் தேசாந்தரத்திலும் கிடைக்கக்கூடிய அவ்வின்பத்திற் காட்டிலும் இவ்விடத்தே இப்போதே வேண்டினபடி அநுபவிக்கவுரிய விஷயபோக சுகத்தை இழக்கலாமோ? என்றிப்படி நாஸ்திகர்கள்

பேசுகிற பேச்சுக்கள் பலவுண்டே; அவற்றைப் பிழையெனக் கருதினுயேல் திருவல்ல வாழ்ப் பதியிலே ஊன்று நெஞ்சே!

பண்ணுலா மென்மொழிப் பாவைமார்பணை
முலையணைதும் நாமென்று,
எண்ணுவா ரெண்ணம தொழிந்துநீ
பிழைத்துய்யக் கருதினுயேல்
விண்ணுளார் விண்ணின் மீதியன்ற
வேங்கடத்துளார், வளங்கொள் முந்நீர்
வண்ணனுர் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே!

நெஞ்சே! இசை விளங்குகின்ற இனிய பேச்சுக்களையுடைய மாதர்கள் தனங்களை நாம் அணைவோமென்று சிந்திப்பாரது சிந்தனையைத் தவிர்த்து நீ உய்யவேண்டில், நித்திய சூரிகளுக்காகப் பரமபதத்தில் காட்சி கொடுத்துக்கொண்டிருப்பவரும், திருவேங்கடமலையில் எழுந்தருளியிருப்பவரும், அழகிய கடல்போன்ற வடிவையுடையவருமான பெருமாள் உறையுமிடமான திருவல்லவாழ்ப் பதியைச் சொல்லி உய்வாயாக என்றுராயிற்று.

ஆடவர்களை வசப்படுத்திக்கொள்ளுதற்காகத் தேனெழுகப் பேசுகின்ற பெண்களையணைய வேணுமென்று காதலிப்பார் திரளில் புகாதே அந்தக் காதல் ஸ்வரூப ஹானியென்று துணிந்து அதற்குத் தப்பிப்பிழைக்க விருப்பமுண்டாகில், நெஞ்சமே! நித்திய சூரிகளுக்குக் காட்சி கொடுத்துக்கொண்டு திருநாட்டிலிருப்பவர் அந்தத் திருநாட்டோடு ஒரு போலியான திருவேங்கட மலையிலே நிற்பவர், அழகிய கடல்போன்ற வடிவையுடையவர் உறையுமிடமான திருவல்லவாழிலே பொருந்தப்பார் என்றுராயிற்று.

முந்நீர் வண்ணனுர் என்றதற்கு—கடல் போன்ற நிறத்தையுடையவர் என்கிற பொருள்போல, கடல்போன்ற இயல்பையுடையவர் என்னும் பொருளும் ஏற்கும். கடலுக்கும் எம்பெருமானுக்கும் பல வகைகளாலே ஒப்புமையுண்டு; சிலவகைகளை ஈண்டு உணர்த்துவோம்;—

1—4 இத்திருமங்கையாழ்வார் தாமே பெரிய திருமொழியில் (2-8-5) நீண்ட மலைகளும் மாமணியும் மலர்மேல் மங்கையும் சங்கமும் தங்குகின்ற அலைகடல் போன்றிவர் என்ற பாசுரத்தில் எம்பெருமானுக்குக் கடலோடு உவமையை ஒருவாறு அருளிச் செய்துள்ளார்; கடலானது மைனுகம் முதலிய மலைகளைத் தன்னுள்ளே யுடையது; எம்பெருமானேவென்னில் ஈரிரண்டுமால் வரைத்தோள் செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமால் என்கிறபடியே மலைபோன்ற திருத்தோள்களையுடையவன்; பிள்ளைப் பெருமாளையங்காரும் நகுகதிர் வழங்கு தகடுபடு செம்பொன் நவமணி குயின்ற தொடியணி யணிந்த ககனவிவிடு நீலவெற்பொத்திருந்தன - அழகிய மணவாளர் கொற்றப்புயங்களே என்றுர். ஆக, மலைகளையுடைமை கடலுக்கும் பெருமானுக்கும் ஒற்றுமை. கடலானது சிறந்த நவமணிகளையு முடையது; எம்பெருமான் குருமாமணிப்பூண் என்கிற கௌத்துபமணியையும், செங்கமலக் கழலில் சிற்றிதழ்போல் விரலில் சேர்திகழாழிகளுங் கிண்கிணியும் அரையில் தங்கிய பொன்வடமும் தாளநன் மாதுளையின் பூவொடு பொன்மணியும் மோதிரமுங்கிறியும் மங்கல வைம்படையும் தோள்வளையுங்குழையும் மகரமும் வாளிகளும் சுட்டியும் என்னும்படியான திவ்யாபரண மணிகளையுமுடையவன். கடலானது திருமகளுக்குப் பிறந்தகமாகையாலே அவளுக்கு உறைவிடம். எம்பெருமான் அகலகில்லேனிறையு மென்றலர்மேன் மங்கையுரை மார்பா! என்கிறபடியே அத்திருமகளுக்கு உறைவிடமாயிருப்பவன். கடல் சங்கு தங்குமிடம்; எம்பெருமானும் வெள்ளைச் சுரிசங்கு ஏந்துமவன். ஆக இந்நான்கு வகைகளால் எம்பெருமானுக்குக் கடலோடு ஒப்புமையை ஆழ்வார் தாமே நிர்வஹித்துள்ளார். மற்றும் உவமைகளைப் பொருத்தமாகக் காட்டுவோம்.

5. கடல் முன்னீர் என்று பெயர் பெற்றிருக்கும்; றன்னகரம் தந்நகரம் என்கிற வாசியையிட்டு முன்னீர், முந்நீர் என்றிரண்டு வகையாகவும் வழங்குதலுண்டு. இரண்டு வகையிலும் ஒப்புமையுரைக்கக் குறையில்லை. எல்லாவற்றிற்கும் முன்னே யுண்டானது என்பதுபற்றி முன்னீர் என்கிறது. இப்படி கடல் முதன்மை பெற்றிருப்பது போல எம்பெருமானும் "முனைவன் மூவுல

காளியப்பன்" என்னும்படியே ஆதிபகவனு யிருப்பன்.

6. முன்னீர் என்னுமல் மூந்நீர் என்னும்போது, ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் என்னப்பட்ட மூன்றுவகைப்பட்ட நீரை யுடையது என்றதாம். எம்பெருமான் நீர் போன்ற கருணாரஸம் மூவகையாக இருக்கப் பெற்றவன். (1) இயற்கையான இன்னருள் (2) பிறர்படும் துயரத்தைக் கண்டு தோன்றுகின்ற அருள். (3) பிராட்டியின் புருஷகாரத்தாலே தோற்றுவிக்கப்படும் அருள்-என மூவகைப்படும் பகவானது கருணாரஸம்.

7. கடல் சிறுமீன் முதலாகத் திமிங்கிலம் வரையிலும், கிளிஞ்சல் முதலாக மணி மாணிக்கம் வரையிலும் அதம உத்தம விபாக மின்றி அனைத்துக்கும் தன் பக்கல் இடங் கொடுத்திருக்கின்றது. எம்பெருமான் கீதையில் அர்ஜுனனுக்கு விசுவரூபம் காட்டின போது "பச்யாமி தேவாந் தவ தேவ! தேஹே ப்ரஹ்மாண மீசம் கமலாஸன ஸ்தம், ருஷீம்ச்ச ஸர்வாந் உரகாம்ச்ச திப்தாந்" என்னும்படி யிருந்ததனால் அவனும் சிறியாரோடு பெரியாரோடு வாசியற எல்லார்க்கும் ஆச்ரயமாயிருப்பன்.

8. கடல் தேவர்களுக்குச் சாவாமருந்தான அமுதத்தைச் சுரந்தளித்தது. எம்பெருமானும் "உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்" "தன்னைப் பெற்றேற்குத் தன்வாயமுதம் தந்து என்னைத் தளிர்ப்பிக்கின்றான்" என்னும்படியே பேரன்புடையார்க்கு அருமருந்தன்ன தன் வாயமுதத்தை யளிக்குமவன்.

9. கடல் அளவிட முடியாத ஆழமுடையதென்று பிரசித்தம். எம்பெருமானது கம்பீரத்தன்மையும் "ஸமுத்திர இவ காம்பீர்யே" என்கிறபடியே பாசுரமிட்டுப் பேசவொண்ணாதது. கொள்ள மாளாவின்ப வெள்ளமாகையாலே இதிலே இழியுமவர்களுக்கு உள்ளாழம் காண்பரிது.

10. கடல் தன்னிடத்துள்ளதை மேகங்களுக்குக் கொடுப்பதுஞ் செய்யும்; மேகம் பெய்யும் நீரைத்தான் வாங்கிக்கொள்வதுஞ் செய்யும். எம்பெருமானும் "வேண்டிற்றெல்லாந்தரும் கோதில் வள்ளல் மணிவண்ணன்" என்றும் "எனக்கே தன்னைத்தந்த கற்பகம்" என்றும் நம்மாழ்வாரருளிச் செய்தபடியே வேண்டுவார்க்கு வேண்டினபடியே கொடுக்கவும் வல்லவன்; "கரோமி யத்யத்ஸகலம் பரஸ்மை நாராயணாயேதி ஸமர்ப்பயாமி" என்று கொடுப்பார் கொடுப்பவற்றைக் கொள்ளவும் வல்லவன்.

11. கடலானது மழைநீர் தன்னிடத்து விழப்பெற்றாலும் அதனால் ஒரு அதிசயமும் உண்டாகப்பெறாது. பெய்யும் முகிலுக்குத்தான் ஸத்தை பெறுமத்தனையேயுள்ளது: அதுபோல, எம்பெருமானுக்கு நாம் எவ்வளவு இட்டாலும் அதனால் நாம் ஸத்தை பெறுவது தவிர, அவனுக்குப் புதிதாகச் செல்வ நிறைவு ஒன்றுமில்லையாம்.

12. கடல்நீர் நம் போல்வார் வாயில் புகமாட்டாது கசக்கும்; ஆனாலும் குறுமுனிவனுக்கு உணவாயிற்று. எம்பெருமானும் "தோன்றல் வாளரக்கன்கெடத் தோன்றின நஞ்சு" என்கிறபடியே ஆசுரப் பிரகிருதிகளுக்கு விஷயமாயிருந்தாலும் சுவையறிவார்க்கு "எனக்குத்தேனே பாலே கன்னலே யமுதே திருமாலிருஞ் சோலைக்கோனே" என்கிறபடியே அமுதிலு மாற்றவினியனாயிருப்பன்.

13. கடலானது அஞ்சினார்க்குப் புகலிடமாயிருக்கும்; இந்திரன் செய்யும் வச்சிராயுத வெட்டுக்கு அஞ்சின மைநாககிரி முதலியவற்றிற்குப் புகலிடமாயிருந்ததென்பது புராணப் பிரசித்தம். எம்பெருமானுக்கு இத்தன்மை இயற்கையானது. "அஞ்சினேற்கு அஞ்சலென்று காவிபோல் வண்ணர் வந்து என் கண்ணுளே தோன்றினாரே" என்றும், "ஆங்கு வெந்நரகத்தழுந்தும்போது அஞ்சேலென்றடியேனை அங்கே வந்து தாங்கு..." என்றும் ஆழ்வார்கள் அநுசந்திப்பர்கள்.

14. கடல்நீர் மாமுகிலின் வாய் வழியாக வந்தாலன்றி ஆர்க்கும் அனுபவிக்க வொண்ணாததாயிருக்கும். எம்பெருமானும் ஆழ்வாராசாரியர்களின் திருவாக்கு வழியாக வந்தாலன்றி அனுபவிக்க வுரியனாகான்.

15. கடல் பெரும்பாலும் குளிர்ச்சிமிக்கிருக்கச் செய்தேயும் ஒருபுறத்தே பாடபாக்னி பொங்க நிற்கும். எம்பெருமானும் தண்ணளியே வடிவாயிருக்கச் செய்தேயும் "நீரிலே நெருப்புக்கிளருமாபோலே குளிர்ந்த

திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால்'' என்கிற முமுட்சுப்படிஸூக்தி யின்படியே ஸம்ஸாரிகளியற்றும் குற்றமடி யாக வெவ்வியனுயிருப்பது முண்டு.

16. கடல் சந்திரனைக் கண்டால் பொங்கிக்கிளரும்: எம்பெருமானும் திங்கள் திருமுகத்துச் சேயிழையாரையும் ஞானிகளை யும் கண்டால் "தோள்களாயிரத்தாய் முடி களாயிரத்தாய் துணைமலர்க் கண்களாயிரத் தாய்'' என்னும்படியே உடல்பூரித்துப் பணைப்பன்.

17. நாமெல்லோரும் கடலின் கரை யிலே நிற்கவேண்டுமேயல்லது உள்ளே புக முடியாது; நிலவர்களே உட்புகுந்து மணி மாணிக்கங்களைத் திரட்டிக்கொணருவர்கள். அதுபோலவே பகவத் விஷயத்திலே நாமெல் லாம் மேலெழ நிற்க, நம்பிள்ளை பெரியவாச் சான் பிள்ளை போல்வாரான மஹாமதிகளே ஆழ அவகாஹித்து வேதார்த்த நிதிகளை வாரிக்கொணர்ந்து கொடுப்பார்கள்.

18. கடல் விஷத்தையும் தந்தது, அமு தத்தையுமளித்தது. எம்பெருமானும் "பயக் ருத் பயநாசந:'' என்று ஸஹஸ்ரநாமத்திற் கூறியபடியே பயத்தையும் விளைவிப்பன், பயநாசமும் பண்ணித்தருவன். "நல்குரவும் செல்வும் நரகும் சுவர்க்கமுமாய், வெல்பகை யும் நட்பும் விடமு மமுதமுமாய்'' என்றார் நம்மாழ்வாரும்.

19. கடல் எத்தனை தடவை பார்க்கப் பட்டாலும் திருத்தியளிக்க மாட்டாது; காணுந்தோறும் அபூர்வக்காட்சியாகவேயிருக் கும்; எம்பெருமான் படியுமப்படியே; "எப் பொழுதும் நாள் திங்களாண்டூழி யூழி தொறும், அப்பொழுதைக்கப்பொழு தென் னாராவமுதே'' என்றார் நம்மாழ்வார்.

20. கடலுக்கு ஒரு பக்கத்தில் வரவு களும் ஒரு பக்கத்தில் செலவுகளுமாயிருக் கும். பல நதிகள் வந்து சேர்வது வரவு; மேகம்நீர் முகந்துகொண்டு போவது செலவு. எம்பெருமானுக்கும் அர்ச்சாவதாரங்களில் இங்ஙனனேயாயிருக்கும். ஆலயங்களில் உண்டியில் வரவுமுண்டு; பலவகைச் செலவு முண்டு.

21. கடல் வழியே போவார்க்குப் பெருஞ் செல்வம் கிடைக்கும். "திரைகட லோடியும் திரவியம் தேடு'' என்றார்கள், அனுபவத்திலும் இது காணு நின்றோம். இவ் வண்ணமே எம்பெருமான் வழியே போவார்க் குச் சிறந்த பொருள்கள் கிடைக்கும். "நின் னையேதான் வேண்டி நீள்செல்வம் வேண்டா தான் தன்னையேதான் வேண்டும் செல்வம்'' என்றார் குலசேகரப் பெருமாள்.

22. வானர வீரர்கள் கடலைக் கடந்து விட்டாலும் அவர்களுக்குக் கடலினுழம் தெரியாது. கடல் கடைந்த காலத்தில் அடி வரையில் அழுந்தின மந்தரகிரிக்கே அந்த ஆழம் தெரியும். அதுபோலவே, எம்பெரு மான் விஷயத்தில் நாமெல்லாம் கவிகளியற் றித் துதிசெய்து விட்டாலும் அவன் படி களைச் சிறிது மறியோம். ஆழ்வார்கள் என்று திருநாமம் பெற்று அவ்விஷயத்தில் ஆழ மூழ்கியிருக்கும் பெரியார்களே ஆழமறிவார் கள். "பாலிற்கிடந்ததுவும் பண்டரங்கமே யதுவும் ஆலில் துயின்றதுமாரறிவார்— ஞாலத்தொரு பொருளை வானவர்தம் மெய்ப் பொருளை அப்பிலரு பொருளை யானறிந்த வாறு'' என்று துணிந்து அருளிச் செய்தார் திருமழிசைப்பிரான்.

23. கடல் கலங்காது, கலங்கினுலும் ஒரு நொடிப்பொழுதில்தானே தெளிவு பெறும். தண்ணளியே வடிவெடுத்த எம் பெருமானும் சீற்றங்கொள்ள மாட்டான், ஒளபாதிகமாகச் சீறினுலும் அடுத்த க்ஷணத் திலே அனுக்கிரகம் பொங்கி நிற்பன் ஸுக் ரீவ மஹாராஜன் பக்கலிலும் கடலரசன் பக் கலிலும் அளவு கடந்து சீறிச்சிவந்த இராம பிரான் அடுத்த க்ஷணத்திலே அருள்பொலிய நின்றமை காண்க. காகாசுரன் போல்வார் திறத்தும் இது காணத்தகும்,

24. கடல் அபரிச் சேத்யமாயினும் குறு முனிவன் கையிலே ஆசமனத்திற்குப் போதும்படி அடங்கி நின்றது. அதுபோல, "நான்மறைகள் தேடியென்றுங் காணமாட் டாச் செல்வன்'' என்கிறபடியே வேத வேதாந்தங்களுக்கும் அளவிட முடியாத தான பகவத் விஷயம் ஆழ்வார்களுக்கு அள விடலாயிற்று. "ஆம் வண்ணமின்னதொன் றென்று அறிவதரிய வரியை ஆம் வண்ணத் தாற் குருகூர்ச்சட கோபனறிந்துரைத்த'' என்ற திருவாய்மொழி காண்க.

25. கடலானது புல் துரும்பு முதலான வற்றை அலைமேலலைமோதி வெளியிலே தள்ளிவிடும்; மகரம் முதலானவற்றை அங்ஙனம் தள்ளாது உள்ளே கொண்டிருக்கும். இதற்குக் காரணமென்ன? ஸம்பந்தவுணர்ச்சியில்லாதாரைத் தள்ளிவிடும்; அஃதுடையாரை அங்கீகரித்திருக்கும். எம்பெருமான் படியுமிதுவேயாம். "அடங்கெழில் சம்பத்து அடங்கக்கண்டு, ஈசனடங் கெழிலஃதென்றடங்குகவுள்ளே" என்ற (1-2-5) திருவாய்மொழிப் பாசுரத்தின் நம்பிள்ளை யீட்டில் விளக்கமாகவுள்ள விஷயமிது.

26. கடல் கடக்க அரிதாயினும் நாவாயினால் எளிதாகக் கடக்கலாகும். எம்பெருமானாகிற கடலைக் கடப்பதற்கும் ஒரு நாவாயுண்டு; முகுந்தமாலையில் "பாதாம் போஜே வரத! பவதோபக்தி நாவம் ப்ரயச்ச" என்றபடியே பக்தியாகிற நாவாயைப் பெற்றால் எம்பெருமானாகிற கடலையும் எளிதாகக் கடந்துவிடலாம். பத்துடையடியவர்க்கு எளியவன் என்றவாறு.

27. கடலருகே யிருந்தாலும் விடாய் தீர்த்துக்கொள்ள வேறொரு நீர் நிலை வேண்டியதாகும். எம்பெருமானை சாஸ்திரங்களினால் எவ்வளவு அனுபவித்தாலும் அர்ச்சாவதாரத்தில் இழிந்து அநுபவித்தாலன்றி ஆர்த்தி தணியாது.

28. எவ்வளவு காரிய நிர்ப்பந்தங்களிருந்தாலும் பெருஞ் செல்வர்கள் சிறிது போதாவது கடற்கரை சாராதிரார்கள். அது போலவே பல காரியங்களையும் சுருக்கிக் கொண்டு நாடொறும் ஒரு நாழிகைப் பொழுதாவது பகவத் கதையில் சாராதிரார்கள் பரம பக்திமான்கள்.

இவ்வகையானே மற்றும் உவமைப் பொருத்தங்கள் கண்டு கொள்க.

ஆக, திருவல்லவாழ்த் திருப்பதிப்பதிகத்தின் நான்காவது பாட்டில் "முந்நீர் வண்ணனர்" என்றதற்குச் சார்பாக இத்தனையும் எழுதலாயிற்று. இனி ஐந்தாவது பாட்டு முதற்கொண்டு அடுத்த இதழில் அனுபவிப்போம். (தொடரும்.)

சென்னை:—ஏகாம்பரேசுவரர் கோயிலில் 27-6-61ல் சேலம் திருமதி ஜயலக்ஷ்மி அவர்களால் இன்னிசையரங்கு நடைபெற்றது.

மேலூர்:—கல்யாணசுந்தரேசுவரர் காமாட்சியம்மன் கோயிலின் கல்யாண மண்டபத்திற்கு 5-6-61ல் சென்னை மராமத்து அமைச்சர் திரு. பி. கக்கன் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். இம்மண்டபம் சுமார் 37,000 ரூபாய் செலவில் கட்டப்பெறும். இக்கோயில் கோபுர திருப்பணிக்கு ரூ. 4,000 இவ்வூர் வியாபாரியான காலஞ்சென்ற திரு. முகமது ஹனீபா ராவுத்தர் அவர்கள் நன்கொடை வழங்கியுள்ளார்கள். இதற்குமேல் ஆகும் செலவை ஏற்பதாக அவரது மனைவி உறுதியளித்திருக்கிறார்கள். அன்று மின்சார அமைச்சர் திரு. இராமையா அவர்களும் கலந்துகொண்டு கல்யாணமண்டபத்தை கருங்கல்லை உபயோகித்து நல்லமுறையில் கட்டவேண்டும் என்றும் கூறினார்கள்.

அதிராம்பட்டினம்:—சுந்தரநாயகி உடன்கூடிய அபயவரதேசுவரசுவாமிக்கு இலட்சார்ச்சனை 30-6-61 முதல் நடைபெற்று வருகிறது.

பரதூர்:—வரதராஜப்பெருமாள் கோயிலில் கும்பாபிஷேகம் 5-7-61 ஆனி மாதம் 21ந்தேதி காலை 7 மணிக்கு நடைபெற்றது. 3-7-61ல் திரு. சேதுசுப்பிரமணியம் அவர்கள் விப்ரநாராயணர் என்பதுபற்றியசொற்பொழிவும், 4-7-61ல் திரு. பித்துக்குளி முருகதாஸ் சுவாமிகள் அவர்களால் பக்தி பஜனையும் நடைபெற்றன.

தூத்துக்குடி மேலூர்:—பத்திரகாளியம்மன் கோயிலில் 30-6-61ல் வருஷாபிஷேகம் நடைபெற்றது.

வடதிருமுல்லைவாயில்:—மாசிலாமணியீசருக்கு ஆண்டுதோறும் சித்திரைச்சதய நாளிலாவது, கார்த்திகைச் சோமவாரங்களில் ஒரு நாளிலாவது சந்தன மெய்ப்பூச்சுக்காக திருப்பனந்தாள் காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் ரூ. 3,500 முதற்பொருள் அளித்துள்ளார்கள். இக்கிநியிலிருந்து வரும் வட்டித்தொகையி லிருந்து சந்தனமெய்ப்பூச்சு நடைபெறும்.

அப்பர் உவமைகள்

[திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியார், திருவதிகை]

கரந்தை வசிஷ்டேசுவரர் கோயிலிலுள்ள அப்பர் சுவாமிகள் திருவுருவம்

திருநாவுக்கரசர் அருளிய தீந்தமிழ் மாலையாகிய தேவாரத் திருப்பதிகங்களுள் விரவி விளங்கும் சில வுவமைகளின் சிறப்பை யீண்டுணர்வாம். உவமை என்பது ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்புமை கூறுவது. அவ்வுவமைகளைத் தொல்காப்பியர் பொதுவாக வண்ணம், வடிவு, பயன், செயலென வகைப்படுத்தியுள்ளனர். சிறப்பாகப் பல பிரிவுகளைச் சிற்சில வேறுபாடுகள் தோன்ற இலக்கண நூலார் விரித்துரைப்பர். உவமைகளெல்லாம் சொல்வோனது சூழ்நிலை, கருத்து ஒட்டியே பயன்படுத்தப்படுகின்றன. சூழ்நிலையில் அடங்குவது குலத்தின் இயற்கைக் குணம். எடுத்துக்காட்டாக இரண்டொன்று சூழ்நிலை யொட்டிய உவமைகளை யுணர்வாம்.

திருக்காளத்திக் கண்ணப்பர் வரலாற்றினைக் காண்போம். கண்ணப்பராதல்முன் திண்ணனார் என்ற திருப்பெயருடையராவர். அவர் வேடர்குலத்து அரசிளங்குமரன். கன்னிவேட்டைக்கு நாணன் காடன் என்ற வேடரிருவருடன் காட்டுக்குச் சென்றார். ஒரு காட்டுப்பன்றியைக் கண்ணுற்றார். அதனைத் துரத்தி மிகுவேகமாய் ஓடி இரு துண்டாய் வீழ்த்தினார்; அவ்வேகம் அவர் தம்மை இளைக்கச் செய்தது. நீர் வேட்கையை மிகுவித்தது. நீரினை நாடிப் பொன்முகலி யாற்றிற்குச் செல்வழியில் காளத்தி மலையைக் கண்டார், முன்னை வினையின் பயன் கூடுவதாயிற்று, அம்மலையின் சிறப்புணர ஆர்வமெழுந்தது. அவரது குறிப்புணர்ந்த உடன்வந்த நாணன் அதனைக் கூறக்கேட்டார். 'குடுமித்தேவர் அங்குள்ளார்; கும்பிடலாம்' என்று நாணன் கூறியதே அவருக்கு அங்குச் செல்ல வேட்கையை முறுகியது. காடனைக் காட்டுப் பன்றியைத் தீக்கோலிட்டுப் பக்குவஞ் செய்ய ஆணையிட்டு இருவரும் மலையின்மீது ஏறினர். குடுமித்தேவரின் அருட்டிரு நோக்கம் திண்ணனாரைக் கவர்ந்தது. அவர் பரவசமானார். அவர்பால் ஒற்றுமைப்பட்ட அன்பெழுந்து மீதூர்ந்தது. அவருக்குப் பூசைசெய்து உணவூட்ட விருப்புடையவரானார். இறைவனார் தனிமையைப் பொறுதவுள்ளத்தவரானார். சாலப் பசியுடையர் என்றுணர்ச்சியுற்று இறைச்சி யுணவுகொண்டு வருவேன் என்று பிரியா விடைபெற்றார். மலையின்கீழ் இறங்கினார். நாணனும் உடன் திரும்பினன்,

இருவரும் காடன்பால் சென்றனர். காடனும் திண்ணனாரைக் கண்டது மெழுந்தான். இறைமகன் என்றளவில் இயல்பாயெழுந்த வந்தனைகள் புரிந்தான். பக்குவப்படுத்திய பன்றியின் உறுப்புக்களைக் காட்டினன். திண்ணனார் வாய்திறந்தாரில்லை; அவனை நோக்கினாருமில்லை. நாணன் அவரது நிலையை ஓர் உவமைமுகத்தா னறிவிப்பது,

அங்கிவன் மலையிற்தேவர் தம்மைக்
கண்டணைத் துக்கொண்டு
வங்கினைப் பற்றிப்போகா வல்லுடும்
பென்ன நீங்கான்
இங்கும் அத்தேவர் தின்னஇறைச்சி
கொண்டு ஏகப்போந்தான்
தங்குலத் தலைமைவிட்டான்
நலப்பட்டான் தேவர்க்கு என்றார்

[வங்கு - மரப்பொந்து]

எனவரும் திருவிருத்தத்துள் சேக்கிழாரடிகள் உணர்த்தியவாற்றால் அறியலாகும். ஈண்டு நாணன் வேடர்குலத்தவன். அவனது காட்டின் சூழ்நிலையொட்டி உடும்பினைத் திண்ணனாருக்கு உவமை கூறினன். உடும்பு நீண்ட வாலுடையதாய்ப் பற்றிக்கொண்ட வளைவுடைப் பொந்தினின்றும் நீக்குதற்கரியதாகும். திருத்தக்கதேவரும் தமது சீவக சிந்தாமணியில் உடும்பின் இயற்கையை,

தணக்கிறப் பறித்தபோதும்தான்
அளைவிடுத்தல் செல்லா
நிணப்புடை யுடும்பனாரை
யாதினுல் நீக்கலாகும் (2887)

[தணக்கு - வால்; இற-ஒடிந்துபோகும் படி; அளை - மரப்பொந்து]

என விரித்தோதியது உணரத்தக்கது. இத் தகைய வலிமைமிக்க உடும்பு பற்றிக் கொண்ட பொந்தினைவிட்டு அகலாமை போலக் காளத்தியப்பரை விட்டு நீங்கக் கண்ணப்பர் மனமில்லாதவரானார்.

சிந்தாமணியினும் கோவிந்தையார் இலம்பகத்தில் நந்தகோபன் என்னும் இடையர் தலைவன் சீவகனுக்குக் கோவிந்தையின் அழகின் சிறப்பை அறிவிக்கின்றபோது அவனது குலத்தில் பழகிய பொருள்களையே உவமிப்பது இன்பந் தருவதாகும்.

வெண்ணெய்போன்று ஊறுஇனியள்
மேம்பால்போல் தீஞ்சொல்லள்
உண்ண உருக்கிய
ஆனெய் போல்மேனியள்
வண்ண வனமுலை
மாநர் மடநோக்கி
கண்ணுங் கருவிளம்போது
இரண்டே கண்டாய் (480)

என்ற திருவிருத்தம் இடையர் பழகிய பொருள்களையே உவமித்துக் கூறுவதனை யுணர்த்துகிறது. இடையர் நாளும் பால் தயிர் வெண்ணெய் நெய்யோடு பழகுவர். கோவிந்தையின் மென்மை வெண்ணெய்க் குவமை. அவள் மொழி பாலினினிமைக் குவமை. அவள் மேனியின் மணம் நெய்யின் மணத்திற்குவமை. இங்ஙனமாகச் சொல்வோனது சூழ்நிலை யொட்டியே உவமைகள் அமைவன.

இனி உவமை கூறுவோர் அவரவர் நிலைக்கேற்றவாறு உவமைகளைக் கற்பிப்பர், காமுகன் தன் காதலியின் வடிவைக் கற்பனை செய்யின் தாமரைமுகம், கோங்கன்னமுலை என்றெல்லாம் விரித்தோதுவன். அவன் கருத்துக் கிசைந்த உவமைகளைக் கருதுவன். அப்பர் பெருமான் நடையாறுப் பெருந்துறவு பூண்டவர். சிவபெருமானைச் சிந்திக்கும் சீலமுடையவர். உலக நிலையாமையும் பிறவித் துன்பமும் தெள்ளிதிற் கண்டவுத்தமர். அவற்றினின்றும் நீங்கச் சாதன நன்னெறியைக் கைக்கொண்ட சான்றோர். அந்நெறியில் ஒழுகி இறவா இன்பத்துள் தலைப்படும் தலைமையர், இங்ஙனமாகிய இவர்தம் கருத்தினில் இருப்பன உலக நிலையாமை, பிறவித் துன்பம், சாதனம், உயிர்கள் நிலை, இறைவன் என்பனவாகும். இப்பொருள்களையே பிற பொருள்களோடு உவமிப்பதே கடனுடையராவர்.

உயிர்கள் உலகில் இன்புறும் வகையை நீடித்த இன்பமென்று கருதி நுகர்வன. அவ்வின்பம் சிறுகாலமே நிலைப்பதென்று தெளிவிலாது மயங்குவன. இத் தெளிவிலாமையை ஆமையோடு ஒப்பிட்டு,

"வலைத்துநின்ற ஐவர்கள்
வந்தெனை நடுக்கஞ்செய்யத்
தலைத்து வைத்துலையை ஏற்றித்
தழலெரிமடுத்த நீரில்
திளைத்து நின்றாடுகின்ற
ஆமைபோல் தெளிவிலாதேன்
இளைத்து நின்றாடுகின்றேன்
என்செய்வான் தோன்றினேனே"

எனவரும் தனித் திருநேரிசையில் அப்பர் விதந்து கூறுகின்றனர். இத் திருப்பாட்டில் உயிர்கள் ஐம்புலன்களால் கட்டுண்டு கிடப்பன. அங்ஙனம் இருப்பினும் அவை சிறிதளவாகும் உலக போகங்களுள் திளைத்து நிற்கின்றமையை ஆமை கொலையுறுகின்ற போது சிறிதளவாயுள்ள நீரில் ஆடுகின்ற தன்மைக்கு ஒப்பிடுகின்றனர். புலன்களைக் கள்வர் என்று உருவகித்தார். கள்வராவார் வழிச்செல்வோரை அச்சுறுத்தி அவர்தம் அறிவை மயங்கவைத்து அவர்பாலுள்ள பொருளை ஆறலைப்பர். அங்ஙனமே உயிர்களைப் புலன்கள் அலைப்பன. எவ்வாறு ஐந்து கள்வர் ஒருவனைச் சூழ்ந்துநின்று தனித்தும் ஒருசேரவும் துன்புறுத்தி அறிவை மாழ்கும்படிச் செய்வாரோ அதுபோல புலன்களும் உயிர்களைத் தனித்தனிப் பயன்களை நுகருமாறும் பெண்போகத்தில் அவை யாவும் ஒருசேரச் செயலுற்றுச் சிற்றின்பம் நுகருமாறும் செய்வித்து உயிர்களை அறிவு இழக்குமாறும் இறைபொருளைக் காணுதவாறும் செய்கின்றன. அதனால் அவை புலன்களால் தங்கள் அறிவுஞ் செயலுங் கட்டுண்டு கிடப்பனவாயின. உயிர்கள் இங்ஙனமாகக் கட்டுண்டு கிடக்கும் நிலைமைக்குக் கொலைஞர் ஆமையைக் கொலைசெய்யும் முறைமை உவமிக்கப்பட்டது. ஆமையைப் பிடித்து முதலில் பிணித்துக் கொணர்வதனைத் தளைத்து வைத்து என்றார். ஆமையைக் கொலை செய்வார் ஓர் அடுப்பினில் தீயேற்றி அதன்மீது நீர் நிறைந்ததும் வாய் அகன்றதுமான பெரிய பாத்திரத்தை வைப்பர். ஆமையை அதனுள் இடுவர். அது தனது கட்டினைத் தளர்த்தி அதனின்றும் விடுபடும். நீரினைக் கண்டதும் பின் விளைவது அறியாது அதனிடை நீந்தி ஆடாநிற்கும். நீர் வெப்பம் மிகுந்து தாங்கொண்ணு நிலைமைத்தாய் இறப்பது அதன் இறுதிநிலை. பின்னிறக்கும் நிலையைத் தெளியாது அஃது ஆடுகின்ற முறைபோல உயிர்களும் உலக சிற்றின்பங்களில் மூழ்கி இவையே இன்பந்தருவன என்று ஆடித் திளைப்பனவாம். இவ்வுவமையை நாவரசருக்கு முற்பட்ட சங்க காலத்து நூல்களுளொன்றாகும் நாலடியாருள்,

கொலைஞர் உலையேற்றித் தீமடுப்ப ஆமை
நிலையறியாது அந்நீர் படிந்தாடி யற்றே
கொலைவல் பெருங்கூற்றம் நோக்பார்ப்ப
ஈண்டை
வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு

எனவரும் வெண்பா உணர்த்துவது அறியலாகும்.

அப்பர்பெருமான் மேற்குறித்த திருநேரிசையுள் "என்செய்வான் தோன்றினேனே" என்று தன் செயலறவு அறிவிக்கின்றனர். இஃது அவரது ஆழ்ந்த சிந்தனையின் தோற்றம். உலகபோக நுகர்ச்சி அறியாமையான் நிகழ்வதே என்பது தெளிவு. ஐம்புலன்களால் நுகரப்படும் சிற்றின்பத்தால் வரும் மயக்கத்தை,

முள்குவார் போகம் வேண்டின்
முயற்றியால் இடர்கள் வந்தால்
எள்குவார் எள்கிநின்றுஅங்கு
இதுவொருமாயம் என்பார்

(திருவொற்றியூர்—திருநேரிசை—கூ)

எனவரும் அடிகள் அறிவிக்கின்றன. ஈண்டு முள்குவார் போகம் என்பது சிந்தாமணியில் "முள்குமாயர்" (420) என்னும் தொடருக்கு நச்சினார்க்கினியர் புதுமணவாளப்பிள்ளை என்று பொருளுணர்த்துவதால் புதுமணவாளப்பிள்ளையின் போகம் என்னும் பொருண்மையுடைத்து. அத்தகைய போகம் விரும்புவோர் முயற்சியில் இடுக்கண் பல விளைவன. அவை நேர்ந்துழி உயிர்களுக்கு உண்மை விளங்கி அவ்வின்பத்தை இகழ்வர். இகழ்வதோடு இஃதொரு மயக்கங் காரணமாக நிகழ்ந்தது என்றிரங்குவர். இவ்வாறு துன்புற்றிரங்குவோர் பல்வகை நினைவுகளை நினைந்தெண்ணுவர். துன்புறும் உயிர்கள் நினைப்பதனை உவமை முகத்தால் விளக்குவார்,

பாம்பின்வாய்த் தேரைபோலப்
பலபல நினைக்கின்றேனை

ஓம்பிநீஉய்யக் கொள்ளாய்
ஒற்றியூருடைய கோவே
(திருவொற்றியூர்—திருநேரிசை—க)

என்றுரைத்தருளினர்.

இத்துணையும் வஞ்சப் புலன்களின் மாயத்தை ஓர் உவமையால் விளக்கியதனை உணர்ந்தோமாக. இனி உயிர்களது உண்மை நிலையையும், பிறவியெடுத்து இரங்குநிலையையும், இறைவனது அருணிலையையும், இறைவனை யடைதற்குரிய சாதன நிலையையும் உவமை முகத்தான் ஒரு திருப்பாட்டில் உணர்த்துவதுணர்வாம். அது,

ஆணிபோல நீஆற்ற வலியை காண்
ஏணிபோல இழிந்தேறியும் ஏங்கியும்
தோணியாகிய சோற்றுத் துறையர்க்கே
பூணியாய்ப் பணிசெய்மட நெஞ்சமே.
(திருச்சோற்றுத்துறை—திருக்குறுந்தொகை-எ)

எனவரும். ஈண்டு உயிரினை ஆணிக்கும், அதுபடும் பிறவிதன்னை ஏணிக்கும், இறைவனைத் தோணிக்கும், சாதனமாகிய தொண்டினைச் செய்வதில் பூணிக்கும் உவமை கற்பித்துள்ளனர். ஆணியானது பசியமரத்தின்கண் அடித்துழி அம்மரத்தினில் ஊடுருவிச் சென்று பதித்து மீண்டும் எவ்வித வன்மையான முயற்சியாலும் அதனின்றும் நீக்க இயலாமையால் விளங்கும். பசுமரத்தாணி போல் நீக்கரிதாம் என்பது நம்நாட்டு முதுமொழி. உயிர் இறைவனைப் போன்று அநாதியாய் அவனைப்போலவே வியாபகமாயுள்ள பொருளாகும். ஆயினும் சார்ந்துள்ள பொருளோடு ஒற்றுமைப்பட்டு விளங்காநிற்கும். செம்பிற் களிம்புபோலுள்ள ஆணவமலத்திடை அநாதியே கலந்துநின்று அதனினின்றும் பிரித்தற்கு இயலாது பல பிறவிகளைத் தொடர்ந்தெடுக்கு மியல்பிற்று. பின் இறையருளானே ஞானத்தால் ஆணவத்தினின்றும் நீக்கப்படுதலும் இறைவனைப் பற்றி இரண்டறக் கலந்து நிற்கும் பெற்றியதாகும். இத்தகைய பிரிவரும் அத்துவித நிலையின் வன்மையை அறிவிக்கவேண்டி ஆணிபோல நீ ஆற்றவலியை காண் என்றுர். ஆற்ற என்பது மிகுதியைக் குறித்தது. அங்ஙனமாகிய வன்மையுடைய உயிர், பிறவித்தொடக்கிலுற்று மண்ணிலிழிந்தும் விண்ணேறியும் பிறப்பதும் இறப்பதுமாகும். பிறவிகள் அனைத்தானும் இளைத்து வருந்தும். இவ்வேக்க நிலையை மணிமொழியார்,

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அ சுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
—திருவாசகம்—சிவபுராணம்-26–31

என்றுணர்த்துகின்றனர். இவ்வாறு பிறவியில் வருவதும் போவதும் துன்புற்றுக் கவல்வதுமாகிய நிலையை ஏணிவழி இறங்குவதும் ஏறுவதும் அதனுலுண்டாகும் ஏக்கத்திற்கும் உவமை கூறினர். துன்ப நிலை உயிர்களுக்குப் பிறவிக்கடலுள் நேர்கின்றமையான் அவைகளை அங்குக் காப்பாற்றுவதற்கு அக்கடலுள் மூழ்காது அதனைக் கடக்கவல்ல ஒரு தோணி இன்றியமையாததாகும். அத்தோணியை இறைவனுக்கு ஒப்புமை கூறுவாராய்த் தோணியாகிய சோற்றுத்துறையருக்கே என்றுர். பிறிதோரிடத்திலும், "இடர்க்கடலுட் சுழிக்கப்பட்டு இங்கு இளைக்கின்றேற்கு அக்கரைக்கே யேறவாங்குந்தோணியை" (திருவாவடுதுறை—திருத்தாண்டகம்—ச) எனத்தோணி ஆற்றுஞ் செயலுரைத்தருளினர், தோணி தன்னகத்தேவைத்த பொருளைத் தனக்குக் கீழும் சூழ்ந்துமுள்ள நீரால் பாழ்படுதலின்றிக் கரையினிடத்தே சேர்ப்பித்து அப்பண்டத்தைப் பயனுறுமாறு செய்விக்கும். அங்ஙனமே இறைவன் தன்னைச்சார்ந்த உயிரைப் பிறவிக்கடலின் துன்பத்தினின்றும் நீக்கி முத்திப்பயனுறுமாறு செய்வன். இறைவன் இவ்வாறு அருளுதற்கு உயிர்கள் செய்பணி விதிப்பார் பூணியாய்ப் பணிசெய் மடநெஞ்சமே என்றுர். பூணி என்பது இறந்த வழக்கிற்குரிய மொழி. எருது என்னும் பொருண்மை யுடைத்து. எருதுபோல தொண்டு செய்க என்று அப்பரடிகள் அறியாமையின் அமைந்த நெஞ்சத்திற்கு அறிவுறுத்துகின்றனர். எருதின் நிலை என்கடன் பணிசெய்து கிடப்பதே என்ற தன்மையதாகும். அது நாளும் வயலில் கால் வருந்த உழுதுழைத்ததனுல் செந்நெற்பயிர் விளைவதாகும். அவ்வாறு கிடைத்த செந்நெல்

கொண்டு அதற்கு உணவு ஊட்டுவாரில்லை. நெல் விளைதற்குத் துணையாய்நின்று, அதனை யறுத்தவுடன் உலர்ந்து யாதொன்றிற்கும் உதவாத வைக்கோலையே அதனைத் தின்ன வைப்பர். எனவே தன் முயற்சியால் விளையும் பயனை விரும்பாது பணிசெயும் பான்மையுடையது எருது. பயனிடத்துப் பற்று வையாது பணி செய்வதே சிறந்த தொண்டாகும். அதனையே வேதம் நிஷ்காமிய கருமம் எனக்கூறிற்று. இறைவனும் பற்றற்றுப் பணி செய்வார்க்குப் பற்றவனுயுள்ளவன்.

மற்றும் சிவபெருமானுக்கு ஊர்தியாவது வெள்விடை. அதனை "வேண்டு நடை நடக்கும் வெள்ளேறேறி வெண்காடு மேவிய விகிர்தனரே" (திருவெண்காடு-திருத்தாண்டகம்-க) என்று அப்பர் போற்றுகின்றனர். எருதின் அடக்கமும் பணிசெயுந் திறத்தில் பற்றும் விளக்கமாம். விடையை அறவடிவம் என்பர் ஆன்றோர். அறமே இறைவனுக்கு ஊர்தி என்பது சிறப்பாகும். அறம் வழி பணிசெய்தல் வேண்டும் என்பதும் குறிப்பாகும்.

இங்ஙனமாக ஆணியை உயிருக்கும், ஏணியைப் பிறவிக்கும் உவமை கூறுவது போலன்றி இறைவனுக்கே உவமை கூறும் திருத்தாண்டகம். அது,

பேணிய நற்பிறைதவழ் செஞ்சடை யினானைப்
பித்தராம் அடியார்க்கு முத்திகாட்டும்
ஏணியை இடர்க்கடலுட் சுழிக்கப்பட்
டிங்கிளைக் கின்றேற்கு அக்கரைக்கே
[ஏறவாங்குத்
தோணியைத் தொண்டனேன் தூயசோதிச்
சுலாவெண் குழையானைச் சுடர்பொற்காசின்
ஆணியை ஆவடுதண்டுறை யுள்மேய
அரனடியே அடிநாயேன் அடைந்துய்த்
[தேனே.

(திருவாவடுதுறை—எ)

எனவரும். ஈண்டு ஏணி இறைவனைக் குறித்தது. உயிர்களைத் திருவருளால் சமயநெறிப் படிகளின் வழி செந்நெறிக்குச் செலுத்தி முத்திக்கு ஏற்றும் நிலை அறிவிப்பதாம்.

சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்துக்
குற்றமில் குணங்களொடு கூடுமடியார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலகம்ஏற்றக்
கற்றவன் இருப்பது கருப்பறியலூரே.

(திருஞானசம்பந்தர்-திருக்கருப்பறியலூர்-பண்-இந்தளம்-க)

எனவரும் திருப்பாட்டினுள்ளும் இறைவன் உயிர்களை உயர்ந்த உலகமாகிய முத்தி நிலைக்கு ஏற்றுதற்கு அறிந்தவன் என்றுரைப்பதும் அறியத்தக்கது. ஆணி என்பது மாற்றறிதற்கு அமைந்த உரையாணிப்பொன்னுகும். இஃது இறைவன் யாவர்க்கும் முதல்வனுகுந் தகுதியை அறிவிப்பதாம்.

ஈண்டுத்தோணி என்பதும் இறைவனையே குறித்தது. இடர்க்கடலுள் மிதக்கும் புணையாக உருவகஞ் செய்யப்பட்டுள்ளது. அது ஞானக்கடலுக்கும் உதவுவது என்றருளுவர் அப்பர் பெருமான். "ஞானப் பெருங் கடற்கோர் நாவாய் அன்னபூரணன்காண்" (திருக்காளத்தி-திருத்தாண்டகம்-ந) என்பதறிக. இங்ஙனமாக உவமைகள் சொல்வோன்சூழ் நிலைக்கும் கருத்துக்கும் ஏற்ற வாறு அமைவன.

சிதம்பரம் :—நடராசப்பெருமான் கோயிலில் 21-7-61ல் ஆடிச்சுவாதி வெள்ளிக்கிழமையன்று திருமுறை விழா நடைபெற்றது.

திருப்பனந்தாள் :—வீரியம்மன்கோயிலில் 4-7-61 முதல் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் திருவிளையாடற்புராணச் சொற்பொழிவு நடைபெறும்.

மதுரை :—வடக்கு ஆடிவீதி கூட்டுவழிபாட்டு மண்டபத்தில் 13-7-61 முதல் 21-7-61 வரை ஒவ்வொரு நாளும் மாலை 7 மணிக்கு பெரியபுராணச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

அழகர்கோயில் :—சுந்தரராஜப்பெருமாள் கோயிலில் ஆடிபிரம்மோற்சவம் 18-7-61 28-7-61 முடிய நடைபெற்றது.

அம்பாசமுத்திரம் :—கோயில்குளம் தென்னழகர் கோயிலில் ஆடிப்பெருக்திருவிழா 17-7-61 முதல் 27-7-61 முடிய நடைபெற்றது.

நவதிருப்பதி அநுபவம்

திரு. K. பட்சிராஜன், B.A., B.L.,

(முன் தொடர்ச்சி)

மூன்றும் பாட்டு

பூவை பைங்கிளிகள்
பந்துதூதை பூம்புட்டில்கள்
யாவையும் திருமால்
திருநாமங்களே கூவி எழும்என்
பாவைபோய் இனித்
தண்பழனத் திருக்கோளூர்க்கே
கோவை வாய் துடிப்ப
மழைக்கண்ணெடு என்செய்யுங்
கொலோ

பூவைகள், பச்சைக்கிளி, பந்து, சிறு சோற்றுப்பானை, பூம்புட்டில் இப்படிப்பட்ட அவள் விளையாட்டுப் பொருள்களால் கிட்டும் இன்பமெல்லாம் திருமாலின் திருநாமங்களையே சொல்லிப் பெற்றெழுபவளாகிய என் பாவைபோன்ற மகள் இனி குளிர்ந்த பழனங்களையுடைய திருக்கோளூர்க்குப் போய் அங்கே தன் கொவ்வைப் பழம் போன்ற உதடுகள் துடிக்க மழைபோல் கண்ணீர்பெருக நின்று என்படுகிருளோ!

பூவை

அவள் வளர்த்துவந்த பூவைகள்.

பைங்கிளிகள்

அதேபோன்று அவளால் வளர்க்கப் பட்ட பச்சைக்கிளிகள்.

பந்து

அவள் தோழிமாரோடு இடை நுடங்க ஓடி அடிக்கும் பந்துகள்.

தூதை

தோழியரோடு மணல் வீடுகட்டி சிறு சோறு சமைக்கும் சிறு மண்சட்டிகளும்.

பூம்புட்டில்கள்

அழகிய மலர்களைக் கொய்து அவள் இட்டுவைக்கும் பூக்குடலைகள்.

யாவையும்

இவையெல்லாம் என்பது ஒருபொருள்; இவற்றை எல்லாம் என்பது ஒருபொருள்; இவற்ருல் அவள் பெற்றுவந்த மனமகிழ் வெல்லாம் என்பது ஒருபொருள்.

திருமால் திருநாமங்களே கூவி எழும்

ஸ்ரீமந் நாராயணனுடைய பெயரையே கூவி எழுவனவாயின என்பது ஒருபொருள்; அவைகளை எல்லாம் என்மகள் திருமால் திருப்பெயரையிட்டே அழைப்பள் என்பது ஒருபொருள். அவள்பெற்ற மனநிறைவை எல்லாம் திருமால் திருநாமங்களையே சொல்லி அதன்மூலம் நிறைவு பெறுபவளான என் மகள் என்பது ஒருபொருள்.

முன் 'யாவையும்' என்பதில் சொன்ன மூன்று பொருள்களோடு இம்மூன்று பொருள்களும் நிரல்நிரையாக்கிச் சேர்த்துக் கொள்ளவேண்டும். இம்மூன்றிலும் முதலாவதான பொருள் பொருந்தாது. யாவையும் அவன் பெயரும் கூறிஎழ கரிய குருவிக் கணங்கள் மாலின் வரவுசொல்லி என்ருற் போல என்று சொல்லலாமோ எனில் ஒரு வேளை பூவைக்கும் பைங்கிளிக்கும் சேரலாம் அசேதனப் பொருளான பந்து தூதை பூப் புட்டில்கள் இவற்ருேடு அப்பொருள் சேராது. இதை ஈட்டில் வெகு நயமாகக் காட்டப்படுகிறது. "ஊரும் நாடும் உலக மும் தன்னைப்போல் அவனுடைய பேருந் தார்களுமே பிதற்ற" என்கிறபடியே இவை தாம் திருநாமத்தைச் சொல்லிற்ருேலா காதோ" என்று பெற்றி (வ்யாக்யானம் கேட் டவரில் ஒருவர்) நம்பிள்ளையைக் கேட்க "அதுக்கு வ்யபிசாரமுண்டு; பந்து தூதை என்றவிடத்தே தட்டுப் பிறக்கும்" என்ன "அங்ஙனயிறே" என்று இசைந்து போனுர் என்பது ஈடு. இனி இரண்டாவது பொரு

னான இவற்றை எல்லாம் திருமால் திருப் பெயரிட்டே அழைத்தாள் என்பது மிகவும் பொருந்துவது போன்றும் ரஸமாகவும் காணப்படினும் அப்பொருள் "உண்ணும் சோறுபருகு நீர் தின்னும் வெற்றிலையும் எல் லாம் கண்ணன்" என்றிருக்கும் இவளுடைய பக்தியின் முதிர்வுக்குச் சேராது என்று அதைக் கழித்தனர் ஆசார்யர்கள். இவற்றில் இரண்டாவது பொருளிலேயே மூன்றாவது பொருளின் பாவம் தொனிக்கத்தான் செய் யும். "எல்லாம் கண்ணன்" என்ற மனநிலை ஏற்பட்டால்தான் போகோபகரணப் பொருள்களை அவன் பெயரை இட்டே அழைக்கத் தோன்றும். அந்தந்தப் பொருளை அனுபவிக்கும்போது அப்பொருள் கண் ணனே என்ற நிலையோடு அனுபவிக்கையில் பிறர் அப்பொருளைத் துய்க்கும்போது அடை யும் இன்பம் போன்றின்றி தனித்த ஒரு இன்பநிலை தோன்றத்தான் செய்யும். இப்படி அப்பொருள்களை எல்லாம் அவன் பேர் கொண்டே அழைத்து அவற்றோடு அவள் பெற்ற அனுபவமெல்லாம் அவனோடு பெற்ற தாகவே உணரும் என்மகள் என்று பொருள் கொள்ள இடம் இருப்பதாகத்தான் நம் போல்வார்க்குக் காண்கிறது. எனினும் மஹாசார்யர்கள் தனியாக ஒருபொருள் காட்டியிருக்கின்றனர். , அவர்கள் திருவுள் ளப்படி என்று அவன் திருநாமத்தைச் சுவை படச் சொல்லி அதில் லயித்து அனுபவம் பெறக் கற்றாளோ அன்று முதல் அதுவரை அவளுக்கு விளையாட்டுப் பொருள்களாக உப யோகப்பட்டவையெல்லாம் இன்னாவாயின. அவற்றைப்பற்றிக் கூறி அவற்றோடு அவள் விளையாடி அனுபவிக்க வேண்டாமா என்று கூறினாலும் போதும் அவற்றைக்கொண்டு கொடுக்கக்கூட ·வேண்டாம் அவள் சீறி விழும்படியாயிற்று அவள்நிலை" என்று திரு வுள்ளம்பற்றி "உந்தையோ இறந்தனன். உம்முன் நீத்தனன். வந்ததும் அன்னைதன் வரத்தின் மைந்த! நீ அந்தமில்பேரரசளித்தி" என்று கூறிய வசிஷ்டரை தன் சிஷ்யக் கிர மத்தையும் மறந்து சபைநடுவே "நஞ்சினை நுகர் என நடுங்குவாரினும் அஞ்சினன் அயர்ந்தன"னாய் "மூன்றுலகினுக்கு ஒரு முதல்வனாய் முதல் தோன்றினன் இருக்க யான் மகுடம் சூடுதல் சான்றவர் உரை செய்த் தருமமாயதே! ஈன்றவள் செய்கை யின் இழுக்குண்டாகுமோ" என்றும் இதை நீர் நன்று என்றலின் "இடைவருகாலமீண் டிரண்டு நீத்தது. கடைவருகாலத்தின் கலி யின் ஆட்சியோ" என்று தன்னை மறந்து பேசிய பரதன் நிலையை உவமை காட்டுவர் ஆசிரியர்கள். (ஈட்டில் வால்மீக இராமா யண ச்லோகங்கள் ஆளப்பட்டன. ஓரளவு அவற்றை ஒட்டிய கம்பர் பாட்டுக்கள் இங்கு காட்டப்பெற்றன.)

என்பாவை

சிலையில் வடித்தாற்போன்ற வடிவை யுடைய என் பெண். பிற பெண்களுக்கில் லாத வடிவழகும் பெண்தன்மையும் உடைய என்மகள்.

இனி

'லீலோபகரணங்களால கொள்ளும் கார்யமும் அவனேயாம்படியான இந்த ப்ரா வண்யத்துக்கு (காதல் முதிர்ச்சிக்கு) மேலே அங்கு போய்ப் பெறுவது என்னுகப் போனாளோ' என்பது ஈடு.

போய்

இவ்வளவு அன்புடன் பெற்று வளர்த்த என்னை நீங்கிப்போய். போகிறேன் என்று ஒரு வார்த்தைகூடச் சொல்லாதே அவள் எங்கு போனாளோ என்று நான் தவிக்கும் படி என்னை விட்டுப்போய்.

தண்பழனத் திருக்கோளூர்க்கே

குளிர்ந்த மருத வைப்பையுடைய திருக் கோளூர்க்கு. அவ்வூரில் சென்று.

கோவை வாய் துடிப்ப

கொவ்வைப் பழம்போன்ற தன் அத ரங்கள் நெளிக்க. ஆங்குபோய் ஏதேனும் பேசுவளோ! பேசத்தான் மனத்திண்மை யிருக்குமோ! இராது. "போகும்போது அவனைக் கண்டவுடன் "பிரியேன் என்று பிரிந்தாய்; வருகிறேன் என்று வந்திலை; என்னைத் தனியே இட்டுவைத்தாய்; நான் வருமளவும் இருந்தாய்" என்றாற்போலே யிருக்கிற சில சொல்ல நினைக்குமே. அது தோற்றும்படி உதடு நெளிக்கிறபடி" என் பது ஈடு. அவன்பால் இவர்கள் கூற நினைத்த குறைகள் அவனைக் கண்டதும் எங்கேயோ பறந்து விடுவது நாயகிக்கு இயல்பு. அந் நாயகி பாவம்பெற்ற பக்தர்களுக்கியல்பு

நாயகன் வந்தால் "துனிப்பேன் யானென் பேன் மன் அங்கிலேயே அவற் காணில் தனித்தே தாழும்இத் தனியில் நெஞ்சே" என்று தலைவி கூற்றுகவரும் கலித்தொகை. "காணுங்கால் காணேன் தவறாய; காணக் கால் காணேன் தவறல்லவை" என்பது குறள். இத்தகைய உத்தம நாயகி பாவ முடைய பத்தர் நிலையும் இதுவே.

இராமனை மீள அழைக்கச் சென்ற பரதன் இராமனைக் கண்டால் என்ன சொல்லவேண் டும் என்று போகும் வழியிலேயே பயிற்சி செய்துகொண்டே போனானும். "தருமத்தை நோக்கினையில்லை. அருளைத் துறந்தாய். முறைமையைக் கைவிட்டாய்" என்றெல்லாம் சொல்ல வேண்டுமென்று அவ்வார்த்தைகளை அத்யயனம் செய்வார் போன்று உருப்போட் டுக்கொண்டே போனான். இராமனைப் பார்த் தான். அந்த வடிவழகிலே ஈடுபட்டவன் சொல்ல வந்ததைச் சொல்லாமல்மட்டும் விட வில்லை. மறந்தே போய்விட்டான் என்கிறார் கம்பர்.

"அறந்தனை நினைந்திலை அருளை நீத்தனை
துறந்தனை முறைமையை என்னும் சொல்லினன்
மறந்தனன் மலரடி வந்து வீழ்ந்தனன்"

என்பது கம்பர் வாக்கு.

மழைக்கண்ணொடு

கண்கள் நீர்மேகம்போலக் கண்ணீர் தாரையாகப் பெருக. அவனைக்கண்ட மகிழ்ச் சியிலே வரும் ஆனந்தக் கண்ணீர். இப்படிச் சொல்ல வந்ததைச் சொல்ல வொட்டாது மனம் மறக்கடிக்க பார்க்கவேண்டியவனை நன்கு பார்த்து அனுபவிக்க வொட்டாமல் கண்ணீர் கண்ணை மறைக்க.

என் செய்யுங்கொலோ

என்ன பாடுபடுகிறாளோ. அப்போதைய அவள் சோபையைக் காண முடியாது போனோமே என்று வருந்துகிறாள் தாய். "நம்மையும் பிறரையும் விட்டு அவன் திரு நாமங்களை அநுபவிக்கிற போதை அழகு காணப்பெற்றோம்! அவன் தன்னையே கண் டனுபவிக்கிற போதை அழகு காணப்பெற்றி லோமே! அநுஸந்தான வேளையிற் போலன் றிறே கண்டால் பிறக்கும் விகாரங்கள்...... அலாபத்தோடேயிருக்கும் இருப்புக் கண் டேன். லாபத்தோடேயிருக்கும் இருப்புக் காணப்பெற்றிலேன் என்கிறாள்" என்பது ஈடு.

நாலாம் பாட்டு

கொல்லை என்பர் கொலோ? குணம் மிக்கனள்
[என்பர் கொலோ?
சில்லைவாய்ப் பெண்டுகள் அயற்சேரி
[உள்ளாரும் எல்லே!
செல்வல் மல்கி அவன்கிடந்த திருக்கோளூர்க்கே
மெல்லிடை நுடங்க இளமான் செல்ல மேவினளே.

இளம் மான்போன்ற என் மகள் பெரு கிய செல்வத்தையுடையவனான அவன் கண் வளர்ந்தருளும் திருக்கோளூருக்கு, மெல்லிய தன் இடைதுவளப் போவதாக ஒருப்பட்டுப் போய்விட்டாள். (இப்படிப்போன அவளை) சிலுகிடுகையே செய்யும் வாய்படைத்த இச் சேரிப் பெண்களும், அயற்சேரியிலுள்ளா ரும், வரம்பழிந்தவள் என்று சொல்லுவார் களோ அன்றி நல்ல குணவதி என்று சொல் வார்களோ ஐயோ என்னவாகுமோ?

கொல்லை என்பர் கொலோ

வரம் பழிந்தவள், கட்டு மீறியவள் என்று சொல்லுவார்களோ? ஒரு கன்னிக் குரிய காவலை மீறியவள்; தன் நிலைமைக்கு மீறிய ஒழுக்கமுடையவள் என்பரோ?என்று பழிப்பரோ.

குணம் மிக்கனள் என்பர் கொலோ

தன் சொரூபத்துக்கும் குணத்துக்கும் பொருந்தினதையே செய்தாள். அப்பெண் நல்ல குணவதி என்று கொண்டாடுவரோ.

இவ்விரண்டு வினாக்களுக்கும் பல நிலை யின் பொருள் கூட்டப்படுகிறது ஈட்டிலே அது வருமாறு:—

இவள் விதி அதிக்ரமம் பண்ணினாள் என்பர்களோ அன்றிக்கே ஸித்தாந்தம் தன் னையே சொல்லுவார்களோ; ஓரளவிலே நின்று நிஷேதித்தவற்றைக் கொண்டு இது அப்ராப்தம் என்பர்களோ: ருசீ ஸ்வபாவத் தாலும் இது ப்ராப்தம் என்பார்களோ; ஸாதன விதிகளிலே நின்று தடுமாறுவார் களோ: ஸ்வஸ்வரூபத்தைப் பார்த்துத் தெளி வர்களோ; உபாயாம்சத்தைப்பற்றி நின்று

இது கடவதல்ல என்பர்களோ: ப்ராப்தாவின் (அடைபவனின்) சொரூபத்தையும் ப்ராப்ய (அடையப்படும் பொருள்) ஸ்வரூபத்தையும் பார்த்து இது கடவது என்பார்களோ; அங்ய நிஷேதபூர்வகமான ஸ்வரூபஞானம் பிறந்தால் புறப்பட ப்ராப்தி இல்லை; ஸ்வரூபாநு ரூப மான் ப்ராப்யாநுஸந்தானம் பண்ணினால் போய்ப்புக்கல்லது நிற்கவொண்ணாது; விதி யைப்பார்த்து கர்ஹிப்பர்களோ; காமவசனத் தைப் பார்த்து நன்றென்பர்களோ?

சில்லைவாய்ப் பெண்டுகள்

எப்போதும் ஏதேனும் பேசிச் சண்டை யிடும் வாய்படைத்தபெண்டிர். வாயாடிகள் ஏதேனும் ஒன்றைப்பற்றி அது தமக்கு சம் பந்தமாயினும் அல்லவாயினும், அதைப்பற்றி அலசிப் பேசிக் கூச்சலிடுமவர். (இவர்களை (ஸ்வாபதேசத்தில்) அத்யவஸாய நிஷ்டர் என்று அரும்பதம் கூறும்.)

அயற்சேரி உள்ளாரும்

பிறசேரியில் உள்ளவரும். என் மகள் இருந்த ஊரிலே இருந்து அவள் நிலையெல் லாம் கண்டறியாதவர்கள். ஏதும் நேரிலறி யாராய் ஏதோ கேள்வி யுற்றதைக்கொண்டு பேசுமவர். (இவர்களை த்வராநிஷ்டர் என்று கூறும் அரும்பதம்.)

எல்லே!

பெண்டிரும் அயற்சேரியரும் மேலே சொன்ன இரண்டில் என் பெண்ணை எவ் வகையில் சேர்க்கப்போகின்றார்களோ? அவளைப் பழித்து ஒதுக்குவார்களோ அல்லது புகழ்ந்து போற்றுவார்களோ? எப்படி முடி யுமோ என்று தாய் அங்கலாய்க்கிறாள்.

செல்வம் மல்கி

தன்னுடைய செல்வமெல்லாம் பெருகித் தோன்றும்படி, எல்லாச் செல்வங்களும், பொருள், வடிவு, குணம் முதலிய எண் பொருளும்.

அவன் கிடந்த

அவன் கண் வளர்ந்தருளிய அவன் வருகை பார்த்து இவள் கிடக்கவேண்டி யிருக்க அந்நிலை மாறி இவள் வருகைபார்த்து அவன் சாய்ந்து கிடக்கிற.

திருக்கோளூர்க்கே

செல்வமெல்லாம் கொண்ட ஊரான திருக்கோளூர்க்கு. செல்வம் மல்கி அவன் கிடந்ததாலே அப்பேர் பெற்ற ஊர்.

மெல்லிடை நுடங்க

தன் மெல்லிய இடை துவள. இழை போன்ற தன் நுண் மருங்குல் எங்கு இறுமோ என்று கண்டார் அஞ்சும்வண்ணம் துவண்டு துவண்டு அசைய. "இவ்விடை யைக்கொண்டு இவள் நடக்கப்புக்கால் எதிரே புறப்பட்டு வரவேண்டாவோ" என்று ஈடு.

இளமான்

இன்னும் பருவம் நன்கு முதிராத மான் போன்றவள். தன் வலியும், நிலையும் நன் குணராதே வயதால் வந்த துணிவு மட்டுமே யுள்ளமான் கன்று இளங்கன்றுதலின் தான் போம் வழியுள்ள பயங்களை யறியாத நிலை.

செல்ல மேவினள்

போதலைப் பொருந்தினாள். போனாள். "இங்கிருந்த நாள் நம்முடைய இத வசனம் கேட்கிலன்றோ வழியிலுள்ளார் பழி கேட் பது அவள்; இவள் வழிப்பட்டால் நல்வழியி லுள்ளார் வார்த்தை கேட்குமதொழியப் பெருவழியானுர் வார்த்தை கேளாள்" என் பது ஈட்டில் முடிவிலே காணப்பெறும் பொருள் பொதிந்த கூற்று.

ஐந்தாம் பாட்டு

மேவி நைந்து நைந்து விளையாடலுறாள் என்சிறுத்
தேவிபோய் இனித்தன் திருமால் திருக்கோளூரில்
பூவியல் பொழிலும் தடமும் அவன் கோயிலும்
[கண்டு
ஆவி உள்குளிர எங்ஙனே உகக்குங்கொல் இன்றே.

அவனுடைய குணங்கள் அழகுகளிலே மனம் பொருந்த கணம் கணம் மனம் நைந்து தன் வயதிற்குத்தக்க விளையாடல்களிலே பொருந்தாதவளான என் சிறிய பருவத்த ளாகிய பெண் இங்கு விட்டுப்போய் தன் காதலனாகிய இலக்ஷ்மீபதியின் திருக்கோளூ ரிலே பூக்கள்மிகுந்த சோலைகளையும் தடாகங் களையும் அவன் உறையும் கோயிலையும் கண்டு இனி தன் மனம் உள்ளே குளிரும்படி எப்படி மகிழ்கிறாளோ.

மேவி

பகவானுடைய அழகிலும் குணத்திலும் தன் மனத்தைப் பொருந்தவிட்டு.

நைந்து நைந்து

அக்குணங்களிலே ஈடுபட்டுத் தன்னை யழித்தழித்து.

எங்களோடு பொருந்தாள். ஒருகால் நைந்தால் அது வேண்டாம் என்று விடுவாளா. இல்லை. மீண்டும் அவன் குணங்களிலே மூழ்கித்தானழிவாள். இப்படி நைந்து நைந்து போதலையே காலக்ஷேபமாகக் கொண்டவள். அவன் விஷயத்தை "நினைதொறும் சொல்லும் தொறும் நெஞ்சிடிந்துகும்" விஷயம் நிர்க்குணமானதல்லவே. உயர்வற உயர் நலமுடையவனையன்றோ மேவினாள். இப்படி நையப் பெறுதபோது ஆறியிருக்கமாட்டாதே மீண்டும் நைவதற்கே துடிக்கும்.

விளையாடலுறாள்

இப் போதுபோக்கு ருசித்தவாறே பிற விளையாட்டுக்களை வெறுத்தொதுக்கினாள். இதற்கே உள்ள நேரம் பற்றாதபோது வேறு விளையாட அவகாசமே கிடையாது. அவளுக்கு "மாற்பால் மனம் சுழிப்ப மங்கையர் தோள்கைவிட்டு" என்றாற்போல இவன் குணக்கடலிலே திளைக்க ஒருப்பட்டாள் பிற பொழுது போக்குக்களை விட்டாள்.

என் சிறுத்தேவி

என் சிறிய தேவியார், என் பெண் என்று சொல்ல இனி வழியில்லையே. இவளுக்குத்தான் என்னுடைய பெண் என்ற நினைவே இல்லை. தவிர அவள் செயல்களைக் கண்டால் நானும் இனியும் இவள் என்பெண் என்று உறவு கொண்டாட அஞ்சும் நிலையல்லவோ உண்டாயிருக்கிறது, அதனாலே பெண் என்னாமல் சிறு தேவி என்கிறாள். மேலே 'திருமால்' என்று பெரிய தேவியோடு கூடியவன் என வருதலின் இவளைச் சிறிய தேவியார் என்கிறாள். இப்போது இவள் நிலையைப் பார்த்தால் இவளை என் பெண் என்று நினைப்பது தவறு. 'கண்ணபுரம் தொழும் பிள்ளையைப் பிள்ளையென் றெண்ணப் பெறுவரே" என்றாற்போல இப்படிப்பட்ட ஏற்றம் பெற்றவளைப்போய் நாம் இதம் சொல்லி இச்செயலினின்று இவளை மீட்பதாக முயன்றோமே. என்ன குற்றம் செய்தோம். "இவளுக்கு இதம் சொன்ன நாக்கைக்கழுவவேணுமென்கிறார்" என்பது ஈடு.

இனிப்போய்

இப்போது இவளுக்குள்ள ஏற்றத்தை விட மேலே என்ன கிடைக்குமென்று கிடைக்குமென்று போனாள். இங்கே தன் பருவத்துக்கும் இயல்புக்கும் மீறின மனப்பரிபாகம் பெற்ற பின்பு வேறென்ன தேடிப் போனாள். பரமபதத்தில் முக்தனுக்குப் பிறந்த ஞானம் இவளுக்கு இங்கே இப்போதே பிறந்திருக்க இனி அங்குபோய் வேறென்ன அநுபவம் தேடவேண்டும்?

தன் திருமால் திருக்கோளூரில்

தன்னுடைய திருமகள் கேள்வனுடைய திருக்கோளூரிலே. பெரிய பிராட்டியாரை இங்கே கூறியபடியாலே முன்னே" சிறுத் தேவி" என்னப்பட்டது. நாயகியாகப் பற்றும்போதும் பெரிய பிராட்டியாரை முன்னாகை இட்டுப் பற்றுகிறாள், அதனால் திருமாற்றாளன்றி இவளுக்குப் புருஷகாரியும் ஆவாள்போல. "அலர்வாய் மழைக்கண் மடந்தை அரவணை ஏற மண்மாதர் விண்வாய் அழைத்துப் புலம்பி" என்ற நிலையன்று இங்கு.

பூவியல் பொழிலும் தடமும்

பூக்கள் மலிந்த சோலைகளையும் தடாகங்களையும். இலையும் கொம்பும் தெரியாதபடி குலுங்கப்பூத்து எங்குமே பூமயமாய்க் காட்சி தரும் சோலைகளும்; அதுபோன்று நீர்ப் பரப்பு மாறப்பூத்த தடாகங்கள் தாமும் பூத்துப் பொழிலையும் வளர்க்கும் தடாகங்கள்.

அவன் கோயிலும் கண்டு

அவன் விரும்பி வாழும் கோயிலையும் கண்டு "திவ்யாத்ம ஸ்வரூபத்துக்குப் ப்ரகாசகமான திவ்யமங்கள விக்கிரகம் போலே அவையிரண்டுக்கும் பிரகாசகமான கோயில். கோயிலைக் கண்டபோதே உள்ளுண்டான வஸ்துவையும் அறுதியிடலாயிருக்கை. உள்ளில் பொன்னுக்குத்தக்க செப்பாயிருக்குமிறே" என்பது ஈடு.

ஆவி உள்குளிர

உள்ளே தவிப்பாலே வெட்டிறக் கொண்ட நெஞ்சம் அவ்வெடிப்பு மாறிக் குளிர. இங்கே ஒரு ஐதிஹ்யம் காண்கிறது:— இவ்விடத்தைப் பட்டர் அருளிச்செய்யா நிற்கச்செய்தே மேலெழ அருளிச் செய்தாராய், சீராமப்பிள்ளை இருந்தவர் "சீயா! எம்பார் அருளிச் செய்யும்போது ஆவி உள்குளிர என்று முகந்துகொண்டருளிச் செய்யும்படி கேட்டறிகையில்லையோ?" என்றருளிச் செய்தார்.

எங்ஙனனே உகக்குங்கொல் இன்றே

தான் இளையளாயிருந்தும், ஞானம் முதிர்ந்து புறம்புள்ளவற்றை ஒதுக்கி அவனை நினைந்து கரையும் அழகை அநுபவித்தேன்; இன்று அவனைக் கண்டநுபவிக்கிற அழகைக் காணப்பெற்றிலனே என்று தாய் கவல்கிறாள். "எனக்கு சோகத்தாலே சூன்யமாய்க் கிடக்கிற இன்று அவளுக்கு அநுபவத்தாலே அடிக்கழஞ்சு பெற்றுச் செல்லுகிறதே!" என்பது ஈடு. இப்படிக் கோயிலைக் கண்டு அனுபவிப்பாரைக் கண்டு அனுபவிக்கை பற்றி ஈட்டில் இரண்டு குறிப்புகள் காண்கின்றன.

ஒன்று "பிள்ளை திருநறையூர்அரையரும் பட்டருமாக உள்ளே ப்ரதக்ஷிணம் பண்ணநிற்க இட்ட அடி மாறியிடமாட்டாதே கண்களாலே பருகுவாரைப் போலே பார்த்து வாழ்ந்துகொண்டு போகிறபடியைப் பின்னே நின்று கண்டு அனுபவித்தேன்" என்று நஞ்சீயர் அருளிச்செய்வர்.

மற்றொன்று

ஆச்சானும் ஆண்டானுமாகக் கிழக்கே நடக்கிறபோது (குடந்தைக்கு எழுந்தருளும் போது) திருப்பேருக்கு ('திருப்பேர்' நகருக்கு) கிழக்குப் போகவும் மாட்டாதே ஏறித் திருவடி தொழவும் மாட்டாதே திருப்பேர் நகரான் கோயிலைப் பார்த்துக்கொண்டு இருந்தார்களாம். (தொடரும்)

கும்பகோணம்:—ஆதிகும்பேசுவரசுவாமி கோயிலில் திருக்கல்யாணத் திருவிழா 24-5-61 முதல் 30-5-61 வரை நடைபெற்றதும். இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

சீரவணபுரம்:—கௌமார மடாலயத்தில் திருக்கோயில் கொண்டு விளங்கும் திருமுருகப் பெருமானுக்கு வைகாசி விசாக விழாவும், வசந்த விழாவும் 28–5–61-ல் நடைபெற்றன.

திருப்புன்கூர்:—சிவலோகநாதசுவாமி கோயிலில் வைசாக உற்சவம் 28-5-61 முதல் 30-5-61 வரை நடைபெற்றது. இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

மதுரை:—திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்தில் திருஞானசம்பந்த சற்குருநாத தேசிக சுவாமிகளது குருபூஜை விழா 27-5-61 முதல் 31-5-61 வரை நடைபெற்றது.

தருமபுரம்:—தருமபுரம் ஆதீனம் ஞானபுரீசுரசுவாமி கோயிலில் உற்சவம் 25-5-61 முதல் 6-6-61 வரை நடைபெற்றது. 29-5-61 முதல் 28-5-61 வரை சிவஞானசித்தியார் பாடவகுப்பும், 29–5–61 முதல் 5-5-61 வரை சமயப் பேரவைகளும் நடைபெற்றன.

இளங்கம்பூர்:—கைலாசநாதசுவாமி கோயிலில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 19-6-61 முதல் 23-6-61 வரை நடைபெற்றது.

சென்னை-தூளை:—சுந்தரராஜப்பெருமாள் கோயிலில் பிரம்மோற்சவம் 23–6–61 முதல் 5-7-61 வரை நடைபெற்றது.

வீரவநல்லூர்:—சுவாமி பூமிநாதர் மரகதாம்பாள் திருக்கோயில் வருஷாபிஷேகம் 24-6-61-ல் நடைபெற்றது. அன்று இரவு 8 மணிக்கு தெப்பத் திருவிழாவும் நடைபெற்றது.

திருவாலங்காட்டுக் கல்வெட்டு வரலாறு*

[வித்துவான் திரு. வை. சுந்தரேசவாண்டையார், அண்ணமலைப் பல்கலைக்கழகம்.]

இவ்வூர்த் திருவாலங்காடுடையார் திருக்கோயிலில் கங்கபல்லவரில், நிருபதுங்க தேவர் காலத்திலும், பிற்காலச் சோழமன்னர்களில், முதலாம் இராசராச சோழன், முதலாம் இராசேந்திரன், முதலாம் இராசாதிராசன், முதற் குலோத்துங்கள், விக்கிரமசோழன், இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதிராசன், மூன்றும் குலோத்துங்கன், மூன்றும் இராசராசன் இவர்கள் காலங்களிலும்; பாண்டிய மன்னர்களில் சடாவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி சுந்தரபாண்டிய தேவன் காலத்திலும்; விசயநகர பரம்பரையில் வீரப்பிரதாப தேவமகாராயர், இவர் மகனூர் மல்லிகார்ச்சுன தேவ மகாராயர், வீரப்பிரதாப சதாசிவமகாராயர், வீரப்பிரதாப திருமலைதேவ மகாராயர், கம்பண்ண உடையார் இவர்கள் காலங்களிலும்; சாளுவ பரம்பரையில் சாளுவ திம்மைய தேவ மகாராயர் காலத்திலும்; செதுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவைகளன்றி முதலாம் இராசேந்திர சோழதேவர் காலத்தில் ஏற்பட்ட செப்பேடுகளும் (Copper-plates) இருக்கின்றன.

இறைவர், இறைவியாரின் திருப்பெயர்கள்

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவர் திருவாலங்காடுடையார், திருவாலங்காடுடைய மகாதேவர், திருவாலங்காடுடைய நாயனூர் என்னும் திருப்பெயர்களாலும்; இறைவியார் திருக்காமக்கோட்டமுடைய பெரியநாச்சியார், வண்டுவார்குழலி நாச்சியார், என முறையே இரண்டாம் இராசாதிராசன் காலத்துக் கல்வெட்டிலும், திருமலைதேவர் காலத்தில் (சகம் 1439 அதாவது கி. பி. 1517) ஏற்பட்ட கல்வெட்டிலும் கூறப்பெற்றுள்ளனர்.

நடராசப் பெருமானின் திருப்பெயர்

திருவரங்கில் அண்டமுற நிமிர்ந்தருளின நாயனூர் என்பதாகும். இச்செய்தி மூன்றுங் குலோத்துங்க சோழதேவரின் முப்பத்திரண்டாம் ஆண்டுக் கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளது. சேக்கிழார் பெருந்தகையாரும் "ஆலங்காடதனில் அண்டமுற நிமிர்ந்தாடுகின்ற கோலங் காண்பொழுது" என்று குறித்திருப்பது நோக்குதற்குரியதாகும்.

தட்சிணுமூர்த்தி தேவரைப்பற்றிய செய்தி

இத்தேவர்க்கு அமாவாசி நாள் அமுது செய்தருளுதற்குச் சோழ மண்டலத்து குலோத்துங்க சோழவளநாட்டுச் செற்றூர்க் கூற்றத்து இடைக்குறும்பூருடையான் அரையன் இராசராச தேவன், நடுவில் மலைப்பெரு நாட்டுப் பொளிபாக்கத்தில் கங்கனேரித் தூம்புக்குக் கிழக்கெல்லை தொழுக்கட்டைமடத்துக்கு மேற்கும், தெற்கெல்லை அப்புத் தலைக்குண்டியின் வடவரம்புக்கு வடக்கும், மேற்கெல்லை பழையனூர் எல்லைக்குக் கிழக்கும், வடக்கெல்லை கங்கனேரித் தூம்பினின்றும் கிழக்கு நோக்கிப்போன காலுக்குத் தெற்கும், ஆக இந்த நான்கு எல்லைக்குட்பட்ட தடி ஒன்று மிகுதிக் குறைவு அகப்பட முந்நூறு குழி நிலத்தை வாங்கி அளித்திருந்தான் இது நிகழ்ந்தது கோப் பரகேசரி வர்மரான ஸ்ரீபராந்தக தேவரின் ஒன்பதாம் இராச்சிய ஆண்டாகும். (அதாவது கி. பி. 916)

---

*See the Annual reports on South Indian Epigraphy
for the years 1896—Nos 14—16, 408
1905— „ 498
South Indian Inscriptions Volume III No. 65
do do V Nos—878—879
Epigraphia Indica vol, VII—Page 119.
do „ Vol. 22—page 86
The Tiruvalangadu copper plates of Rajendra chola I

கொடி மரத்திற்குப் பித்தளைத் தகடு இட்டவர்

சாளுவ பரம்பரையைச் சேர்ந்த திப்பையதேவ மகாராயர் சகம் 1363 அதாவது கி. பி. 1441-இல் இக்கோயில் கொடிமரத்திற்குப் பித்தளைத் தகடு இட்டுள்ளனர்.

பொதுச் செய்திகள்

இக்கோயிலில் உள்ள இரண்டாம் இராசேந்திரசோழ தேவரின் கல்வெட்டு "திருமன்னி விளங்கும் இருகுவடனைய தந் தோளும் வாளும் துணைக்கொளலர் வஞ்சனை கடந்து வயிராகரத்துக் குஞ்சரகுழாம்பல வாரி அஞ்சலில் சக்கரக் கோட்டத்துத் தாரவரசனைத் திக்குநிகழத் திறைகொண்டருளி" எனத் தொடங்குகின்றது. இவ்வரசன் திருவாலங்காட்டு நிலத்தில் இராசேந்திர சோழப்பாடி என்னும் பெயரால் இருபத்தைந்து சங்கரப்பாடிகளைக் குடியேற்றி அக்குடிகளுக்குக் குடியிருக்கை, தண்ணீர்க் குளம், தடாகம், கன்றுமேய் பாழ்நிலம், முதலானவைகளை அமைத்துத் தருமாறு கட்டளையிட்டிருந்தான்.

சிங்கள அரசனாகிய பராக்கிரமபாகு சோழ நாட்டின்மீது படையெடுத்து வந்ததை, பழையனூர் வனமுடையான் அம்மையப்பனாகிய அண்பனன் பல்லவரையன் தோற்றோடுமாறு செய்ததற்காக, "கடல்சூழ்ந்த"—எனத் தொடங்கும் மெய்க்கீர்த்தியையுடைய இராசகேசரி வர்மனாகிய இரண்டாம் இராசராச தேவன், அந்த அண்பனன் பல்லவரையனுக்கு அருமொழி தேவவளநாட்டு, நென்மலி நாட்டு இராசராசன் பழையனூரில் பத்து வேலி நிலத்தைக் கொடுத்திருந்தான். (Epigraphia Indica Volume 22 page 86.)

குன்றவத்தனக்கோட்டத்து இலத்தூர் நாட்டு அரும்பாக்கம் என்னும் ஊரிலிருந்த அறநிலைவிசாகன் திரைலோக்கிய மல்லன் வத்சராசன் பாரதத்தை இனிய தமிழில் எழுதியுள்ளான். இச்செய்தி இக்கோயிலிலுள்ள மூன்றாங் குலோத்துங்க சோழதேவரின் முப்பத்திரண்டாம் ஆண்டுக் கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது. இக் கோயிலிலுள்ள விக்கிரமசோழ தேவரின் ஏழாமாண்டுக் கல்வெட்டு திருமயிலாப்பூரை புலியூர்க்கோட்டத்து திருமயிலாப்பில் எனக் கூறுகின்றது அவ்வூர்த் தேவாரத்திலும் மயிலாப்பில் என்று குறித்திருப்பது காணத்தக்கது.

மணவிற்கோட்டத்து, கன்றூர்நாட்டுக் கோட்டூராகிய சோழவித்யாதர சதுர்வேதி மங்கலம், இலம்பயங் கோட்டூர் என்னும் பெயருடைய தென்பதையும், சுங்கந் தவிர்த்த குலோத்துங்க சோழனின் (குலோத்துங்கன் I) 16-ஆம் ஆண்டில் நிலம் அளக்கப்பட்ட செய்தியையும், திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் இராசாதிராசனின் (இரண்டாம் இராசாதிராசன்) பதினொன்றும் ஆண்டுக் கல்வெட்டு அறிவிக்கின்றது.

திருவாலங்காடுடையார்க்கு அளிக்கப்பட்ட நிவந்தங்கள்

திருவாலங்காடுடையார் சித்திரைத் திருநாள் எழுந்தருளுவதற்கு, திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவிசயகண்ட கோபால தேவர் தம் பதினெட்டாம் ஆட்சியாண்டில் சயங்கொண்ட சோழமண்டலத்து மேலானூரை இறையிலி தேவதானமாக விட்டிருந்தார். தெலுங்கர் தலைவனாகிய தமனுசித்தி திருவாலங்காட்டு இறைவர்க்குச் சொந்தமான ஊர்களில் தமக்குச் சேரவேண்டிய இறைப் பணத்தை எல்லாம் இத் திருவாலங்காட்டு இறைவர்க்கே கொடுத்துள்ளான். இது நிகழ்ந்தது சகம் 1129 ஆகும். (Epigraphia Indica Volume VII)

திருவாலங்காட்டுச் செப்பேடுகள்

இச் செப்பேடுகள் திருவாலங்காட்டில் எழுந்தருளியிருக்கும் அம்மைநாச்சியார்க்கும், திருவாலங்காடுடைய மகாதேவர்க்கும் முதலாம் இராசேந்திரசோழன் நிவந்தம் அளித்ததைக் கூறுவன ஆகும். இவைகள் 1905-இல் கண்டுபிடிக்கப்பட்டன. முப்பத்தொன்று செப்பேடுகளை உடையன. இச் செப்பேடுகளும், கனத்த இலச்சினையும் (The massive seal) உள்பட எட்டு மணங்கு, இரண்டு வீசை, இரண்டு பலம் நிறைகளை உடையன. இவைகள் லெய்டன் நகரில் இருக்கும் பெரிய செப்பேடு (Large Leyden plates) களைக் காட்டிலும் சோழ அரசர்களைப்பற்றி மிகுதியாகக் கூறுகின்றன. இவைகளிலுள்ள வடமொழிப் பகுதியும் தமிழ்ப் பகுதியும் வெவ்வேறு காலங்களில் எழுதப்பட்டன என

அறிஞர்கள் கருதுகின்றனர். வடமொழிப் பகுதி 137 பாடல்களுடன் கூடிய 271 வரிகளை உடையது. தமிழ்ப் பகுதி 524 வரிகளை உடையது. வடமொழிப் பாடல்களை ஆக்கியவர் சங்கரர் மகனும் சிறந்த புலவரும் ஆகிய நாராயணன் ஆவர். இச் செப்பேடுகளில் எழுதியவர் காஞ்சிபுரத்தில் தோன்றிய ஆராவமுதரும், அவரது தம்பிமார்களாகிய அரங்கன், தாமோதரன் என்பவர்களும், மேற்குறித்த ஆராவமுதர் மகனாகிய புருடோத்தமனும் ஆவர்.

இச்செப்பேடுகளால் அறியப்படும் நிவந்தங்கள்

(1) சயங்கொண்ட சோழமண்டலத்து, மணவிற்கோட்டத்துப் பழையனூர் நாட்டுப் பழையனூர் உடையார் திருவாலங்காடுடையார் கோயிலில் அம்மைநாச்சியார்க்குத் தேவதானம் இடவேண்டுமென்று மகாதேவ பிடாரர் விண்ணப்பித்தவாறு, முதலாம் இராசேந்திர சோழதேவர், ஈக்காட்டுக் கோட்டத்துக் கீழ்க் கற்றியூர்நாட்டு அம்மைகேசரி நன்செய் புன்செய் நத்தம் உட்பட நிலம் பதினன்கரையும், சேட்டமங்கலத்து நத்தமும் ஆற்றுப் படுகையும் உட்பட நிலம் பதினொன்றும் ஆக நிலம் இருபத்தைந்தரைவேலியும் அம்மை நாச்சியாருக்கு முன்புடையாரையும் பழம் பெயரையும் தவிர்த்து திருநாமத்துக்காணி இறையிலி தேவதானமாக இட்டுள்ளனர். இதை இவர் முடிகொண்ட சோழபுரத்தில் சனிமண்டபத்திலிருந்து தம் ஆட்சியாண்டு ஆறு, நாள் நூற்றுஇருபதில் கொடுத்துள்ளனர்.

(2) மேல்மலைப் பழையனூர் நாட்டுப் பழையனூர், நடுவில் மலைப்பெருமூர்நாட்டுச் சிங்களாந்தகச் சதுர்ப்பேதி மங்கலத்துச் சபையார்க்கு வெள்ளான் வகைப் பிரமதேயமாய் இருந்து வந்தது. முதலாம் இராசேந்திரசோழன் தன் ஆறும் ஆட்சியாண்டில் இப்பழையனூர்க்குப் பதில் சிங்களாந்தகச் சதுர்ப்பேதி மங்கலத்தார்க்கு வேறு ஊர் கொடுப்பதாகச் சொல்லி, இப்பழையனூரை வெள்ளான் வகையிலிருந்து இறக்கி, இவ்வூர் முன் இறுத்தபடி பள்ளியும் உட்பட நெல் மூவாயிரத்து இருநூற்று எண்பத்தெண்கலனே எழுகுறுணி ஐந்து நாழியும், பொன் நூற்றுத் தொண்ணூற்று முக்கழஞ்சே மஞ்சாடியும் ஒருமாவும் இப்பழையனூர் திருவாலங்காடுடைய மகாதேவர்க்கு வேண்டும் நிவந்தங்களுக்கு ஆண்டாண்டு தோறும் நின்றிறையாய் (permamently settled tax) இறுக்க வேண்டுமென்று மேல்மலைப் பழையனூர்நாட்டு நாட்டார்க்கும், பிரமதேயக் கிழவர்க்கும், தேவதானம், பள்ளிச்சந்தம், கணி முற்றூட்டு, வெட்டிப்பேறு, பழவறச் சாலாபோகம் உள்ளிட்ட ஊர்களில் உள்ளார்க்கும், நகரங்களில் உள்ளார்க்கும் அறிவித்து வரியில் இட்டுக் கொள்ளுமாறு (should be reqistered in the account book) பணித்துள்ளான்.

இச்செப்பேடுகளால் அறியப்படும் செய்திகள்

திருவாலங்காடுடைய மகாதேவர் அம்மையப்பர் என்னும் திருப்பெயரால் இச் செப்பேடுகளிலுள்ள வடமொழிப் பாடலில் (verse 128*) குறிக்கப்பெற்றுள்ளனர். இப்பெயரைச் சேக்கிழார் பெருந்தகையார் "எம்மை ஆளும் அம்மை திருத்தலையாலே நடந்துபோற்றும் அம்மையப்பர் திருவாலங்காடாம்" என்று எடுத்தாண்டிருப்பது பெரிதும் மகிழ்வைத் தருவதாகும். காரைக்கால் அம்மையார் அம்மைநாச்சியார் என்னும் திருப்பெயரால் இச் செப்பேட்டில் குறிக்கப் பெற்றுள்ளனர். அம்மை என்பது காரைக்கால் அம்மையாரைச் சிவபெருமான் "அம்மையே" என்று அழைத்த காரணத்தால் ஏற்பட்ட பெயராகும். "அங்கணன் அம்மையே என்று அருள்செய்ய"—என்னும் சேக்கிழார் திருவாக்காலும் இதனை அறியலாகும்.

பழையனூரில் உள்ள ஏரிக்கு ஜனநாதப் புத்தேரி என்று பெயர். இந்த ஏரிக்கு நீர் பாய்ந்த வாய்க்காலுக்குக் குறுந்துறை வாய்க்கால் என்று பெயரிடப்பட்டிருந்தது. இப்

* இந்த வடமொழிச் செய்யுளின் ஆங்கிலமொழி பெயர்ப்பு பின்வருமாறு:—"That son of Rama (i, e, Janantha) gave this village to the God of Sankara, the enemy of the three cities known by name AMMAYYAPPA who had his abode in the village called purana grama (i, e palayanur in Tamil) which was the ornament of Jayangonda Chola and was situated within (the district) Paschatyagiri"

பழையனூர், பெருமூர், மங்கலம் இவ்வூர்களுக்குக் குறுந்துறை மடுவிலிருந்து நீர் சென்றுள்ளது. இப் பழையனூரின் எல்லை செப்பேடுகளில் 145 வரி முதல் 426 வரிகள் முடிய குறிக்கப்பெற்றுள்ளது. (see the detached tamil Inscription III Tamil text) இவ்வெல்லையில், உகாய், வெளுங்கு, கருங்காலி, உசிலை, வன்கண்ணி, செம்மணிச்சை முதலான மரங்களின் பெயர்கள் குறிக்கப் பெற்றுள்ளன. தானம் செய்யப்பட்ட ஊரின் தான பத்திரத்தை, பெண்யானையின் மீது வைத்து ஊரைச் சூழ்ந்து கல்லும், கள்ளியும் நாட்டுதல் வழக்கம் என்பதை இச் செப்பேடுகள் உணர்த்துகின்றன.

இவ்வூரைத் தன்னகத்துக் கொண்டுள்ள நாடு

இக்கோயில் கல்வெட்டில், இவ்வூர் முதலாம் இராசராச சோழன் காலத்தில், சயங்கொண்ட சோழமண்டலத்துப் பழையனூர்நாட்டுப் பழையனூர்த் திருவாலங்காடு என்றும்; மூன்றும் குலோத்துங்க சோழ தேவர் காலத்தில், மணவிற்கோட்டத்துப் பழையனூர்நாட்டுப் பழையனூர்த் திருவாலங்காடு என்றும்; விசயநகரப் பரம்பரையைச் சேர்ந்த வீரப்பிரதாப தேவராய மகாராயர் காலத்தில் (சகம் 1357) வடகரை மணவில் கோட்டத்துப் பழையனூர்நாட்டுப் பழையனூர்த் திருவாலங்காடு; என்றும் கூறப்பெற்றுள்ளது. பழையனூர்த் திருவாலங்காடு என்பது பழையனூர்க்கு அருகிலுள்ள திருவாலங்காடு என்று பொருள் படும்.

சென்னை-வடபழனி :—வடபழனி ஆண்டவர் கோயிலில் 21-6-61-ல் தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி 'சிவசக்தி' பஸ் சர்வீஸ் உரிமையாளர் திரு. என். எல். சிவலிங்கம் செட்டியார் அவர்களால் பொன் சங்கிலியுடன் கூடிய பதக்கம் ஒன்று (ரூ. 1400 மதிப்புள்ளது) கோயிலுக்கு உபாயமாக அளிக்கப்பெற்றிருக்கிறது. அன்று சிறப்பான அபிஷேகமும் நடைபெற்றது. கோயில் கர்ப்பக்கிரகத்திலிருந்து புகை போக்குவதற்கு, சென்னை நுங்கம்பாக்கம் ஜெயம் கம்பெனியைச் சேர்ந்த திரு வெங்கட்ராம அய்யர் அவர்களால் மின்சார புகைபோக்கி கருவியை அமைத்துக்கொடுத்தார்கள். அதை 23-6-61-ல் சென்னை அறநிலையத்துறை துணை ஆணையர் திரு. டி. இராமலிங்க ரெட்டியார் அவர்கள் துவக்கிவைத்தார்கள்.

✦ ✦ ✦

திருவஞ்சைக்களம் :—ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் "திருவஞ்சைக்களத்தில் சேரமான்பெருமாள் நினைவு அன்னம் பாலிப்பு" என்னும் பெயரால் ஏற்படுத்திய நிதியிலிருந்து இவ்வாண்டு 21-7-61-ல் அன்னம் பாலிப்பு நடைபெறும்.

✦ ✦ ✦

சங்கரநயினர் கோயில் :—சங்கரநாராயணசுவாமி கோயிலில் மகாபாரத விரிவுரை 27-6-61 முதல் 5-7-61 வரை திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களால் நிகழ்த்தப் பெற்றது. முதல் நாளன்று அறநிலையத்துறை ஆணையர் திரு. எம். எஸ். சாரங்கபாணி முதலியார், பி.ஏ., பி.எல். அவர்கள் தலைமைதாங்கி ஆரம்பித்து வைத்தார்கள்.

✦ ✦ ✦

சென்னை :—சென்னமல்லீசுவர, சென்னகேசவபெருமாள் கோயில் அனுபூதிமண்டபத்தில் 12-7-61ல், சென்னை நகர அர்ச்சகர்களுக்கு 2-11-60 முதல் 15-5-61 வரை நடத்தப்பெற்ற பெரும்பயிற்சி வகுப்பில் தேர்வுபெற்ற அர்ச்சகர்களுக்கு மதிப்பிதழ்கள் சென்னை அறநிலையத்துறை அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் வழங்கினார்கள்.

✦ ✦ ✦

திருத்தணி :—சுப்பிரமணியசுவாமி கோயிலில் ஆடிக்கிருத்திகை விழாவில் முக்கிய தினங்கள் 2-8-61 அசுவனி-திருக்குளம் வலம்வருதல், 3-8-61 பரணி உற்சவம், 4-8-61 ஆடிக்கிருத்திகை வெள்ளி மயில்வாகன உற்சவம்.

திருநாவுக்கரசு நாயனார்

[வித்துவான் திரு. சி. அருணைவடிவேலு முதலியார், காஞ்சிபுரம்.]

(முன் இதழ்த் தொடர்ச்சி)

அவர் தாம் தோன்றிய மரபு வகையினுலும் அதற்கேற்பக் கற்று உணர்ந்து ஒழுகிய ஒழுக்கத்தாலும் சிவநெறியைப் பற்றிய உணர்வும் ஒழுக்கமும் உடையவராய் இருந்தவரே யாவர். அந்நிலையையே அவர், "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்; நினை யாது ஒரு போதும் இருந்தறியேன்" என்றும், "சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்; தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்" என்றும் பின்னர் அருளிச் செய்தார். அங்ஙனம் அல்லாக்கால் அத்திருமொழிகளெல்லாம் பொருள் படுமாறில்லை. இத்திருமொழிகளை, ஒரு சாரார், அவர் தமது முற்பிறப்பில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறியனவாகவுரைப்பர்; ஏனைய வெல்லாம் அவர் இப்பிறப்பில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறியனவாய் இருக்க, இவைமட்டும் முற்பிறப்பு நிகழ்ச்சியாயொழிதற்குச் சான்று ஏதும் இல்லாமையறிக.

அங்ஙனமாயின், மருணீக்கியார், சமயங்களானவற்றின் நல்லாறு தெரிந்துணர்ந்தாரெனின், அவர் நன்னெறியல்லாப் புன்னெறியிற் செல்லுதல் எவ்வாறு கூடுமெனின், ஆம்; அது கூடாததேயாம். ஆயினும், கூடாத செயல் கூடுவதாக ஆயது இறைவனது திருவருளின் செயலாலேயே என்பதை விளக்கவே. சேக்கிழார் "நம்பர் அருளாமையினுல்" என்னுந் தொடரை அருளிச் செய்தார். எனவே, திருநாவுக்கரசர் அயல்நெறியிற் சென்றது, அவரது இயல்பில் வினைவழியே நிகழ்ந்த செயலாயிருப்பின், அவர் நல்லாறு தெரிந்துணர்ந்த பின், அது நிகழ்தல் கூடாதேயாகும். ஆனல், அஃது அவ்வாறின்றி உலக நன்மையின் பொருட்டு இறைவனது திருவருளின் வழியே நிகழ்ந்ததாகலின், அங்கு இவ்வையம் தோற்றுதற்கு இடமில்லை என்க.

தம்மை அயல்நெறியிற் புகுத்தியது திருவருளே என்னும் கருத்தினுலேயே, திருநாவுக்கரசர், 'யான் தவமுன்றும் இழையாதிருக்கவும் இவ்வாறு செய்தது என்னையோ?' என வினவும் முறையில், "கொடுமை பல செய்தன நானறியேன்" என்பது முதலியவற்றை எடுத்துக்கூறிப் பின் இறைவனை வேண்டுவாராயினர் என்க. எனவே, இது, திருந்தடி மறக்குமாறில்லாதிருந்தவரை ஞானசம்பந்தராக மண்ணிற் பிறக்குமாறு மையல் செய்தது போன்றதும், ஆலால சுந்தரரை அவ்வாறு மண்ணின்மேல் பிறக்கச் செய்தற் பொருட்டு இரு மாதர்மேல் மனம் போக்கிடச் செய்தது போன்றதுமாகும் என்க.

ஆலாலசுந்தரர் மையலுக்கு இருமாதர் முன்னிலையாய் இருந்ததுபோல மருணீக்கியாரது மையலுக்கு முன்னிலையாய் இருந்தது, 'கொல்லாமை' ஆகிய அறம் என்பதனை விளக்கவே சேக்கிழார், 'அமண்சமயம் குறுகுவார்' என வாளா கூறிப் போகாது, "கொல்லாமை மறைந்துறையும் அமண் சமயம் குறுகுவார்" என அடைகொடுத்துக் கூறிப் போந்தார்.

கொல்லாமையாகிய அறமே தாம் மயங்குதற்கு முன்னிலையாய் இருந்தது என்பதையும், அதுவும் இறைவனது திருவருளாலே அவ்வாருயிற்று என்பதையுமே திருநாவுக்கரசர், பின்பு,

> "ஓதுவித் தாய்முன்; அறவுரை
> காட்டி அமணரோடே
> காதுவித் தாய்; கட்ட நோய்பிணி
> தீர்த்தாய்; கலந்தருளிப்
> போதுவித்தாய்"

என்று அருளிச்செய்தார் என்க.

மருணீக்கியார் சமண்சமயம் புகுந்து மீண்டமையால் உலகிற்கு விளைந்த நன்மை யாதெனின், அதனுற்றான் தமிழ்நாட்டில் தலைதூக்கி, மக்கள் மனத்தைக் கவர்ந்து பெருமை பெற்றிருந்த சமண்சமயம் அடியோடு வீழ்ச்சியுற்றது. எனவே, தென்றமிழ் நாட்டில் திருஞானசம்பந்தராலும்,

வடதமிழ் நாட்டில் திருநாவுக்கரசராலும் சமண்சமயம் அடியோடு அகன்றமை அறியப்படும். படவே, புன்னெறி நீக்கி நன்னெறி பாலித்தற்பொருட்டு இவ்விரு பெருமக்களையும் ஒருகாலத்தே தோன்றி ஒருங்கு கூடி வாழச்செய்தான் இறைவன் என்பதும், அங்ஙன மாதலின், வைதிகத்துட்பட்டோர் ஔராயினும், இவ்விருபெரு மக்களை வினையா தொழிவாராயின், அது, நன்றி கோறலாகிய உய்தியில்லாத பெருங்குற்றமாம் என்பதும் விளங்கும். அது நிற்க.

மருணீக்கியார் சமண்சமயத்தில் புகத் துணிந்து விட்டார்; அப்பொழுது அவரது திருவாமூருக்கு அண்மையில் உள்ள 'பாடலி புத்திரம்' என்னும் ஊரில் சமண்பள்ளி யொன்று சிறப்புற்றிருந்தது. அதில் சமண சமயக் குருமார்கள் இருந்துகொண்டு பலருக்கு அச்சமயத்தைப் போதித்து வந்தார்கள்; அவ்விடத்தை அடைந்தார் மருணீக்கியார். அவர்களும் இவரைக் கண்ட உடன் மகிழ்ச்சியோடு வரவேற்று, 'சமண சமயமே மெய்ச்சமயம்' என்பதாகப் பல வகையிலும் மெய்ப்பித்துக்காட்டி, தங்களைப் போலவே சமண குரவராகும்படி அச்சமய நூல்கள் பலவற்றையும் இவருக்கு உணர்த்தினார்கள்.

'தருமசேனர்' எனப் பெயர்பெறுதல்

மருணீக்கியாரும் தமது நுண்ணறிவினால் அந்நூற்பொருள்களை யெல்லாம் நன்குணர்ந்து, பேரறிவு பெற்று விளங்கினார். அதனைக்கண்ட சமண குரவர்கள் மிக்க மகிழ்ச்சி எய்தி, இவருக்குத் 'தருமசேனர்' எனப்பட்டப் பெயர் தந்து சிறப்பித்தார்கள், அதன்பின்பு இவர் புத்தர்களையும் வாதில் வென்று, சமண சமயத் தலைவராய் விளங்கினார்.

திலகவதியார் திருப்பணி

தம்பியாராகிய மருணீக்கியார், பாடலி புத்திரத்தை அடைந்து சமணராகிவிட்டதை அறிந்து, அவர்பொருட்டு உயிர்தாங்கினவராகிய திலகவதியார், மனம் வருந்தி, தாமும் சுற்றத்தாருடன் கூடி மனையிலே இருக்கும் நிலையை விடுத்து, சிவபெருமானது கோயிலுக்குச் சென்று திருப்பணிகள் செய்து, அப்பெருமானது திருவருளுக்கு உரியவராக நினைத்தார்.

பின் அந்நிலைவு முதிர்ந்து பெருக, திருவாமூரை விட்டு நீங்கி, கெடிலநதியின் வடகரையிலே விளங்கும் திருவதிகை வீரட்டானேசுரர் திருக்கோயிலை அடைந்து, வீரட்டானேசுரரை வணங்கி அவரது திருவருளைப்பெற்று, விபூதி உருத்திராக்கங்களாகிய சிவ சின்னங்களை அணிந்துகொண்டு, திருப்பணிகள் செய்யத்தொடங்கினார்.

விடியற்காலையில் எழுந்து சென்று திருக்கோயிலை அடைந்து, அங்குத் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், பூக்கொய்து கொண்டு வந்து மாலைகட்டிக் கொடுத்தல் இவைபோன்ற பல தொண்டுகளை அவர் செய்துகொண்டிருந்தார்.

சிவநெறி மீண்டு திருவருள் பெறுதல்

திலகவதியார் வேண்டுதல்

இவ்வாறு நாள்தோறும் திருவதிகை வீரட்டானேசுரருக்கு, அவர்பால் வைத்த அன்பு காரணமாகவே திருப்பணி செய்து வந்த திலகவதியார், தம் தம்பியார் முன்பு செய்த தீவினை வந்தடைந்தமையாலே சமண சமயம் புகுந்தது குறித்து மிகவும் வருந்தினார். அதனால், அத்தீவினையை நீக்கியருளுமாறு, தம் தம்பியார்க்காகத் தாம் திருவதிகைப் பெருமானை வழிபட்டு, 'எம்பெருமானே, நீர் என்னைத் தொண்டுகொண்டது உண்மையாயின், என் பின் பிறந்தவனைத் தீவினையின் பயனாகிய பரசமயப் படுகுழியினின்றும் எடுத்துக் காத்தருளவேண்டும்,' என்று பலமுறையும் வேண்டினார்.

இறைவர் கனவில் தோன்றி அருள்செய்தல்

ஒருநாள் இருநாள் அன்றிப் பல நாட்கள் விடாது வேண்டிவந்த திலகவதியாரது வேண்டுகோளுக்குத் திருவதிகைப் பெருமானார் திருவுளம் இரங்கி, ஒருநாள் இரவு அவரது கனவில் தோன்றி, நீ உன்னுடைய மனக்கவலையை விட்டொழி; உன் உடன் பிறந்தானாகிய மருணீக்கியான், முற்பிறப்பிற்றானே நம்மை அடையவேண்டும் என்னும் விருப்பத்தால் பிற பற்றுக்களையெல்லாம் விடுத்துத் தவம்புரிந்தான்; ஆதலின், அவனை, இப்பொழுது, நாம், சூலைநோய் கொடுத்து

ஆட்கொள்வோம்,' என்று அருளிச்செய்து மறைந்தார். அதனுல், திலகவதியார் கவலை யின்றி யிருந்தார்.

"முன்னமே முனியாகி நமையடையத் தவம் முயன்ருன்" என்று சிவபிரான் அருளிச்செய்தமையால், 'மருணீக்கியார் அப் பிறப்பிற்ருனே சிவபிரானது திருவடியை அடைந்திருத்தல் வேண்டும்,' என்பதும், 'ஆயினும், அவர் செய்த தவத்திடையே ஏதோ சிறிது குறைபாடுண்டாக, அக்குறைபாடு காரணமாக இப்பிறப்பை எடுத்துச் சமண்சமயம் புகுந்தார்,' என்பதும் அறியப் படும். இதனை,

"பண்டுபுரி நற்றவத்துப் பழுதின்அள
விறைவழுவும் தொண்டரை"

என்று அருளிச் செய்தார் சேக்கிழார் நாயனுர்.

"பண்டுபுரி நற்றவம்," என்றதனுல், 'அவர் செய்த தவம் மிகப் பெரிது,' என்பதும், "பழுதின் அளவு இறை," என்றதனுல், 'அதனிடையே உண்டாகிய குறைபாடு மிகச் சிறிது,' என்பதும் பெறப்படும். படவே, அச்சிறு குறைபாடு, அவரது இயற்கையில் நிகழ்ந்ததன்று; இறைவன் திருவருளாலே நிகழ்ந்தது, என்பது விளங்கும். அஃது எவ்வாறெனில், அஃது அவரது இயற்கையில் நிகழ்ந்ததாயின், அது சிவபெருமானுற் பொறுத்துக் கொள்ளப்படுதல் அல்லது அப் பிறப்பில் உடம்பு உள்ள பொழுதாயினும் உடம்பு நீங்கிய பொழுதாயினும் வேருெரு வழியால் போக்கப்படுதல் என்னும் இரண்டினுள் ஒன்று நிகழ, அவர் அப்பொழுதே இறைவன் திருவடியை அடைந்திருத்தல் வேண்டுமன்றி, அது, மற்ருெரு பிறவி எடுத்தற்கும், எடுத்த பிறவியில் மயக்க நெறியிற் சென்று நெடுநாள் உழலுதற்கும் ஏதுவாதல் கூடாமையின் என்க.

எனவே, திருஞான சம்பந்தரிடத்தும், சுந்தரரிடத்தும் அவரது முன்னைப் பிறப்புக் களில் இறைவன் சிறு குறைபாடுகளை நிகழ்வித்து, அவற்றை முன்னிலையாக வைத்து, அவர்களை இம்மண்ணுலகில் வரச்செய்தது போன்றதே இதுவும் என்பது தெளிவு. இந் நிலையில் ஒருவர் நிலவுலகிற்கு வருதலே உண்மையில் 'அவதாரம்' எனப்படும். வினைவழியே வரும் ஏனையோரது பிறப்புக்களை 'அவதாரம்' எனக் கூறுதல் உபசாரமே என்க.

இனி, மாணிக்கவாசகரும், தமது அதிசயப்பத்தில், "நீக்கி முன்னெனைத் தன்னெடு நிலாவகை குரம்பையிற் புகப்பெய்து-நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து நுகமின்றி விளாக்கைத்து" என்றருளிச் செய்தமையால், அவரும் இங்ஙனம் இறைவன் திருவருளின் வழியே உலகிற்கு வந்தவர் என்பது இனிது பெறப்படும். அதனுல், சைவ சமய ஆசிரியர் நால்வரும் அவதார புருடர்களே என்பது விளங்கும். இத்தகையோராகிய தன் அடியவரை இங்ஙனம் வருவித்தே, இறைவன் தான் உலகிற்குச் செய்யக் கருதும் நலங்களைச் செய்கிருன் என்க.

இத்தகையோரைப் பிறபிற சமயத்தார் 'இறைவனே' என்றும், இறைவனது திருக்குமாரர் என்றும் கூற முற்படுவர். ஆயினும், பிறருக்குக் குடியாகாது, பிறரை எல்லாங் குடியாகக்கொண்டு ஆளும் பேரரசர்க்குச் சிறைக்கோட்டத்துட்படுதல் எவ்வாற்ருனும் இல்லாமைபோல, இயல்பாகவே பாசங்களின் நீங்கித் தன்வயத்தனுய் முற்றறிவும் வரம்பிலின்பமும் தூயஉடம்பும் உடையனுகிய இறைவனுக்கு தந்தை தாயரது உடம்பினுட் கட்டுற்றுக்கிடந்து, யோனிவாய்ப் பட்டுப் பிறந்து, பசி தாகம் பிணி முதலியவற்ருல் வருந்தி, முக்குணவயப்பட்டு, இன்பத்துன்ப மயக்கங்களை உற்றுச் சிற்றறிவு கொண்டு தாழும் அழுக்குடம்பாகிய காயச் சிறைக் கோட்டத்துட்படும் செயல் எவ்வாற்ருனும் இல்லை என்பதே சைவ நூற்றுணிவு.

மேற்கூறியவாறு, தன்னேடு இரண்டறக் கலக்கும் நிலைக்கு மிக அணியராய் நின்ற தன் அடியவரை இடை நிறுத்தியே, இறைவன், தான் உலகிற்கு உணர்த்தவேண்டிய உண்மைகளை உணர்த்துவித்தும், தன் மாட்டு உலகத்தார் செய்ய வேண்டிய கடப்பாடுகளைச் செய்வித்தும் உலகத்தாரை உய்யக்கொள்கிருன் என்பதுணர்க.

எனவே, உலகத்தை உய்விக்கவேண்டும் என்னும் பெருங்கருணையினுலே இறைவன் தன் அடியவர்கட்குச் சிறிது துன்பத்தையும் உண்டாக்குகின்ருன் என்பது விளங்கும். இறைவியையும் அன்ருே அவன் அதன் பொருட்டு நிலவுலகில் வரச்செய்தான் எனச் சிலவிடத்து நாம் கேட்கின்ருேம்!

தருமசேனர்க்குச் சூலைநோய் உண்டாதல்

சிவபெருமான் திலகவதியார்க்கு அருளியவாறே தருமசேனர்க்கு மிகவும் பெரிய சூலையைக்கொடுக்க அது, வடவைத்தீயும், ஆலகால விடமும், வச்சிராயுதமும், பிற கொடியவைகள் யாவும் ஒருங்கு கூடினாற் போல அவரது வயிற்றிற் புகுந்து குடையத் தொடங்கிற்று. அதனால், தருமசேனர் சிறிதும் பொறுக்கலாற்றாது வருந்தி நடுக்கமுற்று நிலத்திலே வீழ்ந்து புரண்டார்.

பின்பு, அவர், தாம் சமணசமயத்திலே அறிந்து கையாண்டு பயன் கண்டுவந்த பல மந்திரங்களினால் அதனைத் தடுத்துப் பார்த்தார்; அதனால் அது மிகுதியாயிற்றேயன்றிக் குறையவில்லை. ஆகவே, அவர் விடவேகத்தால் மயங்கி வீழ்ந்தவர்போல மயங்கிச் செயலற்று வீழ்ந்தார்.

தருமசேனர்க்கு உண்டாகிய நிலையைச் சமணமுனிவர்கள் பலருங்கண்டு, ஒன்று கூடி, 'இவருக்கு உண்டாகிய இச்சூலைநோய், எங்கும் யாரிடத்தும் கண்டறியாத கொடிய நோயாய் உள்ளது, இதற்கு நாம் என் செய்வோம்!' என்று வருந்தி, தங்கள் கரகத்தில் உள்ள நீரைத் தங்கள் மந்திரங்களைச் சொல்லி மந்திரித்துக் கொடுத்துக் குடிக்கச் செய்தார்கள்; மயிற் பீலியைக்கொண்டு தலை முதல் கால்வரையில் தடவி மந்திரித்தார்கள். இவற்றால் சூலைநோய் மேலும் மேலும் அதிகரித்து மிகுந்த வேதனையை உண்டாக்குதலைக் கண்டு தருமசேனர்மீதுள்ள இரக்கத்தின் மேலும் தமக்குண்டாகிய அவமானத்தினால் துன்பமுற்றார்கள்.

'அழியாத புகழையுடையவராகிய தருமசேனர்க்கு இப்படிப்பட்ட சூலைநோய் வந்ததே; ஐயகோ! இனி என் செய்வது!' என்று வருந்தி நீங்குகின்றவர்கள், 'இது நம்மால் நீக்குதற்கியலாத நோயாய் உள்ளது' என்று சொல்லி நீங்கினார்கள்.

சுற்றமாய்ச் சூழ்ந்திருந்த சமணர்கள் யாவரும் ஒன்றும் செய்ய மாட்டாதவராய்க் கைவிட்டுச் சென்றுவிட, சூலைநோயும் ஒரு காலைக் கொருகால் மிகுந்து, வயிற்றைப் பதித்துப் புரட்டி அறுத்து ஈர்த்திட, தருமசேனர், புலனைந்தும் பொறிகலங்கி, நெறி மயங்கி, அறிவழிந்து தனியே கிடந்து அலமந்தார். அவர்க்கு இத்தகைய பெருந்துன்பத்தை இறைவன் உண்டாக்கியதும் நம்மனோரது நலத்தின் பொருட்டேயாம் என்பதனைப் பின்னர்க் கூறுமாற்றான் உணர்க.

சூலைநோயானது நீங்காத நோயாய் அதிகரிக்க, 'இனி, உயிர் உடலோடு கூடி நிற்குமோ நில்லாதோ' என்னும் நிலையை அடைந்த தருமசேனரது மனத்தில் பண்டைய நினைவுகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய் எழலாயின. அப்பொழுது தமது அருமைத் தமக்கையார் திருவதிகையில் சிவபிரானுக்குத் தொண்டு செய்துகொண்டிருப்பதும் தோன்றிற்று. அதனால் அவரிடம் தமது நிலைமையைத் தெரிவித்து, 'சூலைநோய் நீங்குதற்கு ஏதேனும் வழியுளதோ' எனக்கேட்டு வருமாறு தம் மடைப்பள்ளியானை விடுத்தார்.

மடைப்பள்ளியான் திருவதிகையை அடைந்து, திலகவதியார் ஒரு பூந்தோட்டத்தை அணுகிக்கொண்டிருக்கும்பொழுது அவரைக் கண்டு வணங்கி, 'அடியேன் உம் தம்பியார் கட்டளையினாலே இங்கு வந்தேன்' என்றான். திலகவதியார் 'தம்பிக்கு ஏதேனும் தீங்கு உண்டாயிற்றோ?' என்று வினவ, மடைப்பள்ளியாளன், 'தீங்குதான் எளிதான தீங்கன்று; எங்கும் யாரும் கண்டிராத சூலைநோய்; அது, இன்னும் அவரது உயிரைப் போக்குதலாகிய ஒன்றைத்தான் செய்யவில்லை; மற்றெல்லாவகையான துன்பங்களையும் செய்துவிட்டது; எல்லாவகையான மாற்று முறைகளையும் செய்து, 'இது தீர்க்கப்படாத நோய்' என்று சொல்லி எல்லாரும் கைவிட்டுவிட்டார்கள்; இதனை உமக்குத் தெரிவித்து, இனி அவர் பிழைக்கும்வழி ஏதேனும் உண்டாயின், அதனைத் தெரிந்துகொண்டு இன்றிரவே வருமாறு என்னை உம்மிடம் அனுப்பினார்', என்று கூறினான். அதற்குத் திலகவதியார், 'நான் உன்னுடன் வந்து சமணப்பள்ளியை அடையேன்; இதனை என் தம்பிக்குத் தெரிவித்துவிடு' என்று சொல்லிவிட்டார். மடைப்பள்ளியான் திரும்பிச் சென்று, அதனைத்தருமசேனரிடம் கூறினான்.

(தொடரும்)

சிவப்பிரகாச சுவாமிகள்

அருளிச் செய்த

நால்வர் நான்மணி மாலை

(சிதம்பரம் - ஈசானியமடம் இராமலிங்கசுவாமிகள் உரை)

—,o:—

(முன் தொடர்ச்சி)

'வண்டிரையுந்தன்' என்றும், வேண்டிய வேண்டியாங்களித்தலின் எவரும் விழைந்து புகலடையுந்தலத்தி னரென்பார், 'புகலிச்சம்பந்தா' என்றும், சிவஞ்சத்திகளின் புகழ்ச்சியோடு வேத சிவாகம நெறிகளையும் தெரித்துணர்த்தினா ரென்பார், புகழ்ச்சியைப்பாடுமென்னாது 'புகழ்ச்சியொடுபாடும்' என்றும், தந்தையர் கல்வியறிவுடைமையாற் றனய ரறிவுடைமையைத் தாம் மதித்து மகிழ்தலும் தாயர்க்கஃதின்மையான் உன்மகன் சால்புடையனெனக் கற்றோருரைக்கக் கேட்டுமகிழ்தலும் பெரிதும் உலகியல்பாக, இறைவியார் இயற்கையறிவுடைமையின் எதிர்வந்துபாடுங்கால், அத்திருநெறித்தமிழின் அருமையை மதித்தும், தாமளித்த ஞானப்பால் அதற்கேதுவாதலைத் துணிந்தும், இறைவரினும் இனிதுவந்திருப்ப ரென்பார், 'தந்தையினும் பால்கொடுத்த தாய்க்கு மகிழ்ச்சிமிகவுண்டுபோலும்' என்றும் கூறினார்.

அருமையாவது அத்திருப்பாடல்கள் வேதசிவாகமநெறிகளை விளக்கலின் பவக்கடலைக்கடத்தற்குப் பல்தோணியாதல். புகலியென்னும் இத்தலம் தோணிபுரமெனப் பெயர்புனையுமாறு இறைவரோடு தாமூர்ந்த பிரணவத்தோணி ஊழிக்காலத் திவ்வுலகைமூடிய கடலைக்கடத்தற்கோர் கருவியாக, அப்பிரணவத்தைத் தகரமெய்யொடுபுணர்த்தித் 'தோடுடையசெவியன்' எனத்தொடங்கிய இத்திருநெறித் தமிழ் எளிதிற் பிறராற்கடத்தற்கரிய பவக்கடலைக்கடத்தற்குக் கருவியாதல்கண்டு, இறைவியார் மிக்குவகை எய்தியிருப்பர்போலுமென்பது கருத்து. போலும் ஒப்பில் போலி. வேதசிவாகமநெறிகளையென்பது அவாய்நிலையான் எஞ்சிய சொல்லெச்சம். சந்தை பற்பலபொருளுங் கொள்வான் பலருங்கூடுமிடம். உம்மைகளிரண்டும் உயர்வுசிறப்புப் பொருளவேனும் ஒன்றற்கொன்று குறைபாடுடைத்தன்றென்னும் பொருளவாய்நின்றன. ஒடுவை ஐயுருபாக்குவாருமுளர்.

சொற்றிரட்டு பூதகாரியவொலி யாதலை[1] "பாய தொன்மரப் பறவைபோற் பயன்கொள்வான் பதினெண் - டேய மாந்தருங் கிளந்த சொற்றிரட்சி தான் றூய - மாயை காரிய வொலியன்றி வான்முதற் கருவி-தூய காரியவோசையே யாய்க்கிடந் தன்றே" என்பதனாலும், வேதசிவாகம நெறிகளை விளக்கியதை - [2]"கரும்பினுமிக் கினியபுகழ்க் கண்ணுதல்விண் ணவனடிமேற் - பரம்பவிரும் புவியவர்க்குப் பத்திமையை விளைத்தனையே. பன்மறையோர் செய்தொழிலும் பரமசிவாகமவிதியு - நன்மறையின் விதிமுழுது மொழிவின்றி நவின்ற னையே" என்பதனாலும், பாடல் பவக் கடலைக்கீந்துதற்குப் பஃறோணியாதலை [3]"காழி நாடன் கவுணியர் தலைவன் - மாழை நோக்கின் மலைமகள் புதல்வன் - திருந்திய பாடல் விரும்பினர்க்கல்லது - கடுந்துய ருட்புகக் கைவி ளிக்குமிந்-நெடும் பிற விக்கட னீந்துவ தரிதே" என எதிர் மறையினும், [4]"பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத் துறவியெனுந் தோணி கண்டார் - நிறையுலகிற் - பொ[illegible]

1. திருவிளையாடல் திருநகரப்படலம் - கூஎ.
2. திருஞானசம்பந்தர் திருக்கலம்பகம் - க.
3. திருஞானசம்பந்தர் திருமும்மணிக் கோவை - க.
4. ஷை - கக.

மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்த-னன் மாலை ஞானத்தமிழ்" என உடன்பாட்டி லும் வற்புறுத்துதலானும் அறிக. (கரு)

> தாயிலி யாகுஞ் சிவபெரு
> மான்றனைத் தானெனுமோர்
> கோயிலி னாரறி வாகிய
> நாமமுன் கொண்டிருந்த
> வாயிலி னாணவ மாகுங்
> கபாடமு மன்றிறந்து
> நோயிலி யாகிய சொல்லிறை
> காட்டுவ னோக்குதற்கே.

(இ - ள்.) நோய் இலி ஆகிய சொல் இறை-மலமுத்தராகிய வாகீசமூர்த்திகள், தான் எனும் ஓர் கோயிலின் ஆர் - ஆன்மாவெனப்படும் தனியாலயத்தின்கட் பொருந்திய, அறிவு ஆகிய நாமம் முன் கொண்டு இருந்த வாயிலின் - அறிவென் னும் பெயரை அநாதியே கொண்டுள்ள வாயிலிற் பந்தித்து நிற்கும், ஆணவம் ஆகும் கபாடமும் மன் திறந்து-ஆணவமல மென்னுங் கதவையும் மிகத் திறந்து, தாய் இலி ஆகும் சிவபெருமான்றனை-(உயிருணர்வுமுனைக்குமளவும்) அவ் வுணர்வேயாகிக் காணப்படுதலில் பொரு ளாய் விளங்கும் சிவபெருமானை, நோக்கு தற்கு காட்டுவன் - காணக் காட்டுவர். எ - று.

மலமுத்தராயினாரே பிறரையும் மல முத்தராக்குதற்குரியரென்பார், 'நோயிலி' என்றும், இவர் சொல்லளவானே ஆக்க வல்லுநரென்பார், 'சொல்லிறை' என் றும், உயிர்க்குயிராய் உண்ணின்றுணர்த்த லின் அவ்வுயிரனைத்தும் இறைவர்க்கு ஆலயமென்றுபசரிக்கப்படுமென்பார், 'தானெனுமோர்கோயில்' என்றும், சிவன் போலத் தானே அறிவதன்றேனும் அறி விக்கின் அறிவதாதல்பற்றி அநாதியே அறிவென்றுபசரிக்கப்பட்டு வருவதென் பார், 'அறிவாகிய நாமமுன்கொண்டிருந்த' என்றும், உணர்த்திய வழியும், அவ்வறிவு யானென்றும் அவனென்றும் ஞாதிருஞே யங்களைப் பகுத்துணர்ந்து, உயிரின்முனைத் துத் தோன்றுவதென்பார், அதனை 'வாயில்' என்றும் உயிர் வியாபகமாகலின் ஆன்மாவெனப் பெயர் பெற்றதாக, அவ் வியாபகவுயிரை அணுத்தன்மைப்படுமாறு செய்தலின் மலம் ஆணவமென்னும் பெயர்த்தென்பார், 'ஆணவம்' என்றும், அது, ஞானதிரோதகமாய், உயிரென்ப தொன்றில்லையென்னும்படி பொர்திந்து கொண்டு நிற்பதொன்றென்பார், 'கபா டம்' என்றும், அம்மலமும் அநாதிநித்த மாகலின் அதனை யொழிப்பது அதனது மறைத்தற்சத்திமடங்கக்கீழ்ப்படுவித்தலே யென்பார் 'திறந்து' என்றும், உயிரறிவு முனைத்துத் தோன்றுங்காறும் அவ்வறிவே யாய்த் தானென்றொரு முதல் காணப்படு மாறின்றி நிற்பரென்பார் 'தாயிலி' என் றும், எவர்க்கும் நிரதிசயயின்பம் பயக்கும் இறைவரென்பார், 'சிவபெருமான்' என் றும், வழிபாடுடையார்க்குப் பதியறிவை யுறுவித்துக் காணப்படுமாறில்லாத அக் கடவுளை அகத்தேகாணக் காட்டுவரென் பார், 'நோக்குதற்குக் காட்டுவன்' என் றும் கூறினார்.

இது, பதிபசுபாசங்களை வியாபகவியாப் பிய முறைமைபற்றி யோதியதென்க. வியாபகம் - அதிக விருத்தியை யுடையது. வியாப்பியம் - நூனவிருத்தியை யுடையது. பதியறிவாவது திருவருளால் யாவும் சிவ மெனக்காணும் தெள்ளியவுணர்வு. வழி படுவார்க்கென்பது சொல்லெச்சம். தாய் என்பது இறந்தகால வினையெச்சம். தாவல்-ஈண்டு அவ்வுயிரறிவாதன்மேற்று. தாயிலியென்புழி இன்மை விளங்காமை குறித்து நின்றது.

[1]"பாசத்தார்க்கின்றாம் "பதி" என் புழிப்போல். தாயிலியென்பதற்குத் தமக் கொரு மூலமில்லாத முதற்கடவுளென்ன லும் ஒன்று. இலியென்பன வினைக் குறிப் புப் பெயர்கள். உயிர்முற்றும் சூக்குமவா லயமும் அவற்றினுடலனைத்தும் தூலவா லயமுமாகக் கூறுவது நூற்றுணிபாகலின் பொதுப்படத் தானெனுமோர் கோயி லென்றாரெனினும் இழுக்கின்று. இப் பொருட்கண் ஓர் அசையென்க. உம்மை உயர்வு சிறப்பு. அல்லது, திருமறைக்காட் டுத் திருக்கதவன்றி இதையுமென எச்ச வும்மையாக்குக. பின் வாதியா தொழிப்ப ரென்பார் மன்திறந்தென்றார். சிவதரிச

1. சிவஞானபோதம் பன்னிரண்டாஞ் சூத்தி ரம் - தன்னுணர.

னத்தினன்றிப் பாசக்ஷயமாதிய ஆன்ம சுத்தி பிறவாதாகலான் ஆகிய வென்பதனைச், செய்யியவென்னும் வினையெச்சமெனக்கொண்டு, நோயிலியாகும்படி காட்டுவன் என்னலுமாம். திரோதகமென்பது மறைத்தலைச் செய்வதென்னும் பொருட்டாய் வினைமுதன்மேனின்ற வினைப்பெயர்.

அறிவிக்கவறிதற் றன்மையை [1]"சிவன்சீவ னென்றிரண்டுஞ்சித்தொன்று மென்னுற் சிவனருட்சித் திவனருளைச் சேருஞ்சித் தவன்றான் - பவங்கெடு புத்தி முத்தி பண்ணுஞ்சித் தவற்றிற் படியுஞ் சித் தறிவிக்கப் படுஞ்சித்து மிவன்றா-னவன்றானே யறியுஞ்சித் தாதலினு விரண்டு மணைந்தாலு மொன்றாகா தனியமா யிருக்கு-மிவன்றானும் புத்தியுருசித் திவனுமோ புத்தி யிதுவஞ்சித்தென் றிடில வனுக்கிவனுமசித் தாமே" என்பதனுனும், மலநீக்கவியல்பை [2]"பொன்வாண் முன் கொண்மூவிற் புக்கொடுங்கிப் போய கலத்-தன்வாளே யெங்குமாந் தன்மை போன் - முன்வாண் – மலத்தின் மறைந்துள்ள மற்றுலகை யுண்ணு - மலத்திரித்துச் செல்லும் வரத்து" எனவும், [3]"இருண்மலமும் போகா திருந்து மயக்கா-தரன் மிடற்றி னஞ்சு போலாம்" எனவும் வருவனவற்றானும், தாயிலியாதலை [4]"யான் செய்தேன் பிறர்செய்தா ரென்னதியா னென்று மிக்கோணை ஞானவெரி யால் வெதுப்பி நிமிர்த்துத் - தான்செவ்வே நின்றிடவத் தத்துவன்றா னேரே தனையளித்து முன்னிற்கும் வினையொளித்திட்டோடு நான் செய்தே னெனுமவர்க்குத் தானங்கின்றி நண்ணுவிக்கும் போகத்தைப் பண்ணுவிக்குங் கன்ம - மூன் செய்யா ஞானந்தானுதிப்பி னல்லா லொருவருக்கு மியானெனதிங் கொழியா தன்றே" என்பதனுனும், இறைவர்க்கொரு மூலமின்மையை [5]"மாலயன் முதலோர் யாரும் வரம்பிலித் திருவை யெய்த மேலைநாளளித்தோன்றானும் விமலனுமினையர்க்கெல்லா - மூலமுந் தனக்கு வேறோர் முதலிலா தவனுமெங்க-ளாலமர் கடவுளன்றி யமரரில் யாவ ரம்மா" என்பதனுலும், வியாபக வியாப்பிய முறைமையை [1]"அமலைக்கு வியாபகனே யரனவற்கு வியாப்பியமே விமலைவியா பகியுயிர்கட் குயிரவட்கு வியாப்பியமே – சமலைக்கு வியாபகியே சமலையுயிர் வியாப்பியமேச்மலைசக வியாபகியே சகஞ்சமலை வியாப்பியமே" என்பதனுலும், சூக்குமதூல முறைமையை [2]"நுண்ணியனே சிவன் றூலஞ்சத்தி யவனெய்யார்க்கு-நுண்ணியனே நொய்யார்களதி நூலர் நுதன்மதிக்கு - நுண்ணியரே நொய்யார் தஞ்சத்திகளுக் கவர்தாமு - நுண்ணியரே நோய்க் கவர்க்குமதி தூலதரநோயே" என்பதனுலும், பசுவறிவகற்றுதலை [3]"படிறின் றித்தனைத் தொடர்ந்தவர் பசுபந் தத்தினைப் பரிந்திடு பரிசொன் றப்பணிக் குநன்றுமே" எனபதனுலும் அறிக. (கச)

நோக்குறு நுதலோ னின்னிடை விருப்பா
 னூற்பக வன்ன நுண் மருங்குல்
வார்க்குவி முலைமென் மகளிர்தம் புலவி
 மாற்றுவான் சென்றன னென்றால்
கோக்கலிக் காமன் வயிற்றிடைக் குத்திக்
 கொண்டதே துக்குநீ புகலாய்
காக்கரு மதலை விழுங்கிய முதலை
 கான்றிடத் தோன்றுநா வவனே.

(இ - ள்.) விழுங்கிய முதலை கான்றிடக் காக்கரும் மதலை தோன்றும் நாவலனே - விழுங்கிய முதலையே கரையிற்கக்கும்படி உதிப்பித்தற்கரிய புதல்வன் உதித்தற் கேதுவாகிய வாக்கின்வன்மையையுடைய புலவரே!—நுதல் நோக்கு உறுவோன் நின்னிடை விருப்பால் - கருத்தின்குறிப்பைக் கண்டறிந்த கடவுள் தேவரீர் பால் வைத்த காதலால்-நூல்பகவு அன்ன நுண் மருங்குல்-நூலின் நேர்பாதியை நிகர்த்த நுண்ணிய இடையையும்-வார் குவி முலை மெல் மகளிர்தம் - கச்சணிந்த குவிந்த

1. சிவஞானசித்தி பதினொராஞ் சூத்திரம் கக,
2. சிவஞானபோதம் பதினொராஞ் சூத்திரம்.
3. இறைவனூற்பயன் போதகவியல் கஅ.
4. சிவஞானசித்தி பத்தாஞ்சூத்திரம் உ.
5. கந்தபுராணம் ததீசிப்படலம் உ0

1. சிவதருமோத்தரம் சிவஞானயோகவியல் உஉ. அமலை மலரகிதையாகிய சிவசத்தி - சமலை மலசகிதையாகிய ஆன்ம சத்தி.
2. ஷை இயல் - உகூ.
3. திருநாவுக்கரசு தேவர் திருவேகாதசமாலை கஉ.

தனங்களையுமுடைய மெல்லிய பரவை நாச்சியாரின் - புலவி மாற்றுவான் சென்றனன் என்றால்-ஊடலைத் தணிக்க உவந்து சென்றாரென்று உயர்ந்தோர் விதப்பாராயின்,—கோ கலிக்காமன்-ஏயர்குடித்தலைவராகிய கலிக்காமநாயனாரொருவரும் (அது காரணமாக)-வயிற்றிடை குத்திக்கொண்டது ஏதுக்கு நீ புகலாய்-தம்முதரத்திலே குத்திக்கொண்டது யாதுக்குச் சாற்றுவீராக. எ - று.

குத்திக்கொண்டது உள்ளக் கிடக்கையை யுணராது இச்செயல் சிவாபராதமெனச் சிந்தித்திருந்தமையாற் போலுமென்பார், 'குத்திக்கொண்டதேதுக்கு' என்றும், அவருள்ளக் குறிப்பை அறிந்துளீராகலின் நீரறிவிக்கின் ஐயப்பாடிலையாமென்பார், 'நீ புகலாய்' என்றும் கூறினார். கூறவே, 'சிவாபராதமியற்றினாரைத் தக்கவாறு தண்டிக்க; அஃதியலாதேல் தம்முயிர் துறக்க' என்பதே தலைமை விதியாகலாற், காணப்பெறின் இவ்விரண்டனுள் ஒன்று நிகழுமென்னுந் துணிபால் [1]"அரிவைகாரணத்தினாலே யாளுடைப் பரமர் தம்மை - யிரவினிற் றூதுபோக வேவியங் கிருந்தான் றன்னை-வரவெதிர் காண்பேனாகில் வருவதென் னாங்கொலென்று - விரவிய செற்றம் பற்றி விள்ளுமுள்ளத்த ராகி" இருந்தாராகலின் வரவு கேட்டுழித் தம்முயிர் துறந்தாரென்பது. நுதல்நோக்குறுவோனெனற் பாலது செய்யுளாக்கிப் பிறழ்ந்தது; கேடரியனென்பது [2]"அருங்கேடன்" என்றாயவாறு போல. நுதலென்பதுசெயப்பாட்டுவினைப் பொருண்மையுணர்த்தும் விகுதிபுணர்ந்து கெட்டுநின்ற வினைப்பெயர். நுதலப்படுவதென்றவாறு. நுதலல் - கருதல். நோக்கு-குறிப்பு. உறுதல்-ஈண்டுற்றுணர்தல். நோக்குறுமென்பது ஒரு சொன்னீர்மைத்தெனினும் ஒக்கும். கருத்தின் குறிப்பாவது-பெற்ற சிற்றின்பமே பேரின்பமாக நுகர்தல். இவரிங்ஙன நுகர்ந்தமை முன்னர்ப் பெறப்படும். இத்தேவியார் மருங்குல்தனங்களான் வாட்டுதற்றன்மை இன்னும் எய்தப் பெற்றிலதென்பார், ஒசிதலாதி அடைகொடாது 'நூற்பகவன்ன நுண் மருங்குல்' என்றார். காத்தற்கருமையாவது - காலங்கடந்தமையின் மீட்டுயிர்ப்பித்தற்கியலாமை முதலையுமென உயர்வு சிறப்பும்மை கொடாதொழிந்தார்; இவரது திருவடிகளே நினைவாரை மீளாப் பிறவியின் மீட்கவல்லனவாயின் மீளாச் சேயை இவர் மீட்பித்த இஃதோர் வியப்பன்றென்பது தோன்றற்கு. இது குறிப்பெச்சம். தோன்று நாவலனென்றது காரியத்தைக் காரணமாக உபசரித்தல். உதிப்பித்தற்கரிய புதல்வனும் உதித்தற்கேதுவாகிய வாக்கின்வன்மையரென்றபடி.

பேரின்பமாக நுகர்தலை [1]"பெற்றசிற்றின்பமே பேரின்பமாய்" என்றும், [2]"உடம்புடைய யோகிகடா முற்றசிற்றின்ப-மடங்கத்தம் பேரின்பத் தாக்கின்" என்றும், [3]"காணுங் கரணங்களெல்லாம் பேரின்பமெனப் - பேணுமடியார்" என்றும் வருவனவற்றானும், மீளாப்பிறவியின் மீட்கவல்லனவென்பதை [4]"நாட்டா ரறிய முன்னாளி னன்னா ளிறந்த வைம்படையின் - பூட்டார் மார்பிற் சிறியமறைப் புதல்வன் றன்னைப் புக்கொளியூர்த் - தாட்டா மரைநீர் மடுவினகட் டனிமா முதலை வாய்நின்று-மீட்டார் கழலே நினைவாரை மீளா வழியின் மீட்பனவே" என்பதனானும் அறிக.

நோக்குறு நுதலோனென்பது கண்படைத்த நெற்றிக் கடவுளெனவும் பொருள்படினும், நுதற்கட்பெருமானே நினைத்தோழமை கொண்டானெனவே, புலவிதீர்க்கச் சென்றாரும் அவரேயென்பது அமைந்து கிடத்தலானும், அங்ஙனமுரைப்பின் இவர் பெற்ற சிற்றின்பமே பேரின்பமாக நுகர்ந்தமையும், அது கொண்டே அமலர் தூது சென்றமையும் அதுபற்றியே அறிஞரெல்லாம் வியந்துரைத்தமையும், பெறப்படாமையானும், அஃது ஈண்டைக்கேலாமையறிக. (கடு)

1. பெரிய புராணத்தில் கலிக்காமநாயனார் புராணம் - கஅஎ.
2. திருக்குறள் உகஅ.

1. திருவுந்தியார் நந.
2. திருக்களிற்றுப்படியார் எச.
3. திருவாசகம் பண்டாயநான்மறை.
4. ஷை புராணத்தில் நமிநந்தியடிகணாயனார் புராணம். (அந)

வலமழு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடன்
முகந்துல குவப்ப வுகந்தமா ணிக்க
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனு பெருநீ ரொழுகி
யோதுவார் மனமெனு மொண்குளம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
வுளமெனு நிலம்புக வூன்றிய வன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் றருமே.

(இ-ள்.) வலம் மழு உயரிய-வலப் பக்கத்திலே மழுவையுயர்த்திய—நலம் மலி கங்கை நதி தலைசேர்ந்த—புனிதநிரம்பிய கங்காநதி தலைக் கூடப்பொலிந்த - நல் கருணைக்கடல் முகந்து - செவ்விய சிவமென்னும் கிருபைக்கடலைப் (பெருந்துறை புகுந்து) முகந்து - உகந்த மாணிக்க வாசகன் எனும் ஒரு மாமழை-ஓங்கிய மாணிக்க வாசகரெனப்படும் மேன்மைவாய்ந்த ஒரு மேகமானது, - உலகு உவப்ப பொழிந்த திருவாசகம் எனும் பெருநீர் ஒழுகி - மக்களுயிர்கள் மகிழச்சொரிந்த திருவாகசமென்னும் பெருவெள்ளஞ்சென்று, - ஓதுவார் மனம் எனும் ஒண் குளம் புகுந்து - ஓதுபவர்களுடைய உள்ளமென்னும் எழிலமைந்த ஏரியினுள்ளே நிரம்பி, - நா எனும்மதகில் நடந்து - வாயென்னும் மதகின்வழி வெளிப்பட்டு, - கேட்போர் செவி எனும் மடையில் செவ்விதின் செல்லா - சிரவணஞ்செய்பவர்களுடைய செவிகளென்னும்மடைகளில் வழுவுதலின்றிச் சென்று, - உளம் எனும் நிலம் புக - அவர்களுடைய நெஞ்சமென்னும் நிலத்திற் பாய; - ஊன்றிய அம்பு ஆம் வித்தில் - அங்கேபதிக்கப்பட்டுள்ள அன்பென்னும் வித்திலே - சிவம் எனும் மெல்முளை தோன்றி - சிவமென்னும் சிறுமுளை அங்குரித்து, வளர்ந்து கருணை மலர்ந்து - வளர்ச்சியுற்றுக் கிருபைவிரிந்து, - விளங்குறும் முத்தி மெய்பயன் தரும், - ஒளிர்கின்ற முத்தியென்னும் உண்மைப்பயனை உதவாநிற்கும். (எ-று.)

ஆண்பாற்கியையவலத்தில் மழுவும் பெண்பாற்கியைய இடத்தில் மானும் ஏந்தியவரென்பார், "வலமழுவுயரிய" என்றும், இறைவியார் ஓர்விளையாட்டான் இறைவர் கண்களை மூடுங்கால் எங்கும் இருளடரக் கண்ட அச்சங்காரணமாக வியர்த்த அத்திருக்கரங்களினுதித்த கங்கை அண்டமுழுதுங்கவர்தல்கண்டு அதனைச் செஞ்சடையின் ஒருரோமத்திற் செறித்தவரென்பார், 'கங்கைநதி தலைசேர்ந்த' என்றும், அனைத்தையும்புரக்கும் அளவுபடாக்கருணையுருவத்தரென்பார், 'கருணைக் கடல்' என்றும், எவர்க்கும் சிவபோகம்விளையவாசகமாகிய மாணிக்க மழையைச்சொரியும் கருணைமேகமாகிய இவரை நிகர்த்த மேகம் பிறிதின்றென்பார், 'மாணிக்கவாசகனெனுமொருமாமழை' என்றும், திருவாசகமும் அக்கருணைப் பெருக்கேயென்பார், 'கருணைக்கடன்முகந்து பொழிந்த திருவாசகமெனும்பெருநீர்' என்றும், அது செவ்விதிற்சென்று புகாவழிச் சிவபோகம் விளையாவாகலின் வேறுசிந்தனையின்றி எந்தைதாட்பால் வணங்கித் தலைநின்று கேட்டு வழுவாது செலுத்துகவென்பார், 'செவ்விதிற்செல்லாப்புக' என்றும், அன்பிலா வகத்தே அதுபுகாதென்பார், 'உளமெனுநிலம்புகவூன்றியவன்பு' என்றும், அன்புள்வழி அவ்வன்பேசொரூபமாகச் சிவம் வெளிப்படுமென்பார், 'அன்பாம்வித்திற்சிவமெனுமுளைதோன்றி' என்றும், அத்திருவாசக சிரவணஞ்செய்வோருளத்தே சிவம் விர்த்தித்துத் திருவருள்பதிவிக்குமென்பார், 'வளர்ந்துகருணை மலர்த்து' என்றும், இறுதியில் அவர்க்கு நல்குவது பதமுத்தியன்று பரமுத்தியென்பார், 'விளங்குமுத்திதரும்' என்றும் அம்முத்தியொன்றே உண்மைப்பயனுவதென்பார், 'மெய்ப்பயன்' என்றும் கூறினர்.

வாரிநீர்மிகாது வறள்விக்கும் வடவாமுகாக்கினியையேந்தலும் கங்காநதி தலைக்கூடப்பெறுதலுமுடைய கடலின்கண்ணே மேகமுகந்தோங்கி உலகுவப்பச்சொரிந்த பெருநீர் ஏரியிற்செறிந்து, மதகின்வெளிக்கொண்டு மடைவழிச்சென்று நிலம்புகாநிற்க; அதிற்பதித்துள்ள வித்தில் அங்குரந்தோன்றி வளர்ந்துமலர்ந்து பயன்றருமாப்போலப் பயன்றருமென முற்றும் ஒக்க உருவகித்தமையின், இது முற்றுருவகம்.

உயரிய சேர்ந்தவென்னும் எச்சங்கள் கருணைக் கடலென்னும் ஓர் பெயர்கொண்டன. நலம் - மூழ்கியார்க்கு அகத்தும் புறத்தும் தூய்மை பயத்தலுடைமை. எவர்க்கும் இன்பநல்கலின் நற்கருணையென்றார். உலகென்றது மக்களுயிர்களை: இப்பயன்கோடற்குரியன அவையேயாகலின். உகத்தல் - நிகரின்றியோங்கல். ஒண்மை - அழகு. மடை - நீர்மடுக்குஞ் சிறுதுறை. ஏகாரம்தேற்றம். நீர் செவ்விதிற்செல்லாப்புக முளைதோன்றித் தருமென இயையும். கேட்போருறுபயன் முன்னர்க்கிளந்தார்; இது சுருதியென்பது துணிதற்கு.

கங்கைநதி தலைச் சேர்ந்தமையை [1]"எவ்வுலகுஞ் சூழ்போய்-நின்றவந் நீத்தந் தன்னை நினைத்தவ ணழைத்து நாத-னென்றுதன் வேணிமேலோ ருரோமத் தினும்பருய்ப்ப" என்பதனாலும், கருணைக்கடலென்பதனை [2]"பொருங்கட லனீகமொடு போய்ப்புறவடுத்த - விருங்கட மிளப்பில கடந்தெழு பிறப்பாங் - கருங்கடல் கடக்க வரு வார்கருணை வெள்ளப் - பெருங்கட னிறைந்துறை பெருந்துறை யடைந்தார்" என்பதனானும், அன்புஞ்சிவமும் அபேதமாதலை [3]"அன்புஞ்சிவமுமிரண் டென்பரறிவி லா-ரன்பே சிவமாவ தாரு மறிகிலா-ரன்பே சிவமாவ தாரு மறிந்தபி - னன்பே சிவமா யமர்ந்திருந் தாரே". என்பதனானும், சிவபோகம் விளையச்சொரியும் மாமழையென்பதனை [4]"பேசுபுகழ் வாதவூர்ப் பிறந்துபெருந் துறைக்கடலுண் டாசிலெழிறடித்தயர வஞ்செழுத் தாலதிர்ந்தெழுந்து - தேசமலி தரப்பொது வார் சிவபோக மிகவிளைவான் - வாசகமா மாணிக்க மழைபொழிமாமுகில்போற்றி" என்பதனானும் அறிக. (கசு)

பயனாகு நல்லாண் பனைக்குவிடத் திற்கு
மயிலாகு நோய்க்கு மருந்தா—முயிராகுஞ்
சிந்துமெலும் பிற்குச் சிரபுரத்து நாவலன்சம்
பந்த னியம்புதிருப் பாட்டு.

1. கந்தபுராணம் ததீசியுத்தரப்படலம்-களஉ.
2. திருவிளையாடல் வாதவூரடிகளுக்குபதேசித்தபடலம் - உக.
3. திருமந்திரம் அன்புடைமை.
4. கோயிற்புராணம் பாயிரம்.

(இ - ள்.) சிரபுரத்து நாவலன் சம்பந்தன் இயம்பு திருப்பாட்டு - சிரபுரத்தவதரித்த முத்தமிழ் விரகரருளிய திருப்பாடல்கள், நல் ஆண் பனைக்கு பயன் ஆகும் - பண்புமிக்க ஆண்பனைகளுக்குப் பழமாகும்; விடத்திற்கு மயில்ஆகும் - நஞ்சத்திற்கு மஞ்ஞையாகும்; நோய்க்கு மருந்து ஆம் - பிணிக்குப்பெருமருந்தாகும்; சிந்தும் எலும்பிற்கு உயிர் ஆகும் - உருச்சிதைந்துதிர்ந்த என்பிற்கு உயிராகும் எ-று.

புத்தநந்திதலையுருளுதற்குப் பொருதும் இடியாதன் முதலியவற்றை இன்னும் இத்திருப்பாட்டு எதற்கு ஏதுவாகுமென உய்த்துணர்தலின்பாற்படுத் தொழிந்தார்; இச்செய்யுளில் இடம்பெறாமையின் பாற்கடல்கடைந்தெடுத்து அமுதம் பகிருங்கால் அசுரரிருவர் தேவரினுருமாறி ஒருங்கிருந்துண்ணுதலைத் திருமால் சந்திரசூரியர்களாலுணர்ந்து, சட்டுவத்தால்வீச; வெட்டுண்ட அவ்வசுரர்சிரங்களே, அவ்வற்ப அமிர்தசம்பந்தத்தானே அழிவின்றி இத்தலத்திறைவரருளான் இராகுகேதுக்களாய்க் கிரகநிலைமையடைந்து, வணங்குவார்கிலேசத்தை மாற்றிவிளங்குமாயின், தேவியாரளித்த ஞானமிர்தத்தைப்பருகித் தெய்வீகமுற்ற ஞானசம்பந்தவள்ளலருளிய பாடலினற்புதங்கள் இத்துணையவெனப் பகரலாகுங்கொலென்பார் இங்ஙனம் கூறினார்.

கூறவே, விடம் நோய்முதலியன தாமே நிவர்த்தித்தலின் கர்த்திருத்துவமும், சமணரைக்கழுவேற்றல் புத்தநந்திதலையையுருள்வித்தல் முதலியன அன்பராலியற்றினமையின் அகர்த்திருத்துவமும், ஆண்பனைகளைப் பெண்பனைகளாக்கல் பாலையை நெய்தலாக்கல் என்பைப் பெண்ணாக்கல் முதலியன ஒன்றை மற்றொன்றாகச் செய்தமையின் அந்நியதாகர்த்திருத்துவமும், இன்னும் இவற்றையே வேறுபடுத்துணரின் என்பைப்பெண்ணாக்கல் சிருட்டியும், விடம், நோய் முதலிய நிவர்த்தித்தல் திதியும், கழுவேற்றல் தலையை யுருள்வித்தல் முதலியன சங்காரமுமாகலின், சிவபெருமானுக்குரிய பிரபுத்துவ சாமர்த்திய

மூக்குணங்களும் சிருட்டியாதி முத்தொழில்களுமுடைய முதல்வரென்பது குறிப்பித்தவாருயிற்று.

அற்றேல், திருநனிபள்ளிக்கெழுந்தருளுங்கால் அடியவர்க்கு வெப்பமகலப் பாலையை நெய்தலாக்கியதைச் சேக்கிழார் பெருந்தகை செப்பாததென்னையெனின் - இன்னோரன்ன சரித்திரங்கள்பல தலபுராணங்களுள் விரிந்திருத்தலின் தாம்விரித்திலரேனும் [1]"நாத னனிபள்ளி சூழ்நகர் கானக மாக்கியஃ தே-போதின் மலிவயலாக்கிய கோன்" என்றும், [2]"கள்ளம் பொழினனி பள்ளி தடங்கட மாக்கியஃ தே-வெள்ளம் பணிநெய்த லாக்கிய வித்தகன்" என்றும், பாலையை முல்லையுமருதமுங்கலந்ததொரு நெய்தலாக்கினரென நம்பியாண்டார் நம்பிகள் விதந்திருத்தலின் அந்நம்பிகள் திருவாக்கைத் தாம்கூறும் சரித்திரங்கட்கு ஆதாரமாகக்கொண்ட அப்பெருந்தகைக்கு இத்தகையவும் உடன்பாடேயாமென்றது

உடன்பாடுபற்றியன்றே அந்நம்பிகள் 'கூற்றுக் கெவனோ புகறிருவாரூரன் பொன்முடிமே - லேற்றுத் தொடையலு மின்னடைக்காயு மிடுதருமக் - கோற்ருேத்து கூனனுங் கூன்போய்க் குருடனுங் கண்பெற்றமை - சாற்றித்திரியும் பழமொழி யாமித் தரணியிலே" எனத் திருத்தொண்டர்திருவந்தாதியிலருளிய ஆளுடையநம்பிகள் சரித்திரத்தைத் தாம் விரியாதிருந்தும், அவர்போலவே கூற்றுவநாயனார் புராணத்திறுதியில் "தேனுங்குழலும் பிறைத்ததிரு மொழியாள் புலவி தீர்க்க மதி-தானும்பணியும் பகைதீர்க்குஞ் சடையார்தூது தருந்திருநாட் - கூனுங்குருடுந் தீர்த்தேவல் கொள்வார்குலவு மலர்ப்பாதம் - யானும்பரவித் தீர்க்கின்றேனேழு பிறப்பின் முடங்குகூன்" என்றருளியதூஉமென்க. இப்பிள்ளையார் சரித்திரங்கள் போலவே, ஆங்காங்குள்ள மற்றைமூவர்களின் சரித்திரங்க ளனைத்தும், ஒருங்கு தொகுத்து முறைப்படுத்தி, அவர்களும் ஈண்டுணர்த்திய முக்குணங்களும் முத்தொழில்களுடைய முதல்வரர்தல், உய்த்துணர்க. விரிக்கிற்பெருகும்.

பாட்டின்விளைவைப் பாட்டுவிளைவாக வுபசரித்தார். சிரபுரமென்பது அசுரிருவர்சிரங்கள் அருச்சித்தபுரமென்னும் பொருளதேயாயினும் ஈண்டு ஏனைப் புரங்களுட் டலைமைபெற்றபுரமென்னும் குறிப்பின்மேற்று. பாட்டு பனை விடம் நோய் என்பன சாதியொருமை. பனைக்கு விடத்திற்கு நோய்க்கு எலும்பிற்கு என்பவற்றில் முறையே சிறத்தல் ஒழித்தல் நீக்கல் உருக்கொள்ளலென்பன நடுவே பெய்து பொருளுரைத்துத் துமர்த்தமெனக்கோடலும் ஒன்று. இங்ஙனங்கோடலைப் பிரயோகவிவேகம் "உடனிகழ்கின்ற" என்னும் செய்யுளுரையிற்காண்க. நன்மையாவது-முத்தமிழ்விரகராற் பாடப்பெற்று முத்திபெறற்குரிய முதுதவமுடைமை. விடநிவர்த்தித்தமை திருமருகலிலெனப் பெரியபுராணத்தும் திருப்புறம்பயத்திலெனத் திருவிளையாடற்புராணத்தும் கூறுவது மலைவாமபிறவெனின், - அற்றன்று; அவ்விரு சரித்திரங்களும் ஒன்றற்கொன்று அணுத்துணையும் ஒவ்வாமையானும், பாரிலெதிர்ந்த பல்விடங்கள் தீர்த்தருளினுரெனத் திருஞானசம்பந்தர் திருவுலாமாலையில் நம்பியாண்டார் நம்பிகள் அருளியவாற்றானும் வெவ்வேறெனக்கோடலே மேலோர் துணிபென்க. நோய் - கொல்லிமழவன்மகட்குநேர்ந்த குமரகண்டவலியும் பரிசனங்களின் பக்கற்பரவிய நளிர்சுரமும் கூன்பாண்டியர்பாலுற்ற கொடுஞ்சுரமும் கூனும் பிறவுமாம்.

1. திருஞானசம்பந்தர் திருவந்தாதி - . கஎ.
2. திருஞானசம்பந்தர் திருச்சண்பை விருத்தம் - ௬.

பனேகள்முத்திபெற்றமையை [1]"பிள்ளை யார்தத் திருவாக்கிற் பிறத்தலாலே தாலமு மூன் - புள்ள பாசம் விட்டகல வொழியாப் பிறவி தனை யொழித்துக் - கொள்ளு நீர் மைக் காலங்கள் கழித்துச் சிவமே கூடின வாம் - வள்ள லார்மற் றவரருளின் வாய்மை கூறின் வரம்பென்னும்" என்ப தனுனும், பாட்டினற்புதங்களே [2]"பெறு பயன் மிகப்புவியு ளருளுவன பிற்றை முறை பெருநெறி யளிப்பனபல்பிறவியை யொழிச்சுவன - வுறுதுய ரழிப்பனமு னுமைதிரு வருட்பெருக வுடையன நதிப் புனலி னெதிர்பஃறி யுய்த்தனபு-னறுமுறு குரைச்சமணே நிரைகழு நிறுத்தியன நனி கத வடைத்தனது னருவிட மகற்றியன - துறுபொழின் மதிப்புறவ முதுபதும னெப்பரிய தொழில்பல மிகுத்ததமிழ் விரகன கவித்தொகையே' என்பதனுனும் அறிக. (கஎ)

பாட்டான் மறைபுக மும்பிறை
சூடியைப் பாடிமகி
ழூட்டா மகிழ்சொல் லிறைவனைப்
பாடி யுவப்புறுக்க
வேட்டான் மலிபெருங் கல்லவன்
போல மிதப்பனெனப்
பூட்டா மறிதிரை வார்கடற்
கேவிழப் போதுவனே.

(இ - ள்.) மறை புகழும் பிறை சூடியை பாட்டால் பாடி - வேதங்கள் புக ழும் பிறைசூடிய விமலரைத் தேவாரங்க ளாற்றுதித்து - மகிழ்ஊட்டா மகிழ் சொல் இறைவனை பாடி - திருவுளமுவப்பித்துத் தாம் உவந்த வாகீசவள்ளலைப் புகழ்ந்து, உவப்பு உறுக்க வேட்டான் - அவருக்குக் களிப்பை உறுவிக்க வேண்டுமென ஆர்வ மிக்கவன்,- அவன்போல மிதப்பன் என - அவ்வாகீச வள்ளலைப் போலவே யானும் மிதப்பேனென்று,-மலி பெருங்கல் பூட்டா விழ - மிகப்பருத்ததொரு கல்லைத் தனதுட லிற் பிணித்துக்கொண்டு வீழ்தற்கு-மறி திரைவார் கடற்கே போதுவன் - சுருண்டு வீசும் அலைகளையுடைய நெடியகடலுக்கே துணிந்து செல்வன். எ - று.

இருக்காதி வேதங்கள் இறைவர்திரு வாக்கினுதித்து வழிபட்டும், இன்னும் அவ்விறைவரியல்பை யாமும் அறிகிலே மெனப் புகழாநிற்பவென்பார், 'மறைபுக ழும்' என்றும், சோடசகலாரூபனுகிய சந் திரன், தன் மனைவிய ரிருபத்தெழுவரை யும் ஒப்பநாடாது, உரோகணிபால் ஆர்வ மிக்கமையின், நக்கனுற் கலைகுறையச் சாப மேற்றுச், சரண்புக்கானுக; அவை வளர வும் குறையவும் வரமளித்து, எஞ்சிய வோர்கலை என்றும் நிலைபெறுவான், அவ னைத் தந்தலைமை நாடாது, திருமுடியிற் றரித்த திருவருட்சால்பின ரென்பார், 'பிறைசூடி' என்றும், அவ்வேதங்களு மறியா விமலரியல்பனைத்தையும் சிற்றறி வினருந் தெளியுமாறு தேவாரங்களின மைத்துத் துதித்து, அவ்விமலரைத் திரு வுளமுவப்பித்தவரென்பார், 'பாட்டாற் பாடிமகிழூட்டா' என்றும், தம்பாடலை யேற்றுத் தலைவருவந்தமைகண்டு, தாம் சாலவுவந்தனரென்பர், 'மகிழ்' என்றும், இவ்வாகீசமூர்த்திவழிபாடு மற்றையவற் றினும் எளிது கதியயக்கும் ஏதுவாகலின், இவரைத் துதித்து இனிதுவப்பித்தல் வேண்டுமென்பார், சொல்லிறைவனைப் பாடியுவப்புறுக்க' என்றும், இந்நெறி இக பரவாஞ்சை யொழிந்தவர்க்கன்றி ஏனை யர்க்கெய்தாதென்பார், வேட்டான் என் றும் கல்லிற்பிணிப்புண்டு கடலைக்கடத்த லின் வருத்தம் கண்டறிந்துள்ளாராகலின், பிறிதுதொழில்பேணுது அத்தொழில் பேணின், உடனருள்புரிவரென உய்த் துணர்வரென்பார், 'மலிபெருங்கற்பூட்டா கடற்கேவிழ'என்றும், சிவகதியின் அருமை கண்டோர் தேகாதிரப்பிபஞ்சத்தைச் சிறி தும் குறிக்கொளாரென்பார், 'போதுவன்' என்றும் கூறினர். (தொட்ரும்)

1: பெரியபுராணத்தி சம்பந்தமூர்த்தி புரா ணம் - களச

2. திருஞானசம்சந்தர் திருக்கலம்பகம்-கூ

கன்னியாகுமரி மாவட்ட அறநிலையச் சட்டம்

1959-ம் ஆண்டு 30-வது சட்டம்

The translation has not been authorised or accepted as authentic by the Government.

பூதப்பாண்டி தொகுதி, தோவளை வட்டம்—

35 அரசுதய கந்தன் சாசுதா ... சிறியது
36 எடமல வேலய்யன் ,,
37 நீலப்பாறை கந்தன் சாசுதா ,,
38 கலுங்கு முகத்து பூத்தாதான் ,,
39 வலிய எஜமான் ,,
40 ஆனந்தவல்லி அம்மாள் ,,
41 கோட்டக்கர கந்தன் சாசுதா ,,
42 செம்பூசி ,,
43 கெருச்சிபாறை கந்தன் சாசுதா மிகச்சிறியது
44 சந்தன நங்கை அம்மன் ... ,,
45 நகரம்மன் ,,
46 ஆலத்துறை வேலய்யன் ,,
47 கலியுகத்து மெய்யன் ,,
48 அனந்தபுரம் பூதத்தான் ,,
49 அரசடிக் கந்தன் ,,
50 அண்ணுமலைக் கந்தன் ,,
51 அயினி முத்து பூதத்தான் ,,
52 ஆத்தூர் கந்தன் சாசுதா ,,
53 விடங்கர் விநாயகர் ,,
54 குளத்தங்கரை கந்தன் சாசுதா ,,
55 அழகாத்திரி கந்தன் சாசுதா ,,
56 ஆனைக்கார மார்த்தாண்டேசுவர முடைய நாயனுர் ,,
57 அரசடிக் கந்தன் சாசுதா ,,
58 வீரகேரள பிள்ளையார் ,,
59 ஓணக் கந்தன் சாசுதா ,,
60 கருமேனிக் கந்தன் சாசுதா ,,
61 ஈடானமேடம் பிள்ளையார் ,,
62 புலிமுகத்துக் கந்தன் சாசுதா ,,
63 எருக்களம் காவுடைய கந்தன் சாசுதா ,,
64 வீரநாராயண மங்கலம் ,,
65 இருமுடிசோழ விநாயகர் ,,
66 சூரமுப்பிடாரி அம்மன் ,,

நாகர் கோயில். அகஸ்தீசுவரம்.

67 சுசீந்திரம் ... பெரியது
68 கன்னியா குமரி ,,
69 அகஸ்தீசுவரம் பெரியது
70 மருகனூர் ,,
71 பானம் திட்டா ,,
72 பரக்கை ,,
73 ஏழசரம் ,,
74 வடிவீசுவரம் ,,
75 நாகர் கோயில் ,,
76 தளியல் ,,
77 கிருஷ்ணன் கோயில் ,,
78 பேரம்பலம் ,,
79 தெற்குத் தெருவு குலசேகரப் பெருமாள் ,,
80 ஆசிரமம் கிருஷ்ணசாமி ,,
81 மன்னூதி நங்கம்மன் ,,
82 சங்கரதீர்த்த விஸ்வநாதர் ,,
83 பஞ்சலங்கபுரம் கிருஷ்ணசாமி ,,
84 வடக்கே தெருவு மகாதேவர் ,,
85 அக்கரை மகாதேவர் ,,
86 நரியமாணிக்கேஸ்வர் ,,
87 வலம்புரி விநாயகர் சிறியது
88 ஆறுமுகப் பிள்ளையார் ... ,,
89 கோட்டவிள சாஸ்தா ,,
90 இடர் தீர்த்த பெருமாள் ,,
91 மேலவத்தில் விநாயகர் ,,
92 திருவேங்கிட விண்ணப் பெருமாள் ,,
93 பிரம்மராட்சஸப் பெருமாள் ,,
94 ஆபத்துக்காத்த கந்தன் சாஸ்தா ,,
95 பெரிய பாண்டீச்வரமுடைய நாயனுர் ,,
96 காசி விசுவநாதர் ,,
97 ஆலத்தம்மன் ,,
98 இரவிப்புத்தூர் இரவி விநாயகர் ,,
99 விஷ்ணுபுரம் கிருஷ்ணசாமி ,,
100 வண்ணத்தம் குளம் பூசாஸ்தா ,,
101 கொதிச்ச பிள்ளையகரம் பெருமாள் ,,
102 கொதிச்ச பிள்ளையகரம் சிவன் ,,
103 தெக்குமன் சாட்சி விநாயகர் ,,
104 வீரமார்த்தாண்ட விநாயகர் மிகச்சிறியது

105 அரசடி விநாயகர்	மிகச்சிறியது
106 குலசேகர விநாயகர்	,,
107 கருங்கலி அம்மன்	,,
108 புது கிராமம் பெருமாள்	சிறியது
109 கருப்புக் கோட்டை கைலாச நாதர் ...	,,
110 புரவசேரி பெருமாள்	,,
111 புரவசேரி சிவன்	,,
112 அரசடி கிருஷ்ணசாமி	,,
113 பூசாஸ்த கந்தன் சாஸ்தா	,,
114 வாசுதேவர் கோயில்	,,
115 கொம்மாந்தையம்மன்	,,
116 சோழபுரம்	,,
117 இளக்கோடி கந்தன் சாஸ்தா	மிகச்சிறியது
118 பெருவிளை	சிறியது
119 வேம்பனூர் ...	,,
120 கட்டிமான் கோடு	,,
121 ஸ்ரீமத் துவாரகா	,,
122 பிரம்மசாந்தி கன்னி விநாயக	மிகச்சிறியது
123 சன்னதித் தெரு விசுவநாதர் ...	,,
124 பத்ரகாளி தியாகசுந்தரி	,,
125 கீழத்தெரு விசுவநாதர்	,,
126 குஹ நாதீஸ்வரர்	,,
127 ஊர் முப்பிடாரி	,,
128 பகவதி மடம் பகவதி விநாயகர்	,,
129 மந்தரம் புத்தூர் தாமோதர விநாயகர்	,,
130 மருத்துவ மாலா	சிறியது
131 ஆலத்து பத்திரகாளி ...	,,
132 வழியோடக்காரன்	மிகச்சிறியது
133 இளையநாயனூர் ...	,,
134 கோர்நாடிக் கோரக்கநாதர்	,,
135 மாறுகாதல் கந்தன் சாஸ்தா	,,
136 வலியகோயில் அம்மன்	,,
137 கூருதயக் கந்தன் சாசுதா	,,
138 செம்பகருட்சி அம்மன்	,,
139 பச்சப் பெருமாள் சாசுதா	,,
140 தோடி இசக்கி அமமன்	,,
141 ஊத்துக்குழி கன்னிமார்	,,
142 பூதம் வணங்கும் கந்தன் சாசுதா	,,
143 ஸ்தானு விநாயகர்	,,
144 வெளிகடை மகாதேவர்	,,
145 இசக்கி அம்மன்	,,
146 அண்ணுமலைக் கந்தன் சாசுதா	,,
147 இரவி குலம்	,,
148 தாராமணிக் கந்தன் சாசுதா	,,
149 ராஜக்காமங்கலம் ஆலத்தம்மன்	,,
150 கண்ணக்குறிச்சி சாசுதா	மிகச்சிறியது
151 புதுக்குளம் சாசுதா	,,
152 கிராம விநாயகர்	,,
153 அபிமானம் காத்த விநாயகர்	,,
154 தாழம்குளம் விநாயகர்	,,
155 இசக்கி அம்மன்	,,
156 பூதத்தான்	,,
157 கற்பக விநாயகர்	,,
158 புத்தேரி இரவி விநாயகர்	,,
159 வேலிக்காரன்	,,
160 திருநந்திக்காரன்	பெரியது

பத்மநாபபுரம் கல்குளம்

161 பொனமான ...	,,
162 மணலிக்கரை	,,
163 ராமசாமி கோயில்	,,
164 நீலகண்சாமி கோயில்	,,
165 தேவாக்கோடு	,,
166 ஆலம்பாறை	,,
167 மேலம்கோடு	,,
168 வெள்ளி மலை	,,
169 கேரளபுரம்	,,
170 திருவிதாங் கோடு	,,
171 ஆள்வார் கோயில்	,,
172 மாரத்தண்டுகேசுவரம்	,,
173 மொண்டக்காடு	,,
174 வால்லச்ச கோஷ்டம்	,,
175 ராதாகிருஷ்ணன் கோயில்	,,
176 பத்ரகாளி அம்மன்	சிறியது
177 இசக்கி அம்மன் ...	,,
178 பெருமாள் கோயில்	,,
179 சொரி முத்தய்யன்	,,
180 தம்புரான் கோயில்	பெரியது
181 கூலம் காணி ...	,,
182 கோடியூர்	,,
183 குழிக்கோடு	,,
184 வேணுகோபால கிருஷ்ணன் கோயில்	,,
185 பாலக்கொழி	,,
186 ஆனக்கார சாசுதா	,,
187 மடவிளாகம்	,,
188 சிவகிரி	,,
189 கைலாசத்து மகாதேவர்	,,
190 வெள்ளைப் பிள்ளையார்	,,
191 சுண்ணக்கார சாசுதா	,,
192 காவோக்காடு சாசுதா	,,

193	ஆடவல்லாள் நாயனார்	பெரியது.
194	மைனீந்திர விநாயகர்	,,
195	மணவிளா	,,
196	காரண்டேசுவரம்	,,
197	சேரமங்கலம்	,,
198	தாலக்குளம்	,,
199	திருப்பணியோடு	,,
200	கரிங்கல்	,,
201	திக்காணம்கோடு	,,
202	பாணிபபோகம்	,,
203	காட்டாள	,,
204	ஏதவிள சாசுதா	,,
205	பூமலை	,,
206	கதைப்புறம் சாசுதா	,,
207	எடத்தேரி சாசுதா	,,
208	தாத்தன்கோடு சாசுதா	மிகச் சிறியது
209	மானம்கோடு சாசுதா ...	,,
210	கொட்டாரமடம் பிள்ளையார்	,,
211	ஷண்முக விலாசம் பிள்ளையார்	,,
212	தேரடி பூதத்தான்	,,
213	மாடன் தம்புரான்	,,
214	சன்னதிப் பிள்ளையார்	,,
215	உச்சிப் பிள்ளையார்	,,
216	அழகிய பிள்ளையார்	,,
217	விளவூர் இலங்கம்	,,
218	மரவூர் கோணம் சாசுதா	,,
219	கக்கோட்டாதளா	,,
220	புளியார கந்தன்	,,
221	அலந்தம்மன்	,,
222	சிங்கன காவு	,,
222	காயகுளம்	,,
223	கூத்துமங்கலம்	,,
224	சிரக்கோணம் சாசுதா	,,
225	குலசேகரப் பிள்ளையார்	,,
226	பூதப் பிள்ளையார்	,,
227	செம்மலை	,,
228	தும்பத்து சாசுதா	,,
229	நந்திமங்கலம்	,,
230	அச்சாலீஸ்வரம்	,,
231	உண்டிச்ச மகாதேவர்	,,
232	கூடைத்தூக்கி சாசுதா	,,
233	எடம்பிடிச்ச மகாதேவர்	,,
234	ஆனைக்கார சாசுதா	,,
235	சாரல்கால சாசுதா	,,
236	சுணக்கார சாசுதா	,,
237	மரம் விலக்கி சாசுதா	,,
238	புலிமுகத்து சாசுதா	,,
239	ஆண்டூர் சாசுதா	,,
240	புள்ளையில் சாசுதா	,,
241	கண்டனச்சேரி பகவதி	,,
242	நங்கூர் கிருஷ்ணசாமி	,,
243	மேக்கோடா கொட்டவிளா சாசுதா	,,
244	பன்றியோட்டு தம்பிரான்	,,
245	பன்றியோட்டு உடையார்	,,
246	நார்க்குழி சாசுதா	,,
247	கொல்லன் வில்லா சாசுதா	,,
249	குந்தளா சாசுதா	மிகச் சிறியது
250	செம்பிடாரி அம்மன்	,,
251	புலியூர் குணுச்சி சிவன்	,,
252	வெள்ளிமலை	,,
253	பத்மநாபன் தோப்பு	,,
254	பம்மத்து மூலை	,,
255	முன்பால சாசுதா	,,
256	பொன்னையிர முடையார்	,,
257	கிண்கிணிச் சாசுதா	,,
258	பள்ளிக்கரை சாசுதா	,,
259	எத்தன்காடு	,,
260	அர்த்த கந்தன் சாசுதா	,,
261	ஆபத்துக் கர்த்தார்	,,
262	கரிப்பள்ளி	,,
263	நேத்திரக் கோயில்	,,
264	எருமவிளா	,,
265	ஆலம்பாறை	,,
266	கள்ளெத்தி விலா	,,
267	கோதேசுவரம்	,,
268	கந்தன் சாசுதா	,,
269	பூதமுட்டம்	,,
270	மணலிக்கார இலங்கம்	,,
271	பாறையடி சாசுதா	,,
272	குலஸ்கார சாசுதா	,,
273	ஆரியப்பன்	,,
274	பஞ்சகன்யகா	,,

குழித்துறை.

275	திருவத்தூர்	பெரியது
276	திரிப்பரப்பு ...	,,

விளவன்கோடு

277	குழித்துறை	பெரியது
278	திருமலை	,,
279	பார்த்திபபுரம்	,,
280	நாட்டாளம் விஷ்ணு	,,
281	நாட்டாளம் சிவன்	,,
282	திருவிக்கிரமபுரம்	,,

கல்குளம்

283	தளியல்	சிறியது
284	திருமுரம்பூ	,,
285	பயணம்	,,
286	திப்ரமலை	,,
287	குலசேகரம்	,,
288	சாமுண்டி அம்மன்	,,
289	கேளீசுவரம்	,,

விலவன்கோடு

290 கன்னக்கோடு சிறியது.
291 குலபுரம் ,,
292 பலுகல் ,,
293 செறுவன்னூர் ,,
294 அருவிக்கரை கிருஷ்ணசாமி ,,
295 புதிய காவு ,,
296 பிறக்கோடு ,,
297 அரமந்தம் ,,
298 மேத்து கும்மல் ,,
299 மன்னசேகரம் ,,
300 திரிப்பிளம்கோடு ,,
301 கீரத்தூர் ,,
302 கமுகின்தோட்டம் ,,
303 சித்தாரல் ,,
304 கரிப்பாறை ,,
305 பள்ளியாற ,,
306 எடக்கோடு ,,
307 அடுக்கோடு ,,
308 புளியூர்சாலை ,,
309 கமுகன்னூர் ,,
310 நெல்வேலி ,,
311 மரங்கோடு ,,
312 பக்தப்ரியம் மிகச் சிறியது
313 செம்மருத்தன்காவு ,,
314 முற்றத்துரை மகாதேவர் ,,
315 முத்தாளா கந்தன் சாசுதா ,,
316 மய்யாரத்தாள பகவதி ,,
317 தென்கர கந்தன் சாசுதா ,,
318 ஆலையடி சாசுதா ,,
319 கொட்டவிளா ,,
320 நட்டார்தோட்டம் ,,
321 ராம நல்லூர் ,,
322 செட்டுத் துறை ,,
323 வழுவில் பிள்ளையார் ,,
324 அதிச்சேரி ,,
325 ஜகதீசுவரம் ,,
326 குன்னெல் ,,
327 ஆத்தூர் ,,
328 செருகோன் ,,
329 நான்கொய்கல் ,,
330 கவின்மூலா ,,
331 புன்னக்குழி ,,
332 மூலமூடு ,,
333 மணக்கம்பாரா ,,
334 புளிப்பாரா சாசுதா ,,
335 கிருஷ்ணசாமி ,,
336 எரத்துகொய்கல் ,,
337 கொரங்கன் விலா ,,
338 சோமசிங்கலம் ,,
339 செருமருந்தங்காவு ,,
340 செம்முத்தல் ,,
341 முளகுமூது ,,
342 சிவபாத ,,
343 கரியோடு ,,
344 பொட்டக்காடு மிகச் சிறியது
345 ஆளுவிளா ,,
346 குன்னுவிளா ,,
347 கிணற்றுவிளா ,,
348 காஞ்சீரம்தாரா ,,
349 பரதீசுவரம் ,,
350 கும்பலனமகாவு ,,
351 வெகம்பாடி ,,
352 குருதிவிளா ,,
353 புளியம்தார ,,
354 சம்பிராது ,,
355 குதிரோடு ,,
356 குறிச்சிவிளா ,,
357 வன்னியூர்மலை ,,
358 கீரத்தூர் ,,
359 திட்டச்சல் ,,
360 மிச்சகோம் ,,
361 குறக்கோடு ,,
362 அச்சாலீபுரம் ,,
363 உச்சிமலை ,,
364 முதியன்விளா ,,
365 கோனூர் கோயில் ,,
366 சிறுவள்ளூர் கிருஷ்ணன் ,,
367 சிறுவள்ளூர் சாஸ்த தேவஸ்வம் ,,
368 காஸ்ப குலசேகரநாத சுவாமி பெரியது

செங்கோட்டை

369 அழகிய மணவாளப் பெருமாள் ,,
370 புளியாறை ,,
371 ஏலத்தூர் மதுநாத சுவாமி ,,
372 அயிக்குடி சுப்ரமணிய சுவாமி ,,
373 கீலன்காட் ஜயதக்னீசுவர சுவாமி ,,
374 சம்பவர் வடக்கரை ஸ்ரீ மூலநாதசுவாமி ,,
375 அரிய விநாயகர் சிறியது
376 கிருஷ்ணசுவாமி ,,
377 சுருகி அம்பலம் சிறியது.
378 நடராஜ பெருமாள் ... ,,
379 குத்தால விநாயகர் ,,
380 கலகண்டீஸ்வரம் ,,
381 திருவேங்கட வெண்ணிப் பெருமாள். ,,
382 கிருஷ்ணசாமி ,,
383 அரசாள்வார் ,,
384 பவழக்கோதை அய்யனூர் ,,
385 வேதநாராயணப் பெருமாள் ,,
386 சுந்தரராஜ பெருமாள் ,,
387 குலசேகர விநாயகர் மிகச் சிறியது
388 நித்தியகல்யாணி அம்மன் கோயில் ... ,,
389 செக்கடி விநாயகர் ,,
390 முப்பிடாரி அம்மன் ,,
391 நல்லெடம்பிள்ளை அய்யனூர் ,,
392 மகத்து பூதத்தான் ,,
393 குலசேகர நங்கம்மன் ,,

394 தேரடி மாடன்	மிகச் சிறியது
395 சூலத்துவம் தாயார்	,,
396 குத்தளை விநாயகர்	,,
397 நல்லூர் நங்கை அம்மன்	,,
398 பாண்டனுதீஸ்வரர்	,,
399 காருகுடி வீரகேரள விநாயகர்	,,
400 செல்லடம் பிள்ளை அய்யனுர்	,,
401 பட்டு பூதத்தான்	,,
402 நீலி அம்மன்	,,
403 நீர்குலத்தய்யனுர்	,,
404 தாழக்கல் அய்யனுர்	,,
405 வீரகேரள விநாயகர்	,,
406 ஆதிசூர விநாயகர்	,,
407 தாடிமாடையார் சாசுதா அய்யனுர்	,,
408 தொட்டாச்சி அய்யனுர்	,,
409 மாடஉடையனுர் மணிக்கத்தன் சாசுதா	,,
410 முப்பிடாரி அம்மன்	,,
411 அஞ்சு முத்தய்யனுர்	,,
412 குறவன்பட்டய்யனுர்	,,
413 ஆதிகந்தய்யனுர்	,,
414 உள்கோட்டய்யனுர்	,,
415 மணமுத்தய்யனுர்	,,
416 ஆரியன்காவு சுருகம்பலம்	,,
417 மார்த்தாண்ட விநாயகர்	,,
418 ஆதிமையழகி அய்யனுர்	,,
419 பரத்திமுக விநாயகர்	,,
420 நயினுதாது முடித்த விநாயகர்	,,
421 பேச்சி அம்மன்	,,
422 சுடலைமாடன்	,,
423 கோபுரமுடையார்	,,
424 வழிவேட்டக்காரன்	மிகச் சிறியது
425 அடைக்கலம் காத்த அய்யனுர்	,,
426 சங்கரவிநாயகர்	,,
427 பாயிகோயில்	,,
428 பழவுடையார்	,,
429 சுண்டுகட்டுவிநாயகர்	,,
430 லட்சுமி நாராயணப்பெருமாள்	,,
431 அழகிய நாச்சியம்மன்	,,
432 பனையடியான் சாசுதா	,,
433 செம்பக விநாயகர்	,,
434 பின்னைமாலை சூடும் பெருமாள்	,,
435 படுகுல சாசுதா	,,
436 முப்பிடாரி அம்மன்	,,
437 கருகண்ணி அம்மன்	,,
438 மாட உடையார்	,,
439 ஏலகம்மன்	,,
440 மார்த்தாண்ட விநாயகர்	,,
441 சொக்கலிங்கசாமி	,,
442 கங்கைக்கு வாழ்த்தம்மன்	,,
443 அரசடி விநாயகர்	,,
444 தேரடி விநாயகர்	,,
445 முப்பிடாரி அம்மன்	,,
446 நல்லமங்கர் விநாயகர்	,,
447 பாலவுடையார் சாசுதா	மிகச் சிறியது.
448 சிலையெடுத்தார் சாசுதா	,,
449 தெருவீதி விநாயகர்	,,
450 ஸ்ரீநீலகாந்தி அம்மன்	,,
451 சீலப்பிள்ளையார்	,,
452 துர்க்கை அம்மன்	,,
453 பத்ரகாளி அம்மன்	,,
454 மாடசாமி	,,

ஷெட்யூல் II.

[2 (ix) பிரிவை பார்க்கவும்]

சட்டப்படி இணையாத தேவஸ்வங்களின் பட்டியல்.

தொடரிலக்கமும் தொகுதியின் பெயரும்	தேவஸ்வத்தின் பெயர்
(1)	(2)

1. பூதப்பாண்டித் தொகுதி

1 எதிரவல்லி சோழ விஞயகர், தாழக்குடி.
2 தாழையில் கந்தன் சாசுதா
3 காக்கும் விஞயகர்
4 கன்னிமூல விக்னேசுவரர்
5 பீமநகரி எதிரவல்லி சோழவிஞயகர்
6 தாழக்குடி தேவஸ்வத்தில் உள்ள திருக்கல்யாண நிதி

2. நாகர்கோயில் தொகுதி

7 மறுகாதல் கந்தன் சாஸ்தா தேவஸ்வம்
8 தனுவலிங்கசாமி தேவஸ்வம்
9 காய்கொண்ட விஞயகர் தேவஸ்வம்

3. பத்மநாபபுரம் தொகுதி

10 காப்பியார மகாதேவர் தேவஸ்வம்
11 மாலூர் கந்தன் சாசுதா

4. குழிதுரைத் தொகுதி

12 கோதேஸ்வரம் தேவஸ்வம்
13 பெரிய திருமலை தேவஸ்வத்தில் உள்ள அஷ்டமி சத்ய கட்டளை நிதி.

5. செங்கோட்டைத் தொகுதி

14 ஆய்குடி சுப்ரமண்ய சுவாமி தேவஸ்வம்
15 இலாத்தூர் சுந்தராஜ பெருமாள்
16 புலியாரை ஆர்ய விநயகர்
17 ஆதீனம் காத்தவர்
18 அழகிநாச்சி அம்மன்

ஷெட்யூல் III.

[32-வது பிரிவைப் பார்க்கவும்]

I. கன்னியாகுமரி கோயில்—

1. மேல் சந்தி நியமனம்
2. மேன்மை தங்கிய அரசரின் பிறந்த நாளை முன்னிட்டும் நவராத்திரி மகாநவமியை முன்னிட்டும் வழிபாடு.
3. கன்னியா குமரி கோயிலுக்கு மேன்மை தங்கிய அரசர் வந்த பொழுது தெய்வத்திற்குச் சமர்ப்பித்த காணிக்கைகளும் பரிசுகளும்.
4. மாதாந்திரக் காணிக்கை கொடுத்தல்.
5. மேன்மை தங்கிய மகாராணியின் சார்பில் தின வழிபாடு.

II. சுசீந்திரம் கோயில்—

1. மேன்மை தங்கிய அரசரின் பிறந்த நாளை முன்னிட்டு வழிபாடு.
2. மேன்மைதங்கிய அரசர் கோயிலுக்கு வந்த பொழுது சமர்ப்பித்த காணிக்கைகளும் பரிசுகளும்.
3. மாதக் காணிக்கைகளைக் கொடுத்தல்.
4. கோயில் திருவிழா துவக்கம் பற்றியும் மார்கழி, சித்திரை மாதங்களில் தேரோட்டத்தைப் பற்றியும் தேதி, நேரம் இவற்றை தேவஸ்வம் ஆணையருக்கு அறிவித்தல்.

II. சுசீந்திரம் கோயில்—*தொடர்ச்சி.*

5. மார்கழித் திருவிழாவில் தேரோட்டத்தின் போது தங்கச்சரபள்ளிச் சங்கிலியும் தங்கப் பிறையும் பட்டும் அர்ப்பணித்தலும் அச்சமயத்தில் வாழைப்பழ நைவேத்யம் செய்தலும்.
6. தேரோட்டத்திற்குப்பிறகு தேர் எப்பொழுது நிலைக்கு வருகிறது என்பது பற்றி தேவஸ்வம் அதிகாரிகள் மேன்மைதங்கிய அரசருக்குத் தெரிவித்தல்.
7. சிவராத்திரியின்போது பூஜை, பிரார்த்தனைகள், வழிபாடுகள் முதலியன.

III. திருவட்டர் கோயில்—

1. பெரிய நம்பி, இதர ஊழியர்கள் நியமனம்.
2. மேன்மை தங்கிய அரசரின் பிறந்த நாளை முன்னிட்டு வழிபாடும் புஷ்பாஞ்சலியும்
3. கோயிலில் பேரிந்திரம் ருது பூஜைக்காக தெய்வத்திற்கு அர்ப்பணிப்பதற்காக பட்டின் விலையைச் செலுத்துவதன்பேரில் தேவஸ்வம்முக்கு பட்டு வழங்குதல்.
4. கோவில் திருவிழாக்களின்போது மேன்மை தங்கிய அரசரின் பிரதிநிதியாக அமுந்துருத்தப் போதியைக் கோயிலுக்கு அனுப்புதல்.

IV. மண்டக்காடு கோயில்—

ஆண்டு தோறும் கும்ப மாதத்தில் கோடை விழா குறித்து கோயிலுக்குப் பட்டு வழங்குதலும்; கலச வழிபாடு நடத்தலும்.

V. வடிவீஸ்வரம் கோயில்—

1. மேன்மை தங்கிய அரசரின் பிறந்த நாளை முன்னிட்டு வழிபாடு செய்தல்.
2. முறைஜபம் குறித்து அரவணை பாயசம் வழிபாடு.

VI. நீலக்கந்தஸ்வாமி, ஆனந்தவல்லி அம்மன் கோயில், கல்குளம்—

1. மேன்மை தங்கிய அரசரின் பிறந்த நாளை முன்னிட்டு வழிபாடு.

2. நவராத்திரியை முன்னிட்டு ஆனந்தவல்லி அம்மனுக்கு (முழுகாப்பு) வழிபாடு.

3. ஆண்டுத் திருவிழாவை முன்னிட்டு பட்டு காணிக்கையாகக் கொடுத்தல்.

4. மாதாந்திரக் காணிக்கையைச் செலுத்துதல்.

VII. இராமஸ்வாமி கோயில், கல்குளம்—

1. மேன்மைதங்கிய அரசரின் பிறந்த நாளை முன்னிட்டு வழிபாடு.

2. மாதாந்திரக் காணிக்கையைச் செலுத்துதல்.

VIII. கோட்டைக் காக்கும் குலசேகரப் பெருமாள் கோயில், கல்குளம்—

மேன்மை தங்கிய அரசரின் பிறந்தநாளை முன்னிட்டு வழிபாடு.

IX. வெளிமலைக் கோயில்—

1. திருக்கல்யாணம், மகா நவமி திருவிழாவை முன்னிட்டுத் தெய்வத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக பட்டு அர்ப்பணித்தல் (இப்போது பட்டுக்குப் பதிலாக அதற்குரிய தொகை செலுத்தப்படுகிறது).

2. மாதாந்திரக் காணிக்கை செலுத்துதல்.

X. திருஅனந்த ஆள்வார் கோயில், நாகர் கோயில்—

மேன்மை தங்கிய அரசர் கோயிலுக்கு வந்த போது அர்ப்பணித்த காணிக்கைகளும் பட்டும்.

XI. திருமலை கோயில்—

1. முறைஜபத்தின்போது திருமலை தேவஸ்வத்தில் வழிபாடு

2. சிவராத்திரியின்போது கிரீடதார வழிபாடு. கிரீடதாரம் திருமலை கோயிலில் ஆரம்பமாகி ஆண்டுதோறும் வரிசைப்படி அடியிற் கண்ட கோயில்களில் நடைபெறும். (1) திருமலை, (2) திரிகுரிச்சி, (3) திருப்பரப்பு, (4) திருநந்திக்கரை, (5) பொன்மனை, (6) பந்திபாகம், (7) கல்குளம், (8) மேலம்கோடு, (9) திருவிதாங்கோடு, (10) திருவிடக்கோடு, (11) திருப்பத்தியோடு, (12) நாட்டாளம். பன்னிரண்டாவது ஆண்டில் கிரீடதார (கூட்டு தாரா) நாட்டாளம் கோயிலில் நடத்தப்படுகிறது. இந்தத் திருவிழாவை நடத்துவதற்காக அரண்மனையிலிருந்து ஊரு மடத்திலிருந்து ஒரு போத்தி ஒவ்வொரு கோயிலுக்கும் அனுப்பப்படுகிறார்.

XII. திருப்பரப்பு தேவஸ்வம்.

மார்கழி மாதத்தில் திருவாதிரை குறித்து வழிபாடு.

XIII. திருப்பதீஸ்வரம், திருஆள்வார் ஸ்வாமி கோயில்—

1. மாதாந்திரக் காணிக்கை செலுத்துதல்.

2. மேன்மை தங்கிய அரசரின் பிறந்த நாளை முன்னிட்டு வழிபாடு.

XIV. தேரவனை கிருஷ்ணஸ்வாமி கோயில்—

மேன்மை தங்கிய அரசர் கோயிலுக்கு வரும் போது அர்ப்பணிக்கப்படும் காணிக்கை

XV. மேலம்கோடு அம்மன் கோயில்—

மேன்மை தங்கிய அரசர் கோயிலுக்கு வரும் போது அர்ப்பணிக்கப்படும் காணிக்கை.

XVI. மதுஸூதனப் பெருமாள் கோயில், பரக்கை—

1. மேன்மை தங்கிய அரசர் கோயிலுக்கு வரும் போது அர்ப்பணிக்கப்படும் காணிக்கை.

2. மேன்மை தங்கிய அரசரின் பிறந்தநாளை முன்னிட்டு காணிக்கை.

XVII. பெருவிளை தேவஸ்வம், நாகர்கோயில்—

மேன்மை தங்கிய அரசரின் பிறந்தநாளை முன்னிட்டு வழிபாடு.

XVIII. புரவஸ்ஸேரி தேவஸ்வம்—

மேன்மை தங்கிய அரசரின் பிறந்தநாளை முன்னிட்டு வழிபாடு.

XIX. கல்குளம் பாலசுப்ரமண்ய ஸ்வாமி கோயில்—

மேன்மை தங்கிய அரசரின் பிறந்த நாளை முன்னிட்டு வழிபாடு.

XX. நவராத்திரி பூஜை (திருவனந்தபுரம் அரண்மனையில்)—

ஒவ்வோர் ஆண்டும் அரண்மனை நிச்சயிக்கிற தேதியன்றும் நேரத்திலும் பத்மநாபபுரம் அரண்மனையிலிருந்து சரசுவதி அம்மனும் வெளிமலையிலிருந்து சுப்ரமண்ய சுவாமியும் சுசீந்திரத்திலிருந்து முன்னுதித்த நங்கை அம்மனும் திருவனந்தபுரத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அரண்மனையில் பூஜை முதலியவை நடைபெற்றபின் விஜய தசமிக்குப் பிறகு அவர்கள் திரும்ப எடுத்துச் செல்லப்படுகின்றனர். இது குறித்த ஏற்பாடுகள் அரசாங்கத் தலைமைச் செயலாளராலும் தேவஸ்வம் ஆணையராலும் செய்யப்படுகின்றன.

XXI. நாஞ்சில் நாட்டுக் கோயில்கள்—

இக் கோயில்கள் அனைவற்றிலும் நிறை, புதரை நடத்தல், கோயில் நிலங்களில் விதை விதைப்பதற்கான தேதியை நிச்சயித்தல்.

(கவர்னர் அவர்களின் ஆணைப்படி)

K. S. பழனிசாமி,
அரசாங்கச் செயலாளர், சட்டத் துறை.

கன்னியாகுமரி மாவட்ட அறநிலையச் சட்டம் முற்றிற்று.